

உன்னை
விரும்பினேன்
உயிரே...
ஆர்.மகேஸ்வரி
உன்னை
விரும்பினேன்
உயிரே...
ஆர்.மகேஸ்வ

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : உன்னை விரும்பினேன் உயிரே... |
| ஆசிரியர் | : ஆர்.மகேஸ்வரி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : டிசம்பர், 2007 |
| மொழி | : தமிழ் |
| ளின் தன்மை | : 11.5 K.g. வெள்ளைத் தாள் |
| லின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| ச்சு எழுத்து | : 11 புள்ளி |
| ாத்தப் பக்கங்கள் | : 176 |
| ண்டிங் | : சாதா அட்டை |
| வெளியிடுவோர் | : தேவி வெளியீடு<br>தபால் பெட்டி எண்: 668,<br>23/11, காசிம் சாகிப் தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |
| ணி அச்சு | : வேலன் லேசர் ☏:94441-01753 |
| ட்டோர் | : கே.வி.எஸ்.ஆப்செட்,<br>சென்னை-14. ☏:28480166 |

**விலை: ரூ.60.00**


# உன்னை விரும்பினேன் உயிரே...

# பதிப்புரை

குடும்பப் பாங்கான நாவல்கள் எழுதுவதிலே வல்லவர்களாகத் திகழ்பவர்கள் சிலர். அந்தக் குறிப்பிடத் தக்கவர்களில் ஒருவராக வரவேண்டும் என்ற துடிப்புடையவர் திருமதி. ஆர்.மகேஸ்வரி அவர்கள்.

பிரபலமான பத்திரிகைகளில் எழுதிப் புகழ் பெற்று வருகிறார். இவரது நாவல்கள் புத்தகமாக வருவது இதுவே முதல். தேவி வெளியீடு மூலம் அறிமுகப்படுத்திய பலரும் தமிழ் கூறும் நல்லுலகம் வெகுவாகப் பாராட்டிப் புகழப்படுகிறார்கள். அந்த வரிசையில் திருமதி. ஆர்.மகேஸ்வரி வருவார் என்பது நிச்சயம்.

அற்புதமான நிகழ்வுகளை வைத்து அருமையாகக் கதை எழுதியுள்ளார். படித்துப் பாராட்டுக்களைத் தெரிவியுங்கள்.

- பதிப்பகத்தார்

# உன்னை விரும்பினேன் உயிரே...

## 1

மலைகளின் ராணியான அழகான ஊட்டி!

டிசம்பர் மாதத்து குளிரால்... பச்சைப் போர்வையை இழுத்து மேனியெங்கும் போர்த்தியிருந்தும்... கடுங்குளிர் வாட்டி வதைக்க... மாப்பிள்ளையின் வரவுக்காய் காத்திருக்கும் பெண் வீட்டார்போல... பனியில் குளித்து... ஆர்வமாய்... வழிமேல் விழிவைத்து... சூரியனின் வருகைக்காய்... காத்திருந்த... அழகான இளம் காலைப் பொழுது!

அழகான கௌதம் விழித்து எழுந்தான்.

மாநிறம். ஆறடிக்கு மேலான நெடுநெடு உயரம். காந்தமாய் கவரும் அழகான கண்கள். எந்த நேரமும்

புன்னகைத் தவழும் உதடுகள். உதட்டுக்கு மேலே அடர்த்தியான கருகரு மீசை கூடுதல் வசீகரம்.

எதிரில் வரும் எந்தப் பெண்ணையும் அசர அடிக்கும் அழகு! எவருமே திரும்பித் திரும்பிப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விடாமல் போகமாட்டார்கள்.

தலைக்கு மேலே இருந்த ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னையின் படத்தை எடுத்து வணங்கினான். பெட்டியில் வைத்து மூடினான்.

கண்மூடி தியானம் செய்தான். எழுந்தான்.

மனதிற்கு புத்துணர்ச்சி கிடைக்க... கொஞ்ச நேரத்தில் குளித்தான். அதே ஹோட்டலில் பேருக்காய் உணவு உண்டு விட்டு... பையை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

மக்கள் அனைவரும் தங்கள் உடைகளுக்கு மேலே... ஸ்வெட்டரும், தலைக்கு மங்கி குல்லாவும் அணிந்து... குளிரை பெரிது படுத்தாமல்... அவரவர் வேலைகளைப் பார்க்க... அவசர அவசரமாய் ஓடினார்கள்.

கௌதமும் நடந்தான். கொஞ்சம் உயர்வான இடத்தில் இருந்த... முருகப் பெருமானின் ஆலயத்தில்... கந்தர் சஷ்டி கவசம் ஒலிக்க... மக்கள் சிலர் மேலே செல்ல... அவனும் ஆர்வம் வந்து மேடு ஏறிப் போனான்.

அழகின் இலக்கணமாய் திகழும் சம்யுக்தா முருகனை வணங்கிவிட்டு திரும்பிக் கொண்டிருந்தாள்.

அழகிய வதனத்தில் மீனாய் துள்ளும் இரு நீண்ட நயனங்களும்... ரோஜாவைப் பிய்த்து ஒட்ட வைத்தாற் போன்ற பட்டு உதடுகளும்... கதுப்பு கன்னங்களும்... குண்டு முகமும்... நீள முடியை கொண்டையாய் சுற்றிக்



கொண்டு... இழுத்து போர்த்திய சேலையோடு... பொய்யோ எனும் இடையால்... மெல்ல மெல்ல பார்த்துத்தான் இறங்கினாள்.

ஆனாலும், சரிவில் சேலை சிக்கி, தடுக்கி, தடுமாறி விழப்போனவளை... இரு வலிமையான கரங்கள்... தாங்கி, அணைத்துப் பிடித்தாற்போல நிறுத்தியது.

அந்த நீண்ட நயனங்களில் அதிர்ச்சி!

காரணம்?

அந்த ஆடவனின் கரம் அவளின் இளம் வயிற்றில் ஒன்றும், தோளில் ஒன்றும் பதிந்து இருந்தது. இருவர் உடலும் உரசிக் கொண்டு அருகருகே!

முகமும் முகமும் உரசினாற் போன்று... இல்லையில்லை அந்த அடர்ந்த மீசை... அவளின் பட்டுக் கன்னத்தில் உரசி குறுகுறுக்க வைத்ததா? அல்லது பிரமையா?

சட்டென்று தீப்பற்றிக் கொண்டாற் போன்ற உணர்வு இருவர் உடலிலும்!

சம்யுக்தா விழிவிரிய அவனை நோக்க...

கௌதம்... சம்யுக்தாவின் அகன்ற விழிக்கடலில்... சட்டென்று விழுந்து விட்டான்.

இனி, எழவே முடியாத அளவு புதைந்து விட்டாற் போல... ஒரு தடுமாற்றம் அவனை ஆட்கொண்டது.

மெய்சிலிர்க்க... மேனி சிலிர்க்க... அவளை விடவே மனசில்லாதவனாய்... அந்த பூந்தென்றலை தூக்கி நேராய் நிறுத்தினான்.

"என்னங்க பார்த்து வரக்கூடாதா? நான் பிடிக்கலேன்னா என்ன ஆகியிருக்கும்? மண்டை உடைஞ்சி

இருக்கும்! நீங்க விழ இருந்த வேகத்துக்கு... நான் தாங்கி நிக்கலேன்னா... சினிமா நாயகன், நாயகி போல விழுந்து... மேடு பள்ளங்களில் உருண்டு... மக்களுக்கு இலவசமாய் ஷூட்டிங் பார்க்க வழிவகை செய்து கொடுத்திருப்பீங்க!'' என்று கூறிவிட்டு கௌதம் மென்மையாய் புன்னகைக்க...

''ஏய் மிஸ்டர்... உங்களை யார் தாங்கி பிடிக்கச் சொன்னது?'' கோபத்தில் முகம் சிவந்து கத்தினாள்.

''பிடிக்கலேன்னால் விழுந்து வாரியிருப்பீங்க!''

''ஒன்னும் செத்துட மாட்டேன்! கோவிலுக்கு வந்தோமா... சாமியை கும்பிட்டோமான்னு போகாமல்... பெரிய ஹீரோ தனம் காட்டறீங்களா?'' சம்யுக்தா எரிமலையாய் பொங்கினாள்.

''என்ன மேடம்... என்மேல் பழியை சுமத்தறீங்க! உதவினது தப்பா...?'' கௌதம் அப்பாவியாய் கேட்க...

''உதவறாப்போல என்னை அங்கங்க தவறான இடத்துல தொட்டதுதான் தப்பு!'' சம்யுக்தா குற்றம் சாட்ட விதிர் விதிர்த்துப் போனான். பின் சுதாகரித்து...

''ஐய்யோ... என்னைப் பற்றி எவ்வளவு நல்ல நினைப்பு! அழகான கணிப்பு! பாராட்ட சட்டுன்னு வார்த்தையே கிடைக்கல மேடம்!'' கேலியாய் கூறி நகைக்க...

''என்ன நக்கலா?'' சீறினாள்.

''கோபத்துல ரொம்பத்தான் அழகா தெரியறீங்க! நான் உங்களைத் தாங்கிப் பிடித்தது தப்புன்னு உங்களுக்குத் தோணினால் தப்பாவே வச்சிக்கங்க! அதுக்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன்! மன்னிப்பீங்களா?'' சொல்லிவிட்டு ஒரு கை மடக்கி, தலையை குனிந்து, நக்கலாய் வணங்கிவிட்டு செல்ல...



''பொறுக்கி ராஸ்கல்...!'' அவள் கடித்த பற்களினூடேயே துப்பிய வார்த்தையைக் கேட்டு... சிரித்துக் கொண்டே போனான்.

''நல்ல முகத்துல முழிச்சி... திட்டு வாங்கிகிட்டுப் போறேன்! அந்த வேலை கிடைச்சா மாறித்தான்!'' அவனும் முணுமுணுத்துச் சென்றான்.

அவன் இதயம் இடமாறியது போல உணர்ந்தான்.

இதுவரை எந்தப் பெண்ணையும் சுவாரசியமாய் ஏறெடுத்துப் பாராதவன்... மீண்டும் நின்று... அவள் போவதையே வைத்த விழி எடுக்காமல்... ஸ்பரிசித்துக் கொண்டிருந்தான்.

அவனைக் கேளாமலேயே அவன் மனசு கள்ளத்தனமாய்... அவள் பின்னே சென்றது.

இத்தனை அழகும், கம்பீரமும், அடக்கமும் கொண்ட பெண்... தன்னை தவறாய் கணித்து... புயலாய் தாக்கி விட்டுச் சென்றதுதான் மனசுக்கு வேதனையாய் இருந்தது.

'அந்த அழகியை மீண்டும் காண்பேனா?'

'எதுக்கு காணவேண்டும்?' மனம் கேட்டது.

'என் மனதை அள்ளிக் கொண்டு போய் விட்டாளே!'

'மடையா... எவளாவது புதிதாய் ஒருத்தியை பார்த்த உடனே... இதுபோல பைத்தியமாய் உளறுவானா? என்ன வேலையாய் வந்து... ஒரு பெண்ணை ஆராயச் சென்று விட்டாய்! போ... போ... இண்டர்வியூக்கு நேரமாகவில்லையா?'

கடவுளிடம் மனமுருக வேண்டினான்.

'அந்தப் பெண்ணை நான் மீண்டும் பார்ப்பேனா?'

'வேலைக் கிடைக்க வேண்டுவதை விட்டுவிட்டு...' மனம் அவன் தாடையில் இடித்தது.

'அந்த அழகான பூங்கொத்தை மீண்டும் அள்ளி அணைத்துக் கொள்வேனா?'

'பைத்தியமா கௌதம் நீ?' மனம் சாடியது.

'என்னை சலனப்படுத்திய சாதனைக்காரியை... நான் சந்திக்க வேண்டும், கடவுளே!'

'முத்திப்போச்சு! நடு மண்டையில நாலு எலுமிச்சை பழம் தேய்ச்சி குளிச்சாத்தான் சரிப்படும்!'

அவன் அவள் நினைவுகளோடே... சஞ்சரித்துக் கொண்டு... அந்த மிகப் பிரமாண்டமான கட்டிடத்தை அடைந்தான்.

அந்தப் பெரிய கட்டிடம் அவனை மிரட்டியது.

கௌதம் உள்ளே நுழைய... ஒரு அழகிய குட்டித் தீவுக்குள் வந்துவிட்ட உணர்வு!

அழகான பாதை!

பாதையின் இருபுறமும் வெள்ளையும், சிவப்புமாய் சிரிக்கும் ரோஜாக்கள்... அவனுக்கு உற்சாகமாய், சந்தோசமாய் தலையாட்டி வரவேற்றது.

புல்வெளிகள் நடுவே செயற்கையான நீரூற்றுக்களும், அருவிகளும் சலசலத்து ஓடியது.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு நுழைய... தரையிலும், சுவற்றிலும் அவன் உருவம் அழகாய் தெரிந்தது. சுவரில் தெரிந்த பிம்பத்தைப் பார்த்து... சீப்பு எடுத்து அவசர அவசரமாய் தலையை சீவிக் கொண்டான்.

எங்கும் சுத்தம், சுகாதாரம், அழகு என்று பார்த்து பார்த்து பராமரிக்கப்பட்ட கட்டிடம்! லிப்ட் மூலம் நான்காவது தளம் சென்றான்.



ஏற்கனவே, நிறைய இளைஞர்கள்... விதவிதமான ஆடைகளிலும், ஹேர் ஸ்டைலிலும் கலக்கிக் கொண்டிருந்தனர். கௌதம் மட்டும் சிம்பிளாய் இருந்தான்.

'என்ன இது புதுப்பட ஹீரோ எதுனா தேர்ந்தெடுக்கிறார்களா? இத்தனை கவர்ச்சியாய், அசத்தலாய் உடையணிந்து... தலைமுடி, மீசையை க்ரீம் கொண்டு ட்ரிம் செய்து... பளபளக்கிறார்களே!' என்று நினைத்தவாறு அமர்ந்தான்.

ஊட்டியை விட்டு சற்று தள்ளி இருந்தது அந்த இடம்! சம்யுக்தா டீ, காபி எஸ்டேட், அங்கே விளையும் டீ, காபியை பதப்படுத்தி, தூளாய் தயாரித்து, பாக்கிங் பண்ணி, உள்நாடு, வெளிநாடு என விற்பனை செய்யும் விற்பனையகம், ஒருபுறம், ரிசார்ட் ஒருபுறம் என்று பெரிய இடத்தையே வளைத்து வர்த்தகம் செய்து கொண்டிருக்கிறது சம்யுக்தா கம்பெனி! இக்கம்பெனியின் விளம்பரம் பார்த்து... கௌதம் விண்ணப்பிக்க... இண்டர்வியூ கார்டு வர... கௌதம் புதுச்சேரியிலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறான்.

ஒவ்வொருவரும் போன வேகத்தில் வர... கடைசியாய் இவன் அழைக்கப்பட்டான்.

''மே ஐ கமின் சார்!'' என்று கேட்டுவிட்டு உள்ளே நுழைந்தவனுக்கு அதிர்ச்சியோடு ஆனந்தமும் சேர்ந்து கூத்தாடியது.

காரணம், கோவிலில் தடுக்கி அவன் மேல் விழுந்த தேவதை! அந்த தேவதை ஒரு குட்டி பூந்தோட்டமாய் அமர்ந்திருக்க... அவனுக்கு இருபுறமும் இரு வயதானவர்கள் இருந்தனர்.

அவளும் இவனைக் கண்டு முதலில் அதிர்ந்து... பின் கண்களை மலர்த்தி ஆச்சரியத்தைக் காட்டினாள்.

'அட முருகா... நீ நிச்சயமாவே சக்தி உள்ள கடவுள் தாம்பா! இனி இவளைப் பார்ப்பேனான்னு ஏங்கியவனுக்கு அடுத்த அரைமணி நேரத்தில்... அவள் தரிசனம் கொடுத்து விட்டாயே! தேங்காட்!'

சம்யுக்தா கைநீட்டி அமரச் சொன்னாள்.

அவள் பைல் வாங்கி ஒவ்வொரு பக்கமாய் திருப்பிப் பார்த்து... திருப்தி உற்றவளாய்... சில கேள்விகள் கேட்க... அவன் அருமையாய் பதில் சொன்னான்.

அந்த இரு வயசாளிகளும் அவனை கேள்வி கேட்டு தலைகீழாய் புரட்டி போட்டுவிட... கௌதமும் சளைக்காமல் புன்னகையினூடே பதில் சொல்ல...

அந்த தேவதையின் கண்களில் திருப்தி தெரிய... அவனுக்கு நம்பிக்கை பிறந்தது.

"இங்க பார் தம்பி ஒரே இடத்துல வெயில் படாமல் நிழல்ல உட்கார்ந்து பார்க்கற வேலையில்லே இது! எங்க சம்யுக்தா அம்மா எஸ்டேட், ரிசார்ட், தூரத்துல இருக்க செர்ரி தோட்டம், ஸ்ட்ராபெரி தோட்டம்னு மேற்பார்வை பார்க்க புறப்படுவாங்க! நீங்களும் பின்னாடியே போகணும்! சில சமயம் பேண்டைக்கூட அடியில மடிச்சிவிட்டு காபி தோட்டத்திலும், டீ தோட்டத்திலும் நுழையணும்!

"எங்க சம்யுக்தா அம்மா வர்த்தகம் தொடர்பா கொல்கத்தா, மும்பை, சென்னைன்னு போனால் கூடவே போகணும்!

"சில சமயம் வெளிநாடுகூட போக வேண்டி வரும். இத்தனை நாளும் நான் பார்த்துட்டேன்! வயசாக ஆக



அம்மாவோட சுறுசுறுப்பு வேகத்துக்கு என்னால அலைய முடியலை! அதுவுமில்லாமல் உடம்புல எக்கச்சக்க நோய்! பயணம் இப்போ ஒத்துக்கல. ரெண்டு பேரை இதுக்கு முன்பு இந்த வேலையில் அமர்த்தினோம். அவர்கள் பின்னங்கால் பிடறியில் இடிபட ஓட்டம் பிடிச்சிட்டா ணுங்க! பி.ஏ.ன்னா பொம்பளைங்களத்தானே போடு வாங்க... இங்க என்ன ஆம்பளைங்களைத் தேர்ந்தெடுக் கறாங்கன்னு உங்களுக்கு ஆச்சரியம் ஏற்படலாம்! ஆனால் எங்க சம்யுக்தா அம்மாவுக்கு பெண்களால் எப்படி பாதுகாப்பு கிடைக்கும்? வெளியூர்ல எல்லாம் தங்க ணுமே! அதனாலத்தான் நல்ல திடகாத்திரமா இருக்க உன்னை தேர்ந்தெடுத்து இருக்கோம்!" வலது பக்கம் இருந்த பாண்டியன் சார் கூறினார்.

"நல்ல சம்பளம்! நல்ல வேலை! எங்க ரிசார்ட்லயே தங்கிக்கலாம். உனக்குப் பிடிச்சிருந்தா ஜாயின் பண்ண லாம். எல்லோரையும் பார்க்கப் பொறுக்கி மாதிரி இருந்தது. நீதான் பொறுப்பா தெரிகிறாய்!" என்று இடது பக்கம் இருந்த நாகராஜன் சார் கூறினார்.

'அடக்கடவுளே... உங்க முதலாளியம்மா கொஞ்ச நேரத்துக்கு முன்பு பொறுக்கின்னு திட்டினாளே! உங்க கண்ணுல கோளாறா? அல்லது இவள் கண்ணில் கோளாறா?' கேட்க நினைத்த கௌதம் மீண்டும் வாயை மூடிக் கொண்டான்.

"என்ன வேலையில் சேரும் எண்ணமிருக்கா?"

"அழகான பெண்ணோட வேலை பார்க்கும் பாக்கியம் எத்தனைப் பேருக்கு வாய்க்கும்? ம்? என்ன சார் நான் இந்த வாய்ப்பை நழுவவிடுவேனா...?" கௌதம் சம்யுக்தாவைப் பார்த்து கூற...

"தம்பி... நீங்க பேசறது சரியில்லே!"

"வெளியூர், வெளிநாடு பயணம்... கரும்பைக் கொடுத்து திங்க கூலியும் கொடுக்கறாப்போல இருக்கு!"

"தம்பி சரியான குறும்புக்காரனா இருப்ப போலத் தெரியுது!" என்று கூறி பாண்டியன் சிரித்தார்.

சம்யுக்தா எரிமலையாய் கௌதமைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இந்த தேவதையை திரும்பவும் தரிசிப்பேனான்னு சஞ்சலப்பட்டுட்டு இருந்தேங்க! இவ்ளோ சீக்கிரம் தரிசிப்பேன்! உங்ககிட்டவே வேலை கிடைச்சி... வேலை பார்ப்பேன்னு நினைச்சிகூடப் பார்க்கலங்க!"

விவரிக்க முடியாத சந்தோசத்துடன்... தைரியமாய்... ஆண்மையுடன் கூறிய அவனையே விழி அகற்றாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க! ஒண்ணுதான் மைனசா தெரியுது!"

அவள் புரியாமல் பார்க்க...

"விதவிதமா எத்தனை ரோஜா மலர்ந்து இருக்கு! அதுல ஒண்ணைப் பறிச்சி... காதோரம் செருகிகிட்டா... இன்னும் அம்சமா இருக்கும்!"

முகத்துக்கு நேராக தாக்கிய புகழ்ச்சிக்கு மயங்கப் போனவள், சுதாகரித்து கத்தினாள். "வாட் நான்சென்ஸ் யுவர் டாக்கிங்!"

"மனசுல எதுவுமே வச்சிக்கத் தெரியாது மேடம்! என்னது ஒப்பன் ஹார்ட்!" அவன் கன்னத்தில் குழி விழ சிரிக்க...



'இத்தனை அழகாய் சிரிக்க ஒரு ஆண் மகனுக்கு தெரியுமா?' அவள் இதுவரை இந்த அளவு கவர்ச்சியாய் சிரித்து யாரையும் பார்த்ததில்லை.

"என்ன அப்படி பார்க்கறீங்க...? நீங்களும் விழுந்துட்டீங்களா?"

"எங்கே?" ஆச்சரியமாய் கேட்க...

"என் கன்னக்குழியில! என்னைப் பார்க்கற ஒவ்வொரு பெண்ணும் செய்யற முதல் வேலை இதுதான்!" சீரியஸாய் முகத்தை வைத்துக் கொண்டு சொல்ல...

சட்டென்று சிரித்தாள். வாய்விட்டுச் சிரித்தாள்.

ஒரு பூ அழகாய் மொட்டவிழ்ந்து மலர்வதுபோல மலர்ந்தாள்.

கண்ணோர சுருக்கமும், உதடு சுழிப்பும் கூடுதல் கவர்ச்சி! சம்யுக்தா ஆழ்ந்து சிரிக்க... கண்களில் கண்ணீர் கூட துளிர்த்தது.

அவள் சிரிப்பதை ரசனையுடன் நோக்கினர், அந்த இருவரும்! காணாததைக் கண்டதுபோல அவர்களின் முகத்தில் ஆச்சரியத்தின் பிரதிபலிப்பு!

அவர்கள் இருவரையும் விழிகளால் கௌதம் நோக்க... நன்றியுடன் பார்த்து சொன்னார்கள்.

"இத்தனை நாளும் வாய்விட்டு... மனம் விட்டு சிரிக்காத மகராசியை சிரிக்க வச்சிட்டையே! நிஜமாவே நீ திறமைசாலிதான்! இந்த கோலத்துல எங்க பெரிய்யா... சின்னம்மாவைப் பார்த்தார்ன்னா... எவ்வளவு சந்தோசப் படுவார். இதுக்காகவே உனக்கு சம்பளத்தைக் கூட்டிக் கொடுப்பார் தம்பி!" என்று நிஜமான உருகலுடன் சொல்ல...

"என்ன சார்... முன்ன பின்ன தெரியாதவங்க கிட்ட என்ன உளறல்?" அதட்டினாள், அந்த அல்லிராணி.

இருவரும் வாயை கம் போட்டு மூடிக் கொண்டது போல மூடிக்கொண்டனர்.

"வேலை பார்த்த முன் அனுபவம் இருக்கா...?"

"ம்...!"

"எத்தனை வருடம்?"

"படிச்சி முடிச்சதிலிருந்தே! கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள்!

"அந்த வேலையை ரிசைன் பண்ணிட்டு இங்கே வர விருப்பமா?"

"ஓ... யெஸ்!"

"ஏனால்?"

"நல்ல சம்பளம்! நல்ல வேலை! உங்களைப் போல பெங்கிட்ட சுறுசுறுப்பா... விறுவிறுப்பா... வேலை பார்க்கவும் ஆசை! ஏன்னா என் இப்போதைய எம்.டிக்கு ஐம்பது வயதுக்கு மேல்! எதுனா வேலையை முடிச்சி எடுத்துப் போனால்... 'அதுக்குள்ள முடிச்சட்டையான்னு' சலிச்சுப்பார்!"

"அடுத்தநா புதுச்சேரி போரா அடிச்சிடிச்சி! மணம் ஆகாத முதிர்கன்னிகளுக்கு தாய்வீடு போரடிக்குமில்லையா? அதுபோல! ஊட்டியில காலடி எடுத்து வைத்ததும்... ஒரு பரவசம்! அந்த முதிர்கன்னிகள் மணமாகி மாமியார் வீடு போனால்... எப்படி ஒரு சுவாரசியம் வரும். அதுப்போல!"

மீண்டும் சம்யுக்தா அவன் பேச்சை ரசித்து சிரித்தாள்.



"அடுத்தநா சார்ங்க ரெண்டு பேரும்... உங்களை சிரிக்க வைத்து சந்தோசப்படுத்தினால்... உங்கப்பா நிறைய சம்பளம் கூட்டிக் கொடுப்பார்ன்னு சொன்னது வேற... ஆசையைத் தூண்டி விட்டுடிச்சி! கைவசம் நிறைய ஜோக்ஸ் வச்சிருக்கேன்!" அவன் சிரிக்காமல் சீரியஸாய் சொல்ல...

மீண்டும் மல்லிகையாய் மலர்ந்தாள்.

"கைவசம் சில 'ஏ' ஜோக்ஸ்கூட இருக்கு! அது உங்களுக்கு மட்டுமே! உங்க காதில் மட்டுமே சொல்வேன்!"

கௌதம் அதிகமாய் உரிமை எடுத்து அவளிடம் வர... சட்டென்று சூடானாள்.

"ஏய் மிஸ்டர்... வாட்ஸ் ராங்? திஸ் ஈஸ் டூ மச்!"

"அடடா... கோபத்துல உங்க முகச்சிவப்பு சூப்பர்! உங்க கண்ணுலயும், கன்னத்துலயும் பூக்கற முகச் சிவப்பை... குங்குமம்ன்னு நினைச்சி... யார்ன்னா தொட்டு நெற்றியில வச்சிக்கப் போறாங்க!"

அவன் புகழ... அவள் வெட்கினாள்.

'சரியான வம்புக்காரனா இருக்கானே! நானா? நானா இது? என் கவலைகளையெல்லாம் மறந்து சிரிப்பது நானா? என்னையே சிரிக்க வைக்கிறான் என்றால் பெரிய சாகசக்காரன்தான்!' அவனைப் பார்வையால் மெச்சி சொன்னாள்.

"வேலைன்னு வந்துட்டா நான் கண்டிப்பானவள்! என்கிட்ட சமீபமா சேர்ந்த இருவரும்... வேலை செய்ய முடியாமல் ஓடியிருக்காங்க!"

"அப்படியா...? நான் நூறுமீட்டர்ல ஓடறேனா? இருநூறு மீட்டர்ல ஓடறேனா? இல்ல ஆயிரம் மீட்டர்ல ஓடறேனா? அப்படின்னு நீங்க பார்க்கணும்! அதானே உங்க ஆசை!"

சம்யுக்தா மீண்டும் சிரிப்பை அடக்கிச் சொன்னாள்.

"மிஸ்டர் கௌதம்... ப்ளீஸ் பீ சீரியஸ்! எனக்கு இந்த கேலி, கிண்டல், அலட்சியம் எல்லாம் பிடிக்காது! வேலைன்னு வந்துட்டா... ஹண்ட்ரட் சதவீதமும் சரியா இருக்கணும்ன்னு நினைக்கிறவள்! ஒரு சதவீதம் தப்பு வந்தாக்கூட... நான் பொறுத்துக்க மாட்டேன்! இவங்க ரெண்டு பேரும் உங்களை நம்பறாங்க! உங்க கண்ணிய மான தோற்றத்தைக் கண்டு வேலை கொடுக்க நினைக்கிறாங்க!

"நீங்க...?" சட்டென்று சுவாரசியம் வந்து இடைமறித் தான்.

"நானும்தான்!" என்று அவள் சொல்ல சந்தோச மானவன்...

"அப்போ காலையில..." கேட்டான்.

அவள் எச்சரிக்கையாய் இருவரையும் பார்த்துவிட்டுச் சொன்னாள்.

"ஸாரி... ஸாரி மிஸ்டர் கௌதம்!" பட்டென்று மன்னிப்புக் கேட்க ஒரு மாதிரி ஆனது, கௌதமுக்கு!

"வேலையில எப்போ சேறீங்க?"

"வீட்டுல சொல்ல வேணாம்மா? தாய், தகப்பன், குடும்பம், குழந்தைங்கன்னு... நான் பெரிய குடும்பஸ் தனாக்கும்!" என்று கௌதம் சொல்ல... ஒரு மாதிரி



வேதனை நெஞ்சையடைப்பதுபோல சம்யுக்தாவிற்கு இருந்தது.

ஆசையாசையாய் கோர்த்த அழகான முத்துமாலை... அறுந்து சிதறினாற்போல... ஒரு துடிப்பு உள்ளே பரவி... அலையலையாய் அவளைப் புரட்டிப் போட்டது.

'ச்சே... எனக்கு என்னவாயிற்று?'

'அவன் குடும்பஸ்தனாக இருந்தால்... எனக்கெதுக்கு நெஞ்சில் ஒரு அடைப்பு ஏற்பட வேண்டும்?'

'எனக்கு ஏன் கலக்கம்?'

'இதுயென்ன புது அவஸ்தை? என்றுமே இல்லாமல் புதிதாய் பிறந்திருக்கிறது!'

'என்னுள் இருக்கும் சோகமும், வேதனையும் போதாதா? இது வேறு புதிதாய் தேவையில்லாமல்!'

சம்யுக்தாவின் முகத்தில் மின்சாரம் ஏறுவதும்... இறங்கு வதுமாய் இருந்ததை ரசித்துக் கொண்டே சொன்னான்.

''மண்டே ஜாயின் பண்றேன் மேடம்!'' சொல்லி விட்டு... கரம் குவித்து சென்றவனையே நெடுநேரம் நினைத்துக் கொண்டிருந்தாள்.

# 2

பதினெட்டு வயது பருவமங்கையாய்... இளம் காலைப் பொழுது... கவர்ச்சியைக் காட்டி நடைப்போட்டு சென்றது.

சரியாய் ஒன்பது முப்பதுக்கு கௌதம் உள்ளே நுழைய... அவனுக்கு முன்பே புத்தம் புதுமலராய்... பனியில் நனைந்த ரோஜாவாய்... சம்யுக்தா கம்பீரமாய் வீற்றிருந்தாள்.

"குட்மார்னிங் மேடம்!"

"உட்காருங்க! பயணம் சுகமா இருந்ததா?" கரிசனமாய் கேட்க...

கௌதம் சிலிர்த்துப் போனான்.

"என்ன டல்லா தெரியறீங்க?"

"உங்க நேரம் தவறாமை, சுறுசுறுப்பு, வேலை செய்யும் திறன் பற்றியெல்லாம் அன்று பார்த்த பாண்டியன் சார் அன்று சொன்னதிலிருந்தே மனதிற்குள் ஒரு கலக்கம்! உங்ககிட்ட நிலைச்சி நிற்க முடியுமா? முடியாதா?ன்னு பயம்!"

"என்ன இது நம்பிக்கையில்லாமல்!"

"ஏற்கனவே பார்த்ததும் நல்ல வேலைத்தான்! கொஞ்சம் சம்பளம்தான் குறைச்சல்! திரும்பி வந்தால் வேலையெல்லாம் கிடையாதுன்னு சொல்லியே அனுப்பிட்டார்!"

"என்ன இது? என்னை நினைச்சிப் பயப்பட வேண்டாம்! அப்படியொன்றும் பொல்லாதவள் நானில்லே! இங்கே ரொம்ப கடினமான வேலையும் தர மாட்டோம்! ஏற்கனவே வேலை பார்த்தவர்கள் கேரக்டர் சரியில்லாததால் வீட்டுக்குப் போயிட்டாங்க!"

கௌதம் மௌனமாய் இருக்க...

"நீங்க சிரிச்சி பேசறீங்க! ஆனால் உங்க பார்வையில ஒரு கண்ணியம் இருக்கு! விரசமோ, காமமோ வழியாத



கண்கள்! ஆடை உரிச்சி அசிங்கமா பார்க்காத நேர்மை எல்லாம் பிடித்ததால்தான்... பாண்டியன் சார் உங்களை தேர்ந்தெடுத்ததும்... நான் மறுப்பு சொல்லலே! நான் ஒண்ணும் ஜூவுல இருந்து தப்பி வந்தவளில்லே! நான் என்ன சிங்கமா? புலியா? என்னைக் கண்டு பயப்பட! ம்?" என்று அவள் புருவம் உயர்த்திக் கேட்க...

கௌதம் அழகாய் மலர்ந்தான்.

"ஆப் டே பாண்டியன் சார்கிட்ட வேலையைப் பற்றி, தெரிஞ்சுக்கங்க! மதியத்துக்கு மேல் நான் சொல்லும் வேலையைப் பார்க்கலாம்! இப்போ நீங்க போகலாம்!"

படிய வாரிய தலைமுடி! மடிப்பு கலையாத ஆகாய வண்ண சட்டை... கறுப்பு பாண்ட் என்று அம்சமாய் இருந்தான்.

பாண்டியன் கௌதமை ஒவ்வொருவரிடமும் அறிமுகப் படுத்தினார். அங்கே இருந்த அத்தனைப் பெண்களும் கௌதமின் அழகில் சொக்கித்தான் போனார்கள்.

ஆபீஸில் பெரும்பாலும் பெண்களே நிறைந்து இருந்தனர்.

காலைநேர இடைவேளையில் காபி சாப்பிட கேண்டீனுக்கு செல்ல... கூட்டம் நிறைய இருந்தது.

கௌதம் தனியிடம் தேடி அமர... சற்று முன்னர் அறிமுகப்படுத்திய பெண்கள் இவனைப் பார்த்து பேசினர்.

"ஏய் அழகுல மன்மதன்டி!"

"இந்த ரோமியோவை கண்ட உடனே என் உள்ளம் கொள்ளைப் போயிடிச்சி!"

"கள்வன்! என் இதயத்தை திருடிட்டுப் போயிட்டான்!"

"மன்மதனுக்கு கல்யாணம் ஆயிடிச்சா...? இல்லை யான்னு தெரியலையே!"

"கடவுளே... அவர் பேச்சலராத்தான் இருக்கணும்!"

"நாமெல்லாம் இந்த ஆண் மோனாலிசா மேல் ஆசைப் படறோம்! ஆனால் யாருக்கு மச்சம் இருக்கோ! எவள் அள்ளிட்டுப் போயிட்டாளோ! அல்லது அள்ளிட்டு போகப் போறாளோ...!"

"அப்படியே ஆக்டர் விஷால் போல் இருக்கார்!"

"போடி... மாதிரமான அரவிந்தசாமி!"

"என் அல்டிமேட் ஸ்டார் அஜீத் போல இருக்கார்!"

சில பொம்பளை ரவுடிகள் பேசப்பேச... இதையெல் லாம் காதுகளில் கேட்ட கௌதம் மென்மையாய் புன்னகைத்துக் கொண்டான்.

'எனக்கு கல்யாணம் ஆகியிருந்தாலோ... ஆகாமல் இருந்தாலோ... உங்களுக்கு என்ன? போங்கடி சினிமா பைத்தியங்களா...! நான் நானா இருக்க... யார் யாரோடவே ஒப்பிடறீங்களே! பொண்ணுங்க நல்லாத்தான் தேறிட்டு வறீங்கடி! சிவப்புத் தோல் மோகம் போய்... என்னைப் போல கறுப்பா இருக்கிறவனுங்களையும் ரசிக்க ஆரம்பிச் சிட்டீங்களே' மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

கௌதம் சமீபமாய் விஜய் டி.வி.யில் ரத்னா ஸ்டோர்ஸ் தங்கமாளிகை வழங்கும் நீயா? நானா? என்ற நிகழ்ச்சி ஒன்று பார்த்தான். கறுப்பான ஆண்கள் அழகா...? சிவப்பான ஆண்கள் அழகா...? என்று விவாதம். கறுப் புக்கு ஆதரவு அதிகமாய் இருந்தது. அடுத்ததாய் கல்லூரி மாணவிகளிடையே கறுப்பான ஆண்களை மணக்க



விருப்பமா? சிவப்பான ஆண்களை மணக்க விருப்பமா? என கேள்வி கேட்க... எண்பது சதவீதம் பேர் 'கறுப்பான ஆண்கள்தான் எனக்கு புருஷனா வரணும்! கறுப்புத்தான் அழகு!' என்று கூறியிருந்தனர்.

பெண்களின் இந்த முன்னேற்றத்தை அவனும் வரவேற்கிறான். ஏனென்றால் அவனும் கறுப்பல்லவா?

"ஐயோ... மன்மதன் போறாரே! இந்த பேரர் சீக்கிரம் காபியை கொண்டு வந்து நீட்டாமல் இருந்திருந்தால்... இன்னும் கொஞ்ச நேரம் அவர் தரிசனம் கிடைத்திருக்கும்! ச்சே! ஸ்டுப்பிட் பேரர்!"

கௌதம் போய்விட்டான்.

"எத்தனை அழகோடான ஆண் பிள்ளை வந்து நின்னாலும்... நம்ம மேடம் திரும்பிக் கூட பார்க்க மாட்டாங்க!"

"இதுவே நம்ம மேடம் சீட்டுல நான் இருந்திருந்தால்... இந்நேரம் மன்மதனை வளைச்சி... என் மடியில போட்டுட்டு இருப்பேன்!"

"பாவம் நம்மாளு! அல்லிராணியோட அலட்சியத்துல நொறுங்கிடறாரோ... என்னவோ!"

என்று ஆளாளுக்கு பேசிக் கொண்டனர்.

மதியத்திற்கு மேல் சம்யுக்தா கௌதமை அழைத்தாள்.

"இந்த பைலைப் பாருங்க! அடுத்ததா கம்ப்யூட்டர்ல இந்த வேலையை முடிச்சிக் கொண்டு வாங்க" என்று அனுப்பினாள்.

அவள் நினைத்ததைவிட சீக்கிரமே வேலை முடிந்து பைலை நீட்ட... சம்யுக்தா ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள். பின் பைலை திருப்பிப் பார்த்துவிட்டு...

"வாவ்... வொண்டர்புல்! கீப் இட் அப்! சின்ன தப்பு கூட இல்லையே! இத்தனை சீக்கிரம் வேலையை முடிச்சிட்டீங்களே! வெரி வெல்!" என்று மனம் திறந்து பாராட்டினாள்.

கௌதம் குளிர்ந்து போனான்.

மாலைக்குள் சம்யுக்தா அவனின் வேலை செய்யும் பாங்கு, சுறுசுறுப்பு, விறுவிறுப்பு கண்டு அதிசயத்தின் உச்சிக்கே போய்விட்டாள்.

கௌதம் கம்ப்யூட்டரைவிட வேகமாய் இருந்தான்.

நாள் முழுக்க சளைக்காமல், களைக்காமல்... புன்னகை தவழும் முகத்தோடு வேலை செய்தது கண்டு... இன்னும் கூடுதல் மதிப்பு வைத்தாள்.

"என்ன மிஸ்டர் கௌதம்... இத்தனை ஆச்சரியத்தை முதல் நாளே கொடுத்தா எப்படி? அசந்துட்டேன் சார்! காலையில என்னவோ அந்த அளவு பயந்துட்டு... கத்து குட்டியாட்டம் நடிச்சிட்டு... வேலையில சக்கைப் போடு போடறீங்களே! எல்லோரும் என்னை இதுநாள் வரை புகழ்ந்துட்டு இருந்தாங்க! அந்தப் புகழை, நல்லப் பேரை நீங்க தட்டிட்டுப் போகப் பார்க்கறீங்களே! அது எந்த விதத்தில் நியாயம்? ம்?" புருவம் உயர்த்தி புன்னகையுடன் சம்யுக்தா கேட்க...

அவளின் அந்த அழகில் மயங்கி விழாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான் கௌதம்.

"என்ன அப்படி பார்க்கறீங்க?"

"நீங்க புருவம் உயர்த்தி புன்னகைத்தது வெகு அருமை!" ரசனையுடன் கூற...



"இது மாதிரியான புகழ்ச்சிக்கு மயங்காதப் பெண் நானில்லே!" பட்டென்று சொல்ல...

"உங்களை மயக்க சொன்ன பொய்யான வார்த்தைகள் இல்லே! நிஜமா... ரொம்ப அழகா இருந்தது. இது என் நெஞ்சுக்குள் இருந்து வந்த வார்த்தைகள்!" நெஞ்சைத் தொட்டுக் காட்டினான்.

"இந்த அளவு பெரிய பெரிய ஐஸ் பாறைகளை என் தலையில் ஏற்றினால் தாங்குவேனா? நான் பெண்ணென்ற நினைப்பில்லையா?" சம்யுக்தா அழகாய் கூறி புன்னகைக்க... கௌதம் ஆசையாசையாய் பார்த்துக் கொண்டு இருந்தான்.

"எங்கே தங்குவதாய் விருப்பம்? கெஸ்ட் ஹவுஸ்? ரிசார்ட்ஸ்?"

"இப்போ தனிதான்! அதனால் ரிசார்ட்லே தங்கிக் கிறேன்!"

'உங்க குடும்பம் பற்றி சொல்லுங்க? மனைவி பெயர் என்ன? குழந்தைங்க எதுனா இருக்கா?' என்று கேட்க நினைத்து கேட்காமல் விட்டு விட்டாள்.

கௌதமுக்கு கொடுக்கப்பட்ட அறை ரொம்பவே வசதியாய் இருந்தது. கொண்டு வந்த துணிகளையும், பொருட்களையும், புத்தகங்களையும் அடுக்கி வைத்தான்.

புத்தகப் பிரியன்!

அங்கே நூற்றுக்கும் மேற்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய அறையும் ஹோட்டலும் இருந்தது. சிலர் உணவை அறைகளுக்கு வரவழைத்தும்... சிலர் ஹோட்டலுக்கே வந்து உண்டு விட்டு... முன்புறமிருந்த புல்வெளியில்

அமர்ந்து கொஞ்ச நேரம் பேசிவிட்டு... பனி அதிகமாக... தங்கள் அறைக்குள் சென்று பூட்டிக் கொண்டனர்.

அங்கே தங்குபவர்களில் முக்கால்வாசிப் பேர் தேனிலவு கொண்டாட வந்த தம்பதிகள்!

எல்லாவற்றையும் ரசித்துவிட்டு... சாப்பிட்டுவிட்டுப் போய் படுத்தான், கௌதம்.

தேன் நிலவு தம்பதியரின் ஊட்டி, அன்யோன்யம், எதிர் துருவங்களாய் ஒட்டிக் கொண்டு இணை பிரியாமல் சென்றது என்று எல்லாமே அவன் தூக்கத்தைக் கெடுத்தது.

கண்ணை மூடினால் கண்களுக்குள் சம்யுக்தா வந்து நின்றாள்! நடந்தாள்! மோகனப் புன்னகையை வீசினாள்!

அன்றைய நிகழ்வுகளை ஏடு திருப்ப... சம்யுக்தாவின் பாராட்டுக்கள்... இன்னும் தேனின் தித்திப்பாய்... மயிலிறகு வருடலாயும்... தென்றலின் சீண்டலுமாய்... இன்னும் நெஞ்சில் நின்று குறுகுறுத்துக் கொண்டிருந்தது.

இத்தனை அழகான, திறமையான பெண்ணை பார்ப்போம் என்று நினைத்துக்கூட பார்க்கவில்லை, கௌதம்!

தன் மனதை காந்தமாய் கவரப் போகும்... இனியவள் ஒருத்தி இருப்பாள் என்று கற்பனைக்கூட செய்து பார்க்கவில்லை.

தன்னை சலனப்படுத்த இப்படி ஒரு சாகசக்காரி... ஊட்டியில் அழகாய் பிறந்து வளர்ந்து வருவாள் என்று கௌதம் கனவில்கூட நினைத்துப் பார்த்ததில்லை.



எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பாராமல், அலட்சியப்படுத்தி, பிரம்மச்சரியம் காத்த கௌதமை தலைக்குப்புற விழ வைத்துவிட்டாள், சம்யுக்தா.

சம்யுக்தா கல்யாணமானவளா? ஆகாதவளா? என்று கூடத் தெரியாமல்... அவளுள் விழுந்து விட்டான்! அவள் உயிரோடு உயிராய் கலந்து விட்டான்!

அவளுள் கலந்த கௌதமை இனி தனியேப் பிரிப்பது கஷ்டம்!

ஆனாலும் அவனுள் ஒரு நெருடல்!

அவனுக்கு இருபத்தேழு வயதென்றால்... அவளுக்கு ஒரு இருபத்தாறு இருக்கலாம்!

இதுவரை கல்யாணமாகாமல் இருப்பாளா?

யாரையாவது கேட்க தயக்கம்!

'ஏன்? எதற்கு கேட்கிறாய்?' என்று கேள்வியெழுந்தால்...

'வந்த நாளே கேட்க காரணம்?' என்று முறைத்தால்...

'கழுத்தில் தாலியிருக்கிறதா?' என்று பார்க்கலாம் என்றால்... புடவை முந்தானையை இழுத்து கழுத்து வரைப் போர்த்தியிருக்கிறாள்.

'காலில் மெட்டியிருக்கிறதா?' என்று பார்க்கவும் வழியில்லாமல்... முன் பாதத்தையெல்லாம் மூடிய டைப்பில் செப்பல்... அவள் விரல்களையெல்லாம் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது.

இதுவரை பஸ்ஸிலும், தியேட்டரிலும், கூட்ட நெரிசலிலும்... இவன் இளமைக் கண்டு... அழகு கண்டு எத்தனையோ நாகரீக யுவதிகள் வேண்டுமென்றே உரசி சென்றிருக்கிறார்கள்.

அப்போதெல்லாம் எருமை தீண்டிய கணக்காய்... அருவருப்பாய்... முகம் சுளிக்க வைக்கும் இந்த மனசு!

ஆனால், சம்யுக்தாவை தொட்ட நொடி... உடலின் அத்தனை செல்களிலும், திசுக்களிலும் பரவசம்! மகிழ்ச்சி! இனம் புரியாத, விவரிக்க முடியாத ஒரு உணர்ச்சி! மின்சாரம் தாக்கிய கணக்காய் அதிர்ச்சி! மனசெல்லாம் மல்லிகை காடு பூத்துக் குலுங்கிய வாசம்!

அவளின் பெண்மை... அவனின் கம்பீரத்தையும், ஆண்மையையும் தீண்டி நெக்குருக வைத்து விட்டது!

அவள் தொட்டவுடன்... அவன் உடலும், உயிரும், உள்ளமும்... ஏன் குழைந்து உருக வேண்டும்?

ஏன் பட்டென்று பிரிக்க முடியாத அளவு ஒட்டிக் கொள்ள வேண்டும்?

அவனை நிலை குலைய வைக்கிறாள் என்றால்... அவள் அவனுக்காய் பிறந்தவள் தானே!

அவள் தொட்டவுடன்... அவன் மனசு அவள் பின்னே செல்கிறதென்றால்... அவள் அவனுடையவள் தானே!

கல்யாணமானவளாய் இருந்தால்... அவள் பின்னே செல்லக்கூடாது என்று மனதிற்கு தெரியாதா என்ன?

என் நம்பிக்கைக்கு உரிய என் மனம்... நான் நேசிக்கும் என் மனம்... நான் பூஜிக்கும் என் மனம்... ஒரு நாளும் தப்பு செய்யாது! தடம் புரண்டு போகாது!

என் மனம்... என் தேவதை சம்யுக்தா... என்று காட்டி விட்டது!

சம்யுக்தா... எனக்கே எனக்காய் பிறந்தவள்!

யுகயுகமாய் அவளோடு வாழ்ந்து... மீண்டும் பிறந்து... அவளுடையவளைக் கண்ட திருப்தி... சம்யுக்தாவைக் கண்ட போது ஏன் ஏற்பட வேண்டும்?



சம்யுக்தா...

'என் உயிரானவள்!'

'என் உணர்வானவள்!'

'என் நேசத்திற்கு உரியவள்!'

'எனது இன்றைய காதலி! நாளைய மனைவி! எல்லாமே... எல்லாமே எனக்கு என் சம்யுக்தாதான்!'

அவன் ஆனந்தக் கூத்தாடினான். அந்த ஆனந்தம் பொய்க்கப் போகிறது எனத் தெரியாமல்!

## 3

நேற்றைய இரவு... சம்யுக்தாவின் நினைவுகள் ஏற்படுத்திய தாக்கத்தால்... அலைகழிந்த மனது... நடு சாமம் வரை தூங்காமல் கொட்ட கொட்ட விழித்திருந்து... விடியலில் உறக்கம் வந்து தாலாட்ட... சம்யுக்தாவை மறந்து விடிந்து வெகு நேரம் வரை தூங்கிப் போனான். சூரிய ஒளி சன்னல் வழியே வந்து கன்னம் திமிண்ட... உறக்கம் கலைந்து எழுந்தவன்... மணி பார்த்து பதறி... தியானம், உடற்பயிற்சி அத்தனைக்கும் ஒரு குட்பை சொல்லி... குளித்துவிட்டு, பேருக்காய் உண்டு விட்டு... வேகமாய் நடந்து ஆபீஸில் நிற்க மணி ஒன்பதரைதான். நிம்மதியாய் மூச்சு வாங்கி உள்ளே செல்ல... அந்த பெண்கள் படைச் சூழ்ந்து கொண்டது.

"குட்மார்னிங் கௌதம் சார்!" கோரசாய் சொல்ல...

''குட்மார்னிங் யங் லேடீஸ்!'' என்று பொதுவாய் பார்த்துச் சொன்னான்.

''ரொம்ப அழகா இருக்கீங்க சார்!''

''இந்த ட்ரஸ் கலர்புல்லா இருக்கு! அம்சம் சார்!''

''தேங்க்யூ! ஆமா பொண்ணுங்களெல்லாம் ஜென்ஸைக் கண்டால் மார்க் போடுவீங்களாமே! நான் நூத்துக்கு எத்தனை தேறுவேன்? ம்?'' என்று கவர்ச்சியாய் புன்னைகைத்துக் கேட்க...

''உங்க அழகுக்கும், கவர்ச்சிக்கும், ஆண்மைக்கும் எங்க மார்க் நூத்துக்கு நூறுதான்!''

''என்னது நூத்துக்கு நூத்தி இருபது!'' என்று ஒரு சின்னப் பெண் கூற...

''ஏய்... ஏய்... நாட்டி கேர்ள்!'' என்று சிரித்தான்.

''உங்களுக்கு கல்யாணமாயிடிச்சா...?'' ஒருத்தி அவசரமாய் கேட்க...

''அவசியம் தெரிஞ்சிக்கனுமா?'' கண்ணடித்து குறும்பாய்க் கேட்க...

''ஆமா சார்! உங்களுக்கு கல்யாணமாகலன்னு பாதி பேரும்... கல்யாணமாயிடிச்சின்னு பாதி பேரும் பெட் கட்டியிருக்கோம்!''

''எந்த குரூப் ஆகலன்னு பெட் கட்டியது? அடப் பாவமே... எனக்குக் கல்யாணமாகி கையில ரெண்டு குழந்தையும், வயித்துல ரெண்டு குழந்தையுமா என் பொண்டாட்டி இருக்கா! பிறந்ததும் ரெட்டை! வயித்துல இருப்பதும் ரெட்டையாம்! ஸ்கேன்ல தெரிய வந்தது! நீயா அந்த அவுட் பெட்டிக்காரங்களுக்கும்!''



கௌதம் சொல்லி முடிக்க... பாதி பேர் முகம் ஒளியிழக்க...

''ஏய் மஞ்சு... ஆயிரம் ரூபா பெட் வச்ச இல்ல? எடுடி! சாருக்கு கல்யாணமாயிடிச்சாம்!'' என்று ஒருத்தி கூறி குதூகலிக்க...

''அடடா மஞ்சு முகத்துல கரண்ட் போயிடிச்சே! ஆமா... உன் முகம் ஆயிரம் ரூபாவுக்காக ஒளியிழந்ததா? இல்ல எனக்கு கல்யாணமாயிடிச்சேன்ற கவலையில முகம் கறுத்ததா? சொல்லு மஞ்சு?'' அந்தப் பெண்ணிடம் கௌதம் கேட்க...

மஞ்சு தலை குனிந்து கொண்டாள்.

''மஞ்சு... உனக்கொரு நல்ல செய்தி சொல்லட்டுமா...?'' மெதுவாய் அவன் அடிபோட... அவள் புரியாமல் விழிக்க...

''எனக்குக் கல்யாணமாகலே...! சந்தோசமா...?''

''ஏய்...!'' என்று ஒரு குரூப் குதிக்க...

''அடடே... எனக்கு கல்யாணமாகலேங்கிற செய்தி உங்களுக்கு அத்தனை சந்தோசமா? ஆமா... யாரெல்லாம் எனக்கு அப்ளிகேஷன் போடப் போறீங்க?''

பெண்கள் புரியாமல் முழிக்க...

''லவ் பண்ண அப்ளிகேஷன் போடப் போறீங்க? ம்.. கை தூக்குங்க பார்க்கலாம்!'' அத்தனைப் பேரும் கைதூக்க... ஒருத்தி மட்டும் தூக்கவில்லை.

''ஏன்? ஏன்?'' கேட்க...

''ஏற்கனவே ஒருத்தன் கட்டி... விட்டுட்டு ஓடிட்டான் சார்!''

''எனக்கு ஆட்சேபணை இல்லை! விவாகரத்து ஆன பெண்ணென்றாலும்... எனக்கு ஓ.கே.மா? நீயும் ட்ரை பண்ணலாம்! உனக்கும் உரிமையிருக்கு!'' என்று கௌதம் கூற...

''ஏய்...'' என்று மீண்டும் உற்சாகக் குரல் எழ...

''இது போல... பொறுக்கி மாதிரி... பிகேவ் பண்ற லேடிஸை எனக்கு சுத்தமா பிடிக்காது! கவனம்!'' சுட்டு விரல் நீட்டி எச்சரிக்க...

அனைவரும் கப்சிப் ஆக...

''மை டியர் யங் லேடீஸ்... இப்படி பார்க்கறவனையெல்லாம்... லவ் பண்ணலாமான்னு நினைக்கக்கூடாது! உங்களுக்குன்னு ஒருத்தன் பிறந்திருப்பான்! அவனைக் காண்பீர்கள்! அவனை ஒத்தப் பார்வையிலேயே உங்களுக்குப் பிடிக்கும்! உங்க மனம் இவன்தான்... இவன் தான் உன் ராஜகுமாரன்னு கைக்காட்டும்! அப்படி உங்க மனம் கைக்காட்டறவனைத்தான் நேசிக்கனும்! கல்யாணம் பண்ணிக்கனும்! அவனோட நல்லா வாழனும்! அதைவிட்டுட்டு... இவன் அஜீத் போல இருக்கான்! அவன் விஷால் போல இருக்கான்! நம்ம மன்மதன்னு பார்க்கிறவனிடம் எல்லாம் உங்க மனசை செலுத்தக் கூடாது! அலை பாயவிடக்கூடாது! மனம் என்ற குரங்கு தாவிட்டே இருக்கும்! அதை நாம்தான் கயிறு போட்டு கட்டுப்பாடோட வச்சிக்கனும்!

''உடம்புக்கு கற்பு இருப்பது போல... மனசுக்கும் கற்பு இருக்கு... யங் கேர்ள்ஸ்! கண்டவனையெல்லாம் புருஷனா நினைச்சிப் பார்த்தா... மனசுக்கு கற்பு போயிட்டதா அர்த்தம்!...



''கட்டிக்கப் போறவனைத் தவிர... கண்டவனையெல்லாம் மாமனா நினைக்கக்கூடாது! சகோதரனா நினைக்கனும்! என்ன போரடிக்கிறேனா? என் லெக்சர் கசக்குமே! உங்க வயசு அப்படி!''

''இல்லே... இல்லே சார்! சொல்லுங்க?''

''இந்த வயசு அலைபாயற வயசு! நல்லது எது? கெட்டது எது?ன்னு முடிவெடுக்க முடியாது! வார்த்தை ஜாலங்கள் ரொம்பவே பிடிக்கும்! நிஜமும், இயற்கையும் கொஞ்சமும் பிடிக்காது! இந்த வயதில் தாய், தகப்பன் கண்டிச்சாக்கூட வெறுப்பா இருக்கும்! வேலி தாண்டி போக ஆசை வரும்! செய்ய வேண்டாம் என்பதை செய்து பார்த்தால் என்ன என்று துணிச்சல் வரும்! இதனால் பின் விளைவுகள் நிறைய!...

''இந்த வயசுல நல்ல போதனைகள் ஏறாமல் போனால்... வேதனைகள்தான் மிஞ்சும்! புரியுதா?''

''மஞ்சு காதல்ங்கிறது லேசுபட்டதல்ல! உனக்கானவனை காதலிக்காமல்... இளமை வேகத்தில்... பொழுது போக எவனையாவது காதலிச்சிட்டு... கடைசியில ஏதாவது ஒரு காரணத்தால் காதல் நிறைவேறமல் போய்... வேறு ஒருவனை கல்யாணம் பண்ணி வாழும்போது உன் முதல் காதலும், முதல் ப்ரியமும்... உன் நெஞ்சுக்குள்ளே இருந்து உன்னை இம்சிக்கும்! வேதனைப்படுத்தும்! சாகும் வரை நெஞ்சுக் கூட்டுல இருக்க... அந்த காதல் நினைவுகள்... அகலாமல்... ஏதாவது சமய சந்தர்ப்பத்தில் வெளிப்பட்டுட்டே இருக்கும்...

''உன் கணவனும், குழந்தைகளும்... உன் மேல் உயிரையே வச்சிருக்கும். இது அவங்களுக்கு செய்யற துரோகம் தானே! இங்க பாருங்க கேர்ள்ஸ்... நீங்களெல்

லாம் என் தோழிங்க... என் சகோதரிங்க! தப்பிருந்தா மன்னிக்கனும்!'' என்று பேச்சை நிறுத்த...

'இப்போ சொன்ன அத்தனை வார்த்தைகளையும்... நீ உனக்கே சொல்லிக் கொண்டால் நல்லது கௌதம்! அடுத்தவங்களுக்கு புத்தி புகட்டுவதற்கு முன்... வேதம் ஓதுவதற்கு முன்...' அவன் மனம்... அவனுடைய தலையில் கொட்டியது.

அதற்குள் அங்கு வந்த சம்யுக்தா... குழுமி நின்ற பெண்களுக்கிடையில் கௌதமைப் பார்க்க... சட்டென்று எரிச்சலுற்றாள்.

''மிஸ்டர் கௌதம்... காலையில் வந்ததும் வேலையை கவனிக்காமல்... இதுயென்ன பெண்களைக் கூட்டிட்டு... உங்க ரோமியோதனத்தைக் காட்டறீங்க? இது கொஞ்சம் கூட நல்லாயில்ல சார்! போங்க சார்!''

''ஏய் மஞ்சு... கேங் சேர்த்துட்டு காலையிலேயே வெட்டி அரட்டை அடிக்கிறயா? நிறைய படிக்கலன்னாலும்... ரொம்பக் கஷ்டப்படற பேமலியில இருந்து வாறீங்களேன்னு... வேலைக்கு வச்சது என் தப்பு! கத்துக் குட்டிங்களையெல்லாம் கணக்கெழுத அமர்த்தினது எவ்வளவு தவறு! எல்லாம் ஒழுங்கா அவங்க அவங்க சீட்டுக்குப் போங்க!'' விரட்டினாள்.

''என்ன மிஸ்டர் உங்களுக்கு தனியா சொல்லணுமா?'' என்று கௌதமைப் பார்த்து கத்த... அவன் உதடு பிதுக்கி... தோள் குலுக்கி அலட்சியமாய் சென்றான்.

''ஐய்யோ பாவம்... அல்லிராணி அவரை இன்று உண்டு இல்லேன்னு ஆக்கிடுவாங்க!'' என்று கூறி கலைந்து சென்றனர், அனைவரும்!



சம்யுக்தா கொஞ்ச நேரத்தில் கௌதமை பியூன் மூலம் அழைத்தாள்.

''நம்ம எஸ்டேட், பாக்டரி, ரிசார்ட்ல வேலை செய்யற அனைத்துப் பெண்களும், ஆண்களும் ஒண்ணு ஏழ்மை யானவங்களா இருப்பாங்க! அல்லது ஏதாவது விதத்துல பாதிக்கப்பட்டு இருப்பாங்க! சிரிச்சி பேசற அந்த பொண் ணுங்க மனசுல ஆயிரம் வேதனைகள்... ரணங்கள்!''

கௌதம் சம்யுக்தாவை புரியாமல் பார்க்க...

''கணவனால் கைவிடப்பட்டவங்க... விதவைங்க... குடும்பத்தை உழைச்சிக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை யில உள்ள சின்னப் பொண்ணுங்கன்னு இங்க வேலைப் பார்க்கறாங்க! அவங்ககிட்டயெல்லாம் கொஞ்சம் அள வோட வச்சிக்கங்க! நீங்க என்கிட்ட குறும்பா பேசறாப் போல பேசப்போக... அவளுங்க எதுனா ஆசையை மனசுல வளர்த்துக்கப் போறாங்க! கொஞ்சம் உங்க கிண்டல், கேலி, குறும்பை நீங்க குறைச்சிக்கனும்! புரியுதா?''

''..........................''

''மௌனமா இருந்தா என்ன அர்த்தம்?'' அவன் விழிகளை ஊடுருவி கேட்டாள்.

''சரிங்க மேடம்!''

''குட். போய் வேலையைப் பாருங்க!''

கௌதம் கொஞ்சம் எரிச்சலோடே வெளியே வந் தான்.

'எதற்கு இவளுக்கு இந்த அளவு கோபம் வரவேண் டும்?'

'பெண்களோடு பேசுவது தவறான நோக்கத்திற்காக என்று அவ்வளவு கேவலமான நினைப்பா? என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள்? நல்லவனாகவே நினைக்க மாட்டாளா?'

'இவனைக் கண்டு பெண்கள் அவ்வளவு பயந்து ஓடுகிறார்களே!'

கோபம் மெல்ல குறைய... பின்னர்...

'சம்யுக்தாவிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!'

'சம்யுக்தாவிற்கு பிடிக்காததைச் செய்யக்கூடாது!'

'சம்யுக்தா என்னுடையவள்! அவளிடம் இருக்கும் நல்ல குணத்தை. மனத்தை மட்டும் பார்க்க வேண்டும்! கெட்டதை தூசாய் நினைத்து விட்டுத்தள்ள வேண்டும்!

அவளிடம் கோபம் கொண்ட மனதிற்கு புத்தி சொல்லி... வேலையில் மூழ்கிப் போனான்.

இடைவேளையின் போது கேண்டீன் செல்ல... இளைஞிகள் பட்டாளம் சூழ்ந்து கொண்டது.

"ஸாரி... ஸாரிங்க ப்ரதர்!" மன்னிப்பு கேட்டுக் கொண்டது.

"எதுக்கு?"

"மேடம்... போன உடனே உங்களை அழைச்சி... கண்டிச்சி... மண்டகபடி கொடுத்தாங்க இல்லையா? அதற்குத்தான்!"

"எப்படி தெரியும்? சரியான துப்பறியும் நிபுணரா இருக்கீங்களே! நீங்களெல்லாம் டிடெக்டிவ் ஏஜென்சியில வேலை பண்ணனும்! பாவம்! இங்க வந்து மாட்டிட்டீங்க!



ஆமா துப்பு கொடுத்தது யாரு? நம்ம பியூனா? அவனைப் பேசிக்கிறேன்! பெரிய இவனாட்டம் உங்ககிட்ட போட்டுக் கொடுத்துட்டானா? இது என் மான அவமான விஷயமல்லவா?" என்று கோபமாய் பேச...

மஞ்சு புரியாமல் விழிக்க...

கௌதம் வாய்விட்டு குளோசப் விளம்பரப் பையனாய் சிரித்தான்.

"என்ன சிஸ்டர்ஸ் பயந்துட்டீங்களா...? சும்மா உங்க மேடம் போல ஆக்ட் கொடுத்தேன்! என் நடிப்பு... உங்க மேடம் கோபம் காட்டறதுல ஐம்பது பர்சன்டாவது தேறுவேனா? நம்பாமல் பார்க்கறீங்களே! எனக்கு உங்க மேல ஒரு கோபமும் இல்லே! உங்க மேடம் போல எந்த நேரமும் சடுசடுன்னு... படபடன்னு நம்மால் எரிச்சல்பட முடியாது! அதனால் நாம மேடம் வழிக்கு போக முடியாது! உங்க மேடத்தை நம்ம வழிக்கு கொண்டு வந்துடலாமா?"

"நம்ம மேடம் சரியான சாமியாரினி!"

"மாத்தவே முடியாது!"

"இங்கே வேலையில சேர்ந்ததுல இருந்து சிரிச்சியே பார்க்கல அண்ணா!"

"அந்த விஸ்வாமித்திரர் தங்கச்சியை மாத்திடலாம்! ப்ராமிஸ் கேர்ள்ஸ்!" என்று கௌதம் சொல்ல... எல்லோரும் சிரித்தனர்.

"உங்களுக்குப் பிடிச்சதா வாங்கிச் சாப்பிடலாம் சிஸ்டர்ஸ். ஐஸ்கிரீம், டீ, காபி என்று கணக்கில்லாமல் என் செலவில் சாப்பிடலாம். நான் இந்த கம்பெனியில ஜாயின் பண்ணினதுக்கான ட்ரீட்டா எடுத்துக்கலாம்! அல்லது நாம

நண்பர்களாய் ஆனோம் இல்லையா? அதுக்கான விருந்தாவும் எடுத்துக்கலாம். கமான் கேர்ள்ஸ்! ஏய் மஞ்சு... என்ன நம்ம மேடத்தையே நினைச்சிட்டு இருக்கியா?"

எல்லோரும் நன்றி பொங்க அவனை நோக்கிவிட்டு... பிடித்ததை வாங்கி உண்டனர்.

"உங்களைப் பற்றி சொல்லுங்களேன்?"

"நாங்க ஐந்து பேரும் திக் ப்ரண்ட்ஸ்! எங்க லீடர் மஞ்சுதான்னா! அந்த எதிரி குழுவோட தலைவி சந்தியா! அவங்களும் ப்ரண்ட்ஸ்தான். ஆனால் நாங்க ஏதுனா சொன்னா மறுப்பு தெரிவிப்பாங்க!"

"என் பெயர் மஞ்சு. நான், அம்மா, ஸ்கூல் படிக்கற தம்பி, கல்யாணம் ஆகாமல் ஊனமான அக்கான்னு எங்க பேமலி சின்னதுதான்! அப்பா சின்ன வயசுலேயே செத்துட்டார். அம்மா மேடத்தோட டீ எஸ்டேட்ல வேலை செய்யறாங்க! அக்கா மேடத்தோட வீட்டுல உட்கார்ந்துட்டே மேற்பார்வை பார்க்கிறாள். வேலைக்காரவங்களை விரட்டி வேலை வாங்கற வேலை! மேடமும் அக்காவும் குளோஸ் ப்ரண்ட்! என் மேல் கூடுதல் அக்கறையும், கண்டிப்பும், ப்ரியமும் வர இதுவும் காரணம்!"

"நான் ரஞ்சிதா. இளம் விதவை!" என்று ஒரு சின்னப் பெண் அறிமுகமாக அலண்டு விட்டாள்.

"நான் திவ்யா! வரதட்சணை கொடுமை. விவாகரத்து ஆயிடுச்சி! கைக் குழந்தை இருக்கு!" 'குழந்தையைப் போல அழகான முகம். இவளை எப்படி விவாகரத்து செய்வதற்கு மனம் வந்ததோ?' கௌதம் கேட்காமல் நினைத்துக் கொண்டான்.

"நான் மீனா. ஏழ்மையான பேமலி!"



"நான் கிருபா. எனக்குன்னு யாருமே இல்லை! அநாதை! மேடம் கட்டிக் கொடுத்திருக்கிற குடியிருப்புல பாதுகாப்பா இருக்கேன்!"

சம்யுக்தா சொன்னபோது நம்பவில்லை. நேரில் கேட்க துடித்துவிட்டான்.

இங்கே வேலை செய்பவர்கள் அனைவரும் ஒன்று இல்லாதவர்களாய் இருந்தார்கள். அல்லது சமுதாயத்தால் வஞ்சிக்கப்பட்டவர்களாய் இருந்தார்கள்.

'இதுபோல பெண்களுக்கெல்லாம் நேசக்கரம் நீட்டும் நல்லவளா... இந்த சம்யுக்தா!'

'நலிந்தோருக்கும், இல்லாதோருக்கும் வாழ்வளிக்கும் வள்ளலா... சம்யுக்தா!'

'சம்யுக்தா... எத்தனை பக்குவப்பட்டிருக்கிறாள்!'

'இவர்கள் வாழ்வு சிறக்கத்தான்... இந்த கண்டிப்பும்... முகச் சுளிப்பும்... சுறாருமா?'

சம்யுக்தாவை நினைக்க நினைக்க... நெஞ்சுக்குள்ளே நேசம் அதிகமாகிக் கொண்டிருந்தது.

ஆனால் ஒருவரும் சம்யுக்தாவைப் பற்றிய செய்திகளை சொல்லவில்லை.

"சிஸ்டர்ஸ் நேரமாகுது! நம் நலம் விரும்பி... லேட்டாப் போனால் திட்டுவாங்களே! போலாமா?"

"நாங்கலெல்லாம் சம்யுக்தா மேடத்துக்கு அல்லிராணி, சர்வாதிகாரின்னு பேர் வச்சிருக்கோம் அண்ணா!" என்று திவ்யா சொல்ல...

"எத்தனை நல்லப் பெண் நம் மேடம்! இந்த சின்ன வயதில் எத்தனை உயரம் கண்டிருக்கிறார்கள். ஒரு

அலட்டலும் இல்லையே தோற்றத்தில், மனதில்! கண்டிப்பு காட்டுவது உங்கள் நல்லதுக்குத்தான்! இனி அப்படியெல்லாம் சொல்லக்கூடாது! புரியுதா?''

''ஸாரிண்ணா!''

''இட்ஸ் ஓ.கே! போகலாம்!''

சம்யுக்தாவை எண்ணி பெருமைப்பட்டுக் கொண்டே சென்று... அவள் அனுமதி கேட்டு உள்ளேப் போக... யாரிடமோ அவள் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள்.

முகத்தில் கூடுதல் வசீகரம்!

இதழ்களில் பளீர் புன்னகை!

சந்திரனிடம் பால் ஒளியை கடனாய் வாங்கியது போல அவள் அழகு வதனம் மின்னிக் கொண்டிருந்தது.

இதுவரை பார்த்த சம்யுக்தாவிற்கும்... இப்போது பார்க்கும் சம்யுக்தாவிற்கும் நிறைய வித்தியாசம் தெரிய...

அதை ரசனையோடு பார்த்துக் கொண்டிருந்தவனின் முகம் ஒளியிழந்து... கறுத்தது.

''ஸாரிடா மது! தப்புத்தாண்டா! இந்த சண்டே நாம சந்திக்காதது தப்புத்தாண்டா!''

''..........''

''என்னைப் பார்க்காதது என்னவோ போல இருக்கா? ஏமாற்றமா தெரிந்ததா? வேலைடா! பயங்கர வேலை! அதான் கண்ணா வர முடியலே!''

''..........''

''உன்னைவிட வேலையெல்லாம் உயர்வு இல்லடா செல்லம்! உன்னைப் பார்க்க வராதது தப்புத்தான். மன்னிச்சுக்க டியர்! ஸாரி... ஸாரிடா... நான் ரொம்ப



வருந்தறேன் கண்ணா! தப்புக்கு தண்டனை எதுனா குடுடா! நான் போதும் போதும்ன்னு சொல்லச் சொல்ல கத்தி கதற வைப்பாயா? என் கன்னம், உதடு, கண்கள், மூக்குன்னு நேரம் காலம் இல்லாமல் தொடர்ச்சியா முத்தமிட்டுட்டு இருப்பியா? ச்சீ நாட்டி... போதும்... போதும்டா! எனக்கு வெக்கமா இருக்கு!''

''..........''

''அடுத்த வாரமா? கண்டிப்பா... கண்டிப்பா சந்திச்சுக்கலாம்! உன்னைப் பார்க்காமல் இந்த ஒரு வாரமே... ரொம்ப தவிப்பாயிடுச்சி! நான் ஏமாத்த மாட்டேன்டா! என் கழுத்தை கட்டிட்டு... வீட்டுக்குப் போக விட மாட்டியா? போக்கிரி... நான் போகலேன்னா பிசினஸ் என்னாகறது? உன்னைப் பார்த்துட்டு... உன் பக்கத்துலேயே கொஞ்சிட்டு இருக்க முடியுமா? அடுத்த சண்டே உன்னோடத் தான்! காலை முதல் இரவு வரை உன் விருப்பம் போல கட்டிக்கலாம். ஆடலாம், ஓடலாம்! என் மடியில தலை வச்சி என்னை கட்டிட்டு படுத்துக்குவியா? எனக்கு ஓ.கே... வந்துடறேன். ஒரு நிமிடம் கூட என்னை விட்டு பிரிய மாட்டியா? நானும் உன்னை அணைச்சிட்டு... நீ போதும் போதும்ன்னு சொல்லுவரை முத்தமிட்டே இருப்பேன்! காட் பிராமிஸ்!''

''..........''

''சண்டே எப்போ வரும்ன்னு கவலையா இருக்கு! சீக்கிரமே நாள் நகர்ந்துப் போகனும்! நாம ரெண்டு பேரும் சேர்ந்து நாள் முழுக்க கொட்டமடிக்கனும்! கிஸ்தானே? ஒன்னு இல்ல... ஓராயிரம் தரேன்டா... என் ஸ்வீட் ஹார்ட்டே! வேலையிருக்கு! வச்சிடவா கண்ணா? திரும்பவும் பேசலாம். சரியா?'' போனை வைத்தான்.

சோதம் உணர்ச்சிகளைத் துடைத்துவிட்டு... சக்தியெல்லாம் வற்றி, வடிந்துவிட்டாற்போல அமர்ந்திருந்தான்.

சம்யுக்தாவின் போன் பேச்சு அவனை அதிர வைத்து விட்டது.

அந்த உருகலும்... கொஞ்சலும்... டியரும்... கண்ணாவும் அவனை உருகுலைய வைத்துவிட்டது.

நெஞ்சில் சுவுக்கு ஆணி அடித்தபோது ஏற்பட்ட வலியை விட அதிகமான வலியை உணர்ந்தான்.

'ஐய்யோ கடவுளே... என்னுள் மொட்டு விட்ட காதல்... மலர்வதற்குள்... மொட்டிலேயே இப்படியா கருக வேண்டும்!'

'என்னுள் விழுந்த முதல் வித்து! முளை விட்டு... கிளை பரப்பாமலேயே... கருகி விட்டதே!'

'என்னுடையவள்... என் தேவதை சம்யுக்தா... என்று இறுமாப்புடன் இருந்த எனக்கு இடி விழுந்துவிட்டதே!'

'என் நினைவுகளில் ஆழக்கால் தடம் பதித்து விட்டு இப்போது... என்னை ஆறாத சோகத்தில் தத்தளிக்க வைத்து விட்டாளே!'

'எனக்கே எனக்காய் பிறந்தவள்... என் உயிர்! என் உடல்! என்று எக்கச்சக்க ஆசையை விதைத்து... என் மனம் என்னை ஏமாற்றி விட்டதே!'

'அவள் தொட்டவுடன்... மழைச்சாரலாய்... இந்த மனங்கெட்ட மனம்... சிலிர்க்க வைத்து... சித்ரவதைச் செய்து விட்டதே!'



'சம்யுக்தா... சம்யுக்தா இந்த இழப்பை எப்படியடி தாங்கிக் கொள்வேன்!'

'உன்னை என் மனைவியாய் என்னுள் வரிவரியாய் கவிதை எழுதி விட்டேனே!'

'என்னால் என்னை மாற்றி... வேறொருத்திக்கு மாலை யிட முடியாதே!'

'ஜென்மா ஜென்மமாய் பழகிய உணர்வு வந்து என்னை பாழ்படுத்தி விட்டதே!

'என்னுள் சுனாமியாய் எழுந்த நேசம் என்னை சுருட்டி, சுட்டுப் போட்டு விட்டதே!'

'சம்யுக்தா... என் கண்ணே... கண்ணம்மா... உன்னை எப்படியடி மறப்பேன்?'

'உன்னை மறந்து என்னால் இனி வாழ முடியுமா?'

'நீயில்லாத ஒரு எதிர்கால வாழ்வை நினைத்துக்கூட பார்க்க முடியலையே!'

'பாசத்துக்காய்... உறவுக்காய்... ஏங்கிய என் இதயத்தை நேசமென்ற மயிலிறகு கொண்டு வருடுவாய்... என்றிருந்த என்னில் நெருஞ்சியை என் நெஞ்சில் வைத்து தேய்த்து விட்டாயே!'

'இத்தனை திறமையும், சுறுசுறுப்பும் கொண்ட ஒரு அழகான பூந்தோட்டமாய் இருந்த நீ... எனக்கே எனக்கென்று இருந்தேனே!'

'சம்யுக்தா உனக்கொரு காதலன் இருப்பது தெரியாமல் உன்னை நேசித்து விட்டேனே! என்னை மன்னிப்பாயா... கண்ணம்மா?'

"என்ன அப்படிப் பார்க்கறீங்க? போன்ல யாருன்னா? என் சந்தோசம், என் துக்கம், என் உயிர், என் உடல், என் மூச்சுக்காற்று, என் ஆத்மா... எல்லாமே என் மதுதான்! என் டியர்! என் ஸ்வீட் ஹார்ட்!" என்று சொல்லி கவர்ச்சியாய் கண் சிமிட்டி சிரித்து... அவன் இதயக் குளத்தில் மீண்டும் ஒரு பாறாங்கல்லை எடுத்து வீசி கலவரப்படுத்தினாள்.

கௌதம் கலங்கிய குட்டையில் மாட்டிய மீனாய் துடிதுடித்து விட்டான்.

## 4

கௌதம் நடைப் பிணமானான்.

அவனுடைய சுறுசுறுப்பு, துறுதுறுப்பு, குறும்பு பேச்சு, கேலி... அத்தனையும் சூரியனைக் கண்ட பனியாய்... காற்றை கண்ட மேகமாய் ஓடி மறைந்து விட்டது.

தூங்கப் பிடிக்கவில்லை!

சாப்பிடப் பிடிக்கவில்லை!

ஏன் ஷேவிங் கூட செய்துக் கொள்ளப் பிடிக்கவில்லை!

'பெண்களிடம் மனதை அலைய விடக்கூடாது. மனசு அலைபாய்வது... கற்பு போயிட்டா போல! உடம்புக்கு போல மனசுக்கும் கற்பு இருக்குன்னு பெரிய லெக்சர்



கொடுத்து விட்டு... இப்போது எனக்கு யார் புத்திமதி சொல்வது?'

'யோசிக்காமல் ஆசைப்படுவதும்...'

'யோசிக்காமல் காதலிப்பதும்...'

'யோசிக்காமல் புத்தி சொல்வதும்... ச்சே!'

தன்னையே நொந்து கொண்டான்.

எந்த நேரமும் கண்கள் கலங்கி... சதா நீர் கோர்த்துக் கொண்டு... கண்கள் பளபளத்துக் கொண்டிருந்தது.

'ஆண் பிள்ளை போல நடந்து கொள்ளாமல்... ச்சே... என்ன இது பைத்தியக்காரத்தனம்?' என்று புத்தி கூறிய மனதிடம் சண்டைக்குப் போய்விட்டான்.

'நீ அடங்கு மனமே! என்னை வெறுப்பேத்த விட்டுட்டு... பெரிசா பேச வந்துட்டையா? உன்னை...' என்று மனதிடம் கத்தி ரகளைச் செய்தான். 'என்னவள்... என் சம்யுக்தா...' என்று சும்மா இருந்தவனை சீண்டி வேடிக்கை பார்க்கிறாயா?'

தன் சோகத்தை தன்னுள்ளே புதைத்து... நடமாடினாலும்.... வேலையில் கரெக்டாய் இருந்தான்.

நாட்கள் சென்று அந்த ஞாயிறு வர கலங்கினான்.

'சம்யுக்தா இந்நேரம் அவள் காதலனைப் பார்க்க சென்றிருப்பாள்!'

'அவனோடு பார்க்கில் சிரிக்கச் சிரிக்க பேசி... யார் கண்டா ஓடிப் பிடித்து விளையாடினாலும் விளையாடலாம்!'

'அவன் அவள் மடிதேடி தலைசாய்த்து... கட்டிக் கொண்டு... முத்தமிடுவான்!'

கைகளை பூமாலையாய் கோர்த்து... 'கழுத்தில் தன் அணைத்து... இதழ் தேடி... சுவைத்து... சிலா இழுத்து சித்து... ஐயோ... எனக்கு ஏன் இப்படி ஒரு கற்பனை? அடுத்தவர் பற்றிய வீண் பிரச்சனை?'

சீஸட் விட்டு கிளம்பினான்.

கால் போன போக்கில்... அலுத்து நாள் முழுக்க களைக்கும் வரை சுற்றிவிட்டு வந்து படுத்தான்.

வயிறு மறுத்து நாள் முழுக்கச் சாப்பிடவில்லை.

அந்த களைப்பிலும் தூக்கம் தழுவ மாட்டேன் என்று அடம் பிடித்தது. விடியற்காலையில் உறக்கம் வந்து நீலாம்பரி ராகம் பாடி தூங்க வைக்க... கொஞ்ச நேரத்தில் குருவிகளும், குயில்களும் வந்து பூபாளம் இசைத்து அவனை எழுப்பிவிட்டது.

'உடற்பயிற்சியாவது... மண்ணாவது! இந்த உடலுக்கு இது ஒன்றுதான் கேடா?' என்று வெறுத்து ஸ்ரீ அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் மடியில் வைத்துக் கொண்டு கலங்கினான்.

'தியானம் நேர'

டிசம்பர் மாதத்து குளிரில்... குளிர்ந்த ஐஸ் தண்ணீரிலேயே பற்கள் கிட்ட குளித்தான். மருத்துப்போன உடலினை பராமரிக்காமல்... ஏனோ தானோவென்ற உடுத்திக் கொண்டு... ஒரு டையோடு ஆபீஸ் வந்து விட்டான்.

சம்யுக்தா முகம் கூடுதல் ஒளியுடன் பூவாய் சிவித்திருந்தது.

அவன் முகம் பார்க்க வெட்கினான்.



அவள் உதடு காண நாணினான்.

உதட்டில் கூட சிறு காயம்! அவனை கலவரப்படுத்தியது.

அவளைப் பார்க்க முதலில் எரிச்சல் வந்தது.

பிறகு அதுவே பெரிதாய் ஊதப்பட்டு கோபம் கோபமாய் வந்தது.

'உரிமையுள்ள இடத்தில்தானே கோபம் வரவேண்டும்!'

'விவஸ்தை கெட்ட மனமே... பட்டது போதாதா? பாடம் கற்றும் உனக்கு உறைக்கவில்லையா? ச்சே... உனக்கு எவ்வளவு நேர்ந்தாலும் திருந்தவே மாட்டாயா? ஸ்டுப்பிட் மனமே!' திட்டினான்.

அவனிடம் சில வேலைகளைக் கொடுக்க... அந்த பசி, களைப்பிலும் செய்து முடித்து அவளிடம் நீட்டினான்.

''உட்காருங்க! ஏன் களைப்பா தெரியறீங்க மிஸ்டர் கௌதம்?'' சம்யுக்தா அக்கறையாய் கேட்க...

காலைச் சுற்றும் நன்றியுள்ள ஜீவனாய்... அவன் மனம் அவளைச் சுற்றப் போய்விட்டது.

'ச்சே... என்ன இது அவஸ்தை?' என்று கலங்கினான்.

''சாப்பிடலையா?''

''...........''

''உடம்பு எதுனா சரியில்லையா? முடியலைன்னால் லீவு போட்டுட்டு டாக்டர்கிட்ட காட்டுங்க! உடம்புதான் முக்கியம்! வேலையெல்லாம் அப்புறம்!''

''உடம்பெல்லாம் சரியா இருக்கு!''

''பின்னே?''

மனசுதான் சரியில்லே! அதை சரிப்படுத்த டாக்டர் உண்டா?" சொல்லாமல் தவித்தான்.

"பயணம் பண்ணிட்டு புதுச்சேரி போனீங்களா?"

"இல்லே!"

"சரி கேக்கனும்னு நினைச்சேன்! உங்க அப்பா, அம்மா என்ன பண்றாங்க?"

"இல்லே! அநாதை நான்!" சர்வ சாதாரணமாய் சொல்ல... அவள் அதிர்ந்தாள்.

"என்ன சொல்றீங்க? நிஜமாவா? சரி வொய்ப், குழந்தைங்க இருப்பாங்க இல்ல? பின்னே எப்படி அநாதையாக முடியும்?"

"என்னங்க நீங்க? எனக்குக் கல்யாணமாயிடிச்சின்னு சொன்னேனா?" அப்பாவியாய் கேட்க...

அவளுக்கு ஆனந்தத்தோடு ஒரு அதிர்வு!

"பெரிய குடும்பம்னு சொன்னீங்களே!" நம்பாமல் கேட்க...

"நான் குறிப்பிட்டுச் சொன்னது என் இல்லத்தையும், என் இல்லத்துப் பிள்ளைகளையும்!"

பூமழை பொழிந்த அதிர்வோடு நோக்கினாள்.

அவள் முகம் மலர்ந்து... பூத்துக் குலுங்கியது.

வானத்தில் இருந்த கருமேகங்கள்... சூரியனைக் கண்டதும் விலகி ஓடியது போல... அவளுள் சூழ்ந்திருந்த ஒரு இருட்டு எங்கோ... ஓடி ஒளிந்து கொண்டு மின்னலாய் ஒரு வெளிச்சம் குடிகொண்டது.

மனசெல்லாம் மத்தாப்பு பூத்துக் குலுங்கியது.



கௌதமுக்கு கல்யாணமாகலேன்னால்... எனக்கு எதுக்கு சந்தோசம் வரவேண்டும்?

நான் சராசரி பெண்ணில்லையே! காதலுக்கும், அன்புக்கும் ஏங்கி அடிமைப்பட...! என்னையே அடகு வைத்துக் கொள்ள...! எப்படி என் மனம் இடம் தரலாம்?

இனி ஜென்மா ஜென்மத்துக்கும் காதலுக்கும், கல்யாணத்திற்கும் என் வாழ்க்கையில் சிறு துளி இடம் கூட இல்லை.

ஒரு முறை பட்டு... சூடு வைத்துக் கொண்டது போதாதா?

அது ஆறாத ரணமாய் நெஞ்சில் இருக்க...

சம்யுக்தா துள்ளிய மனதை அடக்கி தன் வசம் வைத்துக் கொண்டாள். கட்டுதறியில் இருந்து துள்ளி, எம்பி குதித்து, ஆர்ப்பாட்டம் செய்த இளம் காளைக்கு ஒரு மூக்கணாங்கயிறு போட்டால் எப்படி அடங்குமோ... அப்படி அடங்கி படுத்துக் கொண்டது அவள் மனம்.

கௌதம் மெல்ல தவிப்போடு கேட்டான்.

"நீங்க நேற்று எங்கேப் போனீங்க?"

"மேட்டுப் பாளையம்!"

"யார் அங்கே?"

"என் மது!"

"பார்த்தீங்களா?"

"நேற்று முழுக்க அவனோடத்தான் சுற்றித் திரிஞ்சிட்டு வரேன்! அவன் என்னை திரும்பவே விடல! நாஸ்தி பண்ணிட்டான் என்னை! நேற்று முழுக்க மடியில

புரள்றதும்... கட்டிக்கிறதும்... முத்தமிடறதும்... அவன் விடவேயில்லை! பதிலுக்கு நானும் அவனுக்கு முத்தமிட்டு என் உதடே ஓய்ந்து. களைச்சிடிச்சி! உதடு வலிக்கக்கூட செய்யுது!'' என்று சம்யுக்தா புன்னகைக்க...

'இவனுக்கு எதைச் சொல்வது? எதைச் சொல்லக் கூடாது? என்று தெரியாதா... ச்சே... இப்படியா ஒரு மனிதனை வெறுப்பேற்றுவது!'

'இதில் இவளைப் பற்றித் தெரியாமல் காதலித்து தொலைத்து விட்டேன். எல்லாம் என் மனம் செய்த குறும்பு!'

''அங்கே என்ன செய்கிறார்? எதுக்கு நீங்க ஒரு இடத்திலும் அவர் ஒரு இடத்திலும் இருக்கணும்? மேனேஜ் பண்ணிக்கலாம் இல்லையா? உங்க வீட்டுல ஒத்துக்கலையா? ம்? விருப்பமிருந்தால் என்னிடம் சொல்லலாம் மேடம்!'' என்று கௌதம் தயங்கி கேட்க...

சம்யுக்தாவோ அவன் பேசப் பேச... வாயைப் பிளந்துக் கொண்டு ஆச்சரியமாய் அவனையே பார்த்துக் கொண்டிருக்க...

''என்ன இது பார்வை? நான் என்ன சொன்னேன்? காதலிக்கறீங்களே... ஏன் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதா?ன்னு கேட்டேன். உங்க பார்வையின் அர்த்தம் புரியலே! உங்க மது என்ன செய்கிறார்?''

''ஒன்றாம் வகுப்பு படிக்கிறாள்!'' பட்டென்று சொல்ல...

''என்னங்க மேடம்... குழப்பறீங்க?''

''நான் குழப்பலே! நீங்கதான் குழம்பிப் போயிருக்கீங்க!''



''மதுமதி என் மகள்!''

கௌதம் புரியாமல் விழிக்க...

''மதுமதி நான் பெத்தப் பெண்! இந்த மணிவயிற்றில் பத்து மாதம் சுமந்து கஷ்டப்பட்டு பெற்ற மகள்!''

''உங்களுக்கு கல்யாணமாயிடிச்சா...? அவர் எங்கே? என்ன செய்கிறார்? நான் பார்க்கவே இல்லையே!'' என்று அவசர அவசரமாய் கேட்க...

''இல்லாத மனுசனை எப்படிப் பார்க்க முடியும்? ஓடிப் போயிட்டான்! என்னை விட்டு ஓடிப் போயிட்டான்! விவாகரத்து ஆன மாதிரிதான்! பணத்தாசை பிடித்த மிருகம்! துரோகி! அவன் ஒரு அக்மார்க் குத்தின துரோகி!'' ஆத்திரத்தில் நரம்புகள் புடைக்க... மேஜையில் ஓங்கி குத்தினாள்.

அவளுக்கு பழைய நினைவுகள் கண்களில் திரக... அவளை அறியாமலேயே சட்டென்று கண்ணீர் பூ மலர்ந்து, பூத்துக் குலுங்கியது.

இங்கே கௌதமின் உள்ளம் துள்ளி குதித்து விசிலடித்தது. குதித்து விளையாடியது.

'என் மனம் பொய்யான... எனக்கு சம்மந்தமில்லாத பெண்ணோடு போகாமல்... சரியாய்த்தான் சென்றிருக்கிறது.'

'இனி, சம்யுக்தாவை காதலிப்பது தப்பில்லை!'

'இன்னொருவனோடு இனிமையாய் இல்லறம் நடத்துபவளைக் காதலிப்பதும், ஆசைப்படுவதும்தான் தப்பு!'

'ஆனால், விவாகரத்து ஆனவளை காதலிக்கலாம்!'

'எதிர்காலம் இருட்டாய் பயமுறுத்தும் சம்யுக்தா விற்கும்... அவனுடைய மகள் மதுமதிக்கும் கலங்கரை விளக்காய் இருக்க... அவனுக்கு பூரண சம்மதமே!'

'என் கண்ணம்மாவை... இனி ஒருபோதும் கை விடமாட்டேன்! கலங்கியழ விடமாட்டேன்!'

வானத்தில் மிதப்பது போல உணர்ந்தான்.

உலகத்து தென்றலெல்லாம் ஒன்றுகூடி... அவன் மனதில் உலா வந்தது.

இதுவரை காதலும், அளவிட முடியாத அன்புமே... அவன் மேல் இருந்தது. இப்போது காதலோடு கருணை யும் கைகோர்த்துக் கொண்டது!

நல்ல செய்தி கேட்டு... இதுவரை மருத்துப் போயிருந்த வயிறு பசித்தது. சாப்பிட வேண்டும் போல இருந்தது. அதுவும் இனிப்போடு சாப்பிட ஆசை வந்தது.

அதைவிட முக்கியமாய் அவள் பழைய வாழ்வு பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வம் வந்தது.

''என்னங்க மேடம்... நீங்க நிஜமாத்தான் சொல் றீங்களா? நம்பவே முடியலையே! இவ்வளவு அழகோட... திறமையோட இருக்க உங்களை விட்டுப்போக எப்படி மனசு வந்தது? இவ்வளவு நல்ல உள்ளத்தோட இருக்க உங்களுக்கு இப்படியெல்லாம் நடக்கணுமா? நம்பவே முடியலைங்க! எங்க? எங்க?''

''என்னைக் கேட்டால்... எனக்கென்ன தெரியும்? அவனைத்தான் கேட்கணும்!''



''என்னிடம் சொல்லக்கூடாதா?''

''ஆபீஸ் டைம்! பர்சனல் பேசக்கூடாது மிஸ்டர்! சொல்றேன்! நிச்சயமா சொல்றேன்! இப்போ நீங்க சீட்டுக்குப் போங்க!'' கொஞ்சம் முகத்தை கடுமையாய் வைத்துக் கொண்டு சொல்ல...

மறுபேச்சு பேசாமல் வெளியே வந்தான், கௌதம்!

சந்தோசத்தில் மனம் இறக்கை முளைத்து மேலே மேலே பறந்தது. ஆனால் நேற்று சாப்பிடாதது... தூக்க மில்லாதது... இன்று காலை ஐஸ் தண்ணீரில் ரொம்ப நேரம் பல்கிட்டும் வரை குளித்தது என்று எல்லாமுமாய் ஒன்று கூடி... கொஞ்ச நேரத்தில் உடம்பெல்லாம் அனலாய் சுட்டது. நூறு டிகிரிக்கு மேல் அதிகமான காய்ச்சல் வந்து வாட்டி வதைக்க...

ரொம்ப முடியாமல் சோர்ந்து மேஜையில் படுக்க... இது சம்யுக்தாவிற்கு தெரியவர... அவன் மறுக்க மறுக்க... அவன் கைப்பிடித்து இழுத்துப் போய் காரில் ஏற்றினாள்.

கார் ஹாஸ்பிட்டல் நோக்கி பறக்க...

கௌதமோ... சம்யுக்தாவின் தொடுகையால்... அவ ளோடு சந்தோசமாய் காதல் தேசம் புறப்பட்டு விட்டான். அந்த அழகு தேவதையைக் கற்பனையில் கட்டி ஆடினான். பாடினான். மகிழ்ச்சியாய் இருந்தான்.

நிஜத்தில் அவளைத் தொடவே முடியாது எனத் தெரியாமல்!

# 5

நான்கு நாட்கள் கடுமையான சுரம்!

கௌதம் ரொம்பவே வாடி, வதங்கிப் போய் விட்டான். ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகி... சம்யுக்தாவின் கருணையால் ராஜபோக வைத்தியம் பார்க்கப்பட்டது.

சம்யுக்தா காலை, மாலை என இருவேளையும் வந்து அக்கறையாய் பார்த்துவிட்டுப் போக... இந்த கடும் காய்ச்சல் வந்ததில் பெரும் சந்தோசமே!

'இப்போ பரவாயில்லையா?' என்று நெற்றியில் கை வைத்து சம்யுக்தா கேட்கும்போது குளிர்ந்து விடுவான். அவள் கையை எடுத்து நெஞ்சில் வைத்துக் கொள்ள அலையலையாய் ஆசைப் புறப்படும். அதனைக் கட்டுப் படுத்திக் கொள்வான்.

சம்யுக்தாவின் தந்தை நடராஜன் விஷயம் கேள்விப் பட்டு அவரும் வந்து பார்த்துவிட்டுச் சென்றார்.

சம்யுக்தாவின் வாழ்க்கை பாழாய் போனதில்... அவருக்கு உடல் நலம் கெட்டு... ஒரு கையும், காலும் வராமல் போய்... அவர் இப்போதுதான் நடக்கிறார். அப் படிப்பட்ட மனிதர் வந்து கரிசனமாய் பார்த்துப் பேச... கௌதம் கலங்கி விட்டான்.

மற்ற கூட்டாளிகளும்... இன்னும் பிற ஆபீஸில் வேலைப் பார்க்கும் பெண்களும் தினமும் வந்து பார்த்துவிட்டுச் சென்றனர்.



'இத்தனை நல்ல பாசமான மனிதர்கள் கிடைக்க என்ன புண்ணியம் செய்தேன்?'

முன்பெல்லாம் தான் ஒரு அநாதை! சொந்தம் என்று சொல்லிக்கொள்ள யாரும் இல்லையே என்று வருந்து வான். அதனைப் போட்டு மனதில் குழப்பிக் கவலை கொள்வான்.

இப்போது கௌதமுக்கு தான் ஒரு அநாதை என்ற உணர்வே அற்றுப் போய்விட்டது. ஊட்டியில் கால் வைத்தபோதே தாய் மண்ணை மிதித்த உணர்வு. இப்போது இத்தனை பேரின் பாசமும் சேர நெக்குருகிப் போனான். உடல் நலம் தேறி ஆபீஸ் வந்தான்.

''நன்றி மேடம்! இந்த அநாதை மேல் அக்கறை கொண்டு... ஆஸ்பத்திரி அழைத்துப்போய்... பெரிய பெரிய வசதிக்காரர்களுக்கு மட்டுமே கிடைக்கும் ராஜ வைத்தியம்... எனக்கும் கிடைக்கச் செய்து... என்னை முழுமையாக குணமாக்கியிருக்கிறீர்கள். நீங்க இல்லேன் னால் நான் என்ன ஆகியிருப்பேன்? இந்த உதவியை என் வாழ்நாளில் என்றுமே மறக்கமாட்டேன்!'' கண்களில் கண்ணீர் பளபளக்கப் பேசினான்.

''சாதாரண ஹெல்ப்புக்கு இத்தனை புகழ்ந்து... கிரீடம் சூட்டணுமா?''

''எத்தனை பேருக்கு தன் தொழிலாளர்கள் மேல் இந்த அளவு அக்கறை வரும்? உங்களுக்கு ரொம்பவே உயர்ந்த மனசு!''

''புகழ்ந்தது போதும்! முழுமையா குணமாச்சா...? ரொம்ப டல்லா தெரியறீங்களே! இன்னும் கொஞ்ச நாள் ரெஸ்ட் எடுத்துட்டு வரக்கூடாதா? எதுக்கு இப்படி

அவசரப்பட்டு வந்தீங்க?" என்று சம்யுக்தா கண்டிப்புடன் கூற... அந்த கண்டிப்பு கௌதமுக்கு பிடித்திருந்தது.

"காலையிலே நாம் நம்முடைய ட்ரைனிங் ஸ்கூல் போகனும். முடியுமா?"

"வரேன்! ஆமா... உங்களுக்கு இருக்கிற பிசினஸ் போதாதா? டீச்சர் ட்ரைனிங் ஸ்கூல்ல நல்ல வருமானமாமே! லட்ச லட்சமா கொட்டி இப்போ டீச்சர் ட்ரைனிங் படிக்கறாங்களாமே! அப்படியா?"

பதில் சொல்லாமல் ஒரு புன்னகையை மட்டுமே பதிலாய் வழங்கினாள்.

கௌதமும், சம்யுக்தாவும் போய் அங்கே நிற்க... பிரின்சிபால் வணங்கி உள்ளே அழைத்துச் சென்று கணக்கு வழக்கு காட்ட... அதை பார்வையிட்டு கையெழுத்திட்டாள். அடுத்ததாய் சில செக்குகளில் கையெழுத்து இட்டு வெளியே வந்தாள்.

அது காலை இடைவேளை நேரமென்பதால் பெண்கள் அனைவரும் வந்து சூழ்ந்து கொண்டனர்.

"மேடம் நல்லா இருக்கீங்களா? மதுக் குட்டியைப் போய் பார்த்தீங்களா? படிக்கிறாளா? உங்களைப் பிரிஞ்சு அடம் செய்யாமல் இருக்காளா? சொல்லுங்க மேடம்?" என்று கூட்டமாய் அங்கு பயிலும் அத்தனைப் பேரும் கேட்க.

"ம்..." என்றாள் பொதுவாய்.

"சார் புதுசா மேடம்? உங்க அசிஸ்டெண்டா?" என்று கேட்ட பெண்களை கௌதம் நோக்கினான்.



எல்லோர் முகத்திலும் ஏழ்மை தாண்டவமாடியது. இவர்கள் எப்படி... அவ்வளவு பணம் கட்டி படிக்க முடியும்? என்று அதிசயித்தான்.

"கௌதம் சார்... நான் ஹாஸ்டல் வார்டனைப் பார்த்துட்டு வரேன்! என்னம்மா ஸ்டடீஸ் எல்லாம் எப்படி போகுது? சீதா... உங்க குழந்தைக்கு உடம்பு சரியில்லேன்னு சொன்னீங்களே... பரவாயில்லையா? என்ன ரம்யா உன் அப்பா உடல் நலம் தேறிட்டாரா?"

"நீங்க மட்டும் சமயத்துல ஹார்ட் ஆபரேசனுக்கு பணம் கொடுத்து உதவலேன்னால்... அப்பாவை புதைச்ச இடத்தில் புல் முளைச்சி காடா மண்டியிருக்கும்! நீங்க தெய்வம் மேடம்!" அந்தப் பெண் கையெடுத்துக் கும்பிட்டு... கண்களில் நீர் கசிய சொல்ல...

"நான் சாதாரண மனுசி! என்னைப் போய் தெய்வத்துக்கு ஒப்பிடாதீயேம்மா! என்கிட்ட இருக்கு. கொடுக்கறேன்!" சாதாரணமாய் சொல்ல...

"எத்தனைப் பேருக்கு இப்படி வாரி வழங்க மனசு இருக்கு மேடம்? எங்களைப் பொருத்தவரைக்கும் உயிரோடு நடமாடுற மனித தெய்வம் நீங்க!"

"இன்னும் கொஞ்ச நேரம் நின்னா... என்னைப் பிடிச்சி உட்கார வைத்து... சுத்தி சுவர் எழுப்பி கோவிலே கட்டினாலும் கட்டிடுவே! வரேம்மா!" என்று அவ்விடம் விட்டு நகர்ந்தாள்.

"நீங்களெல்லாம் இங்கு சேர எவ்வளவு பீஸ் கட்டினீங்க? எவ்வளவு டொனேஷன் கொடுத்தீங்க?" கௌதம் கேட்க...

“பீஸா...? டொனேஷனா...? அதெல்லாம் கட்டி மச்சா டனாளிங் எங்களால் படிக்க முடியுமா? பாதி பேர் ஏழைங்க! சில பேர் விதவைங்க! சில பேர் புருஷனின் கொடுமைக்கு ஆளாகி விரட்டி விடப்பட்டவர்கள்... அதுவும் குழந்தைகளோடு! நாங்க அத்தனைப் பேரும் எந்த பீஸுமே இல்லாமல் படிக்கிறோம்! புக், நோட், யூனிபார்ம், ஹாஸ்டல் எல்லாமே ப்ரீதான் சார்! எங்களுக்கு சம்யுக்தா மேடம் மனது உவந்து செய்யும் உதவி!”

எங்களுக்கு இந்த கல்வியை தானமா வழங்கறாங்க!

“எங்களுக்கு எதிர்பார்ப்பும் இல்லாமல்... கருணையும், யாரோட நிழலாய்கூட படக்கூடாது! பச்சாதாபமும் எங்கள் மேல் உழைச்சி... மத்தவங்கபோல கௌரவமா சம்பாதித்து... நாங்களும் வாழணும்ன்னு... ஏற்படுத்தப்பட்ட பள்ளி!”

“மேடம் எங்களுக்கு கண்கண்ட தெய்வம்!”

“அப்படிப்பட்ட மேடம் டொனேஷனும், பீஸும் எவ்வளவு வாங்கறாங்கன்னு கேட்கறீங்க? மேடம் எதுவும் சொல்லலையா? தற்பெருமையே எங்க மேடத்துக்கு புடிக்காது சார்!”

“அவங்க நல்லா இருக்கணும்! யாராவது ஒரு மகராசன் வரணும்! அவரை மேடத்துக்கு புடிக்கணும்! ரெண்டு பேரும் மணந்து, இன்பமா வாழணும்ன்னு... கடவுள் கிட்ட பிரார்த்தனை செய்துட்டு இருக்கோம்! அந்த கடவுள் எங்கள் வேண்டுதலுக்கு செவிமடுப்பாரா...? மாட்டாரான்னு தெரியலையே!” சொல்லிவிட்டு அப் பெண்கள் அகன்றுவிட...

‘இந்த பெண்கள் கூறும் நபர் நானாக இருக்க வேண்டும். சம்யுக்தாவின் மனதிற்கு என்னைப் பிடித்து



மணந்து... அவளும் நானும் மகிழ்ச்சியாய் வாழ வேண்டும்! கடவுளே... என் வேண்டுதலை நிறைவேற்றேன்!’ உருக்கமாய் கண்மூடி இறைவனிடம் வேண்டினான்.

“என்ன நின்னுட்டே தூங்கறீங்களா...? வேலை முடிஞ்சிடிச்சி. போகலாம்!” என்று சம்யுக்தா முல்லையாய் மலர...

கௌதம் அந்த சிரிப்பில் மயங்கிப் போனான்.

“ஆமா... நீங்க இன்னும் என்னவெல்லாம் ஆச்சரியம் வச்சிருக்கீங்க? வந்த கொஞ்ச நாளிலே உங்களைப் பற்றி கேள்விப்பட்டு... கண்ணுற்று... அதிசயப்பட்டு போயிருக்கேன்! என் மனகல தொட்ட பெட்டா அளவு உயர்ந்துட்டீங்க! ரியலி மேம்!” என்று உணர்ச்சி பொங்க கூற...

“ஆமா... கோர்ஸ்கிட்ட துப்பறிஞ்சீங்களா? நான் என்ன பெரிசா செய்யறேன்? ம்?” புருவம் உயர்த்தி கேட்க...

“உங்க தன்னடக்கம்தான்... உங்களுக்கு மணி மகுடமே! உங்களுக்கு போய்...”

மேலே பேசப்போன கௌதமை சம்யுக்தா அடக்கினாள்.

“என்மேல் இப்படி பரிதாபப்படறது... பச்சாதாபப் படறது... அனுதாபப்படறது எல்லாம் பிடிக்காது, மிஸ்டர் கௌதம்! பொம்பளைங்கிறவள் புருஷனோட நிழலில் ஒண்டி வாழ்ந்தாத்தான் வாழ்க்கை! இல்லேன்னால் அது வாழ்க்கையே இல்லைன்னு நம்ம சமுதாயம் தவறா நினைச்சிட்டு... எங்களை அனுதாபமாகப் பார்க்கிறது! இதுபோல பெண்கள் கல்வி கற்று உயர்ந்தால்... சமுதாயம்

இவர்களைப் பாவமாய் பார்க்காது அல்லவா? இந்த கல்வி அவர்களின் மனக் குழப்பம், தற்கொலையையெல்லாம் நீட்டு போக்கி... தன்னம்பிக்கையை தரும் என்ற நம்பாசையில்தான் இந்த கல்வி தானம்!'' என்று சம்யுக்தா கண்கள் கலங்கச் சொல்ல...

அவளை சட்டென்று தன் நெஞ்சில் சாய்த்து... அவள் விழிநீரை துடைக்க எழுந்த ஆவலை அடக்கிக் கொண்டான்.

உயிர் கொண்ட ஓவியமாய்... சம்யுக்தா அவனுள் ஊடுருவி... உள்ளுக்குள் சென்று ஆழ கால் தடம் பதித்து நின்றாள்.

காபி, தேயிலை எஸ்டேட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

அங்கு வேலை செய்யும் பெண்களோடு பெண்ணாய்... ஒரு கூடையை எடுத்து... அவர்களைப் போலவே பின்புறமாய் மாட்டிக் கொண்டு... தேயிலைத் தோட்டத்தில் இறங்கி... தேயிலையை சம்யுக்தா பறித்துப் போடும் அழகே தனிதான்.

கண் கொட்டாமல் அந்த அழகை பார்த்து உள்ளுக்குள் நிரப்பிக் கொள்வான்.

''வாங்க மிஸ்டர் கௌதம்... சும்மா ஒரு சேஞ்சுக்கு இந்த வேலையை செய்து பாருங்களேன்! வெரி இன்ட்ரஸ்ட்டா இருக்கும். நல்லா மலர்ந்த... முத்தலான இலையைப் பறிக்கனும்! ம்... ம்... அதான் அப்படித்தான் பாருங்க இந்தப் பெண்கள் எல்லாம் தேனீக்கள் போல எவ்வளவு சுறுசுறுப்பா இயங்கறாங்க!''

அவனும் இலையைப் பறித்து அவனுடைய கூடையில் போட்டான்.



தங்கள் முதலாளியம்மா... ஒரு தொழிலாளியாய் மாறி... புடவையை தூக்கி செருகிக் கொண்டு... தேயிலைத் தோட்டத்தில் இறங்கி வேலை செய்தது அவர்களுக்கு பிடித்திருந்ததை முகமலர்ச்சியில் வெளிப் படுத்தியதை கௌதம் கண்டான்.

''தங்கம்மா... உன் மகன் ஒழுங்கா ஸ்கூலுக்குப் போறானா?''

''சாரதாம்மா... உங்க பேத்தி காய்ச்சலில் இருந்து குணமாயிட்டாளா?''

''ஏன் வசந்தி... உன் தங்கை பிரசவத்திற்கு பணம் கேட்டிருந்தாயே... வாங்கிக் கொண்டாயா?''

''கீதா... உன் புருஷன் திருந்திட்டானா? முகமெல்லாம் பளபளக்குதே... ஏன் ஏதாவது விசேசமா?''

என்று ஒவ்வொருவரையும் அக்கறையாய் கேட்க... முகமெல்லாம் சந்தோசத்துடன் பதில் சொன்னார்கள்.

'தொழிலாளியை தட்டிக் கொடுத்து வேலை வாங்கும் சாகசக்காரி!' என்று கௌதம் சம்யுக்தாவை மனதிற்குள் மெச்சிக் கொண்டான்.

காபி தோட்டத்திற்குச் சென்றால்... அங்கும் கொஞ்ச நேரம் அப்பெண்களோடு பேசிக் கொண்டு இறங்கி வேலை செய்வாள்.

சம்யுக்தாவின் எஸ்டேட்டில் விளையும் டீ, காபி பதப் படுத்தப்பட்டு... பேக்கட்டுகளில் அடைத்து... சம்யுக்தா டீ, காபி என்று உலகமே ஏற்றுமதியானது. இந்தியாவிலும் நல்ல விற்பனை.

இந்த வருடம் புதிதாய் தயாரிக்கப்பட்ட சம்யுக்தா இன்ஸ்டண்ட் காபிக்கு ஏகக் கிராக்கி! தயார் ஆக ஆக

விற்பனையாளர்கள் கொள்முதல் செய்துக்கொண்டு போயினர்.

அவர்களுடைய விளம்பரங்கள் டி.வி.க்களில் வருகிறது அதனைக் காணும்போதே சம்யுக்தா காபி, மக்கள் மாறி விடுவார்கள். அவ்வளவுக்கு அந்த விளம்பரம் கவரும்!

"என் மேடம்... உங்க காபியை குடிச்ச மாப்பிள்ளை பையன்... எனக்கு அந்தப் பெண்ணேதான் வேண்டும் என்று... பெற்றோரிடம் அடம் பிடித்து மணப்பதாய் விளம்பரம் வருது! அதுவும் நல்லாத்தான் இருக்கு! ஒரு சேஞ்சுக்கு... ஒரு பெண்ணுக்கு காதலே பிடிக்காது. எந்த ஆணையுமே ஏறெடுத்துப் பார்க்க மாட்டாள். இப்படிப் பட்ட ஒருத்திமேல் ஒருவனுக்கு காதல் வந்து... அவளையே சுற்றிச் சுற்றி வந்து கெஞ்சி, கொஞ்சி காதலைக் கேட்கிறான். அவள் மசியவில்லை! மனமிரங்க வில்லை! அப்பெண்ணிடம் சம்யுக்தா காபியை நீட்ட... வாங்கி பருகியவள்... அதிலிருந்து அவனைச் சுற்றிச் சுற்றி வந்து காதலிப்பதாய் ஒரு விளம்பரம் எடுத்தால் என்ன?" என்று கௌதம் சும்மா விளையாட்டாய் கூற...

"அட... உங்க ஐடியா கூட நல்லா இருக்கே! உடனே நம்ம விளம்பரக் கம்பெனியை தொடர்பு கொள்ளுங்க! உங்க எண்ணத்தை சொல்லி... இந்த விளம்பரத்தை எடுக்க முயற்சி பண்ணுங்க! அதுவும் சீக்கிரமே!"

"நான் சும்மா விளையாட்டுக்குத்தான் சொன்னேன்! உங்களுக்கு என் ஐடியா பிடிச்சிருக்கா?" ஆசையாய் கேட்டான் கௌதம்.

"நல்லதை யார் சொன்னாலும் கேட்டுக்குவேன்! தெரியாமல் தவறு செய்யறவங்களைக்கூட மன்னிப்பேன்!



தெரிஞ்சி தப்பு செய்யறவங்களை மன்னிக்க மாட்டேன்! உடனே எதுனா ஆக்ஷன் எடுப்பேன். அதைப் புரிஞ்சிக் காத சில சிறுசுகள் எனக்கு அல்லிராணி, சர்வாதிகாரி ஹிட்லர், முசோலினியோட தங்கையாகவும், முசுடுன்னு எல்லாம் வர்ணிக்கிறாங்க! நீங்க எனக்கு என்ன பெயர் வச்சிருக்கீங்க?" சாதாரணமாய் சிரித்தபடி கேட்க...

'என் இதயம் கவர்ந்தவள்! தேவதை! கோபப்பட்டு என்னிடம் கத்தும்போது மட்டும்... அழகான ராட்சசி!'

"என்ன எனக்கு எதுவும் பேர் வக்கலியா? இல்ல இனிமேத்தான் வக்கணுமா?"

"என்னங்க... நீங்க? ஜோக்கடிக்கறதுக்கும் ஒரு அளவில்லையா?" கோபமாய் சொல்ல... புரியாமல் பார்த்தாள்.

செர்ரி, ப்ளம் தோட்டத்தில் நன்கு கனிந்ததை பறித்து கழுவி... சாப்பிடச் சொல்லி கௌதமிடம் கொடுப்பாள்.

ஸ்ட்ராபெர்ரி தோட்டத்துக்கு செல்லும் போதும் இதுவே தொடரும்.

அவளுடைய சாதாரண அன்பும், அக்கறையே அவனுக்கு... அவனுடைய உயிர் வரை இனித்தது.

'இதுவே அவளை மணந்து... பாசமழை பொழிந்தால் எப்படி தித்திக்கும்?' நினைத்து நினைத்து ஆனந்தப் பட்டான்.

ஒரு நாள் சொன்னான்.

"சம்யுக்தா மேடம்... நீங்க மட்டும் வர்ற எம்.பி., எம்.எல்.ஏ. எலக்ஷன்ல நின்னீங்க... கண்டிப்பா நீங்கதான் ஜெயிப்பீங்க! இந்த நீலகிரி மாவட்டம் முழுக்க உங்

களைத் தெரியுதே! இந்த சின்ன வயசுல இந்தளவு சாதித்து... உயரம் கண்டு நல்ல பேர் எடுத்திருக்கீங்களே... இதுக்கு உங்க நன்றியை யாருக்கு சொல்வீங்க? கட வுளுக்கா...?"

"அவன்! அவனுக்குத்தான்! அந்த சுயவனுக்குத்தான் என் சிறகு முறித்து சென்ற அந்த ஆனந்துக்குத்தான்!" சம்யுக்தா உணர்ச்சி மேலிட கண்கள் கலங்க மீண்டும் தொடர்ந்தாள்.

"அவன் மட்டும் என்னை நல்லா வாழ வச்சிருந்தா... வீடு, கணவன், குழந்தைன்னு இருந்து என் வாழ்க்கையை ஓட்டிட்டு செத்திருப்பேன்! அவன் என்னை சிதைத்து... சிறகு முறித்துவிட்டு ஓட... அப்பாவும் படுக்கையில் விழ... எப்படியோ என் காயத்திலிருந்து மீண்டு... இத்தனை உயரம் கண்டிருக்கிறேன்! இன்னைக்கி இந்த நீலகிரி மாவட்டமே என்னை தூக்கி வச்சி கொண்டாடு துன்னா... அதற்கு முக்கியமான காரணம் ஆனந்த்தான்! அவன்தான்! அவன் தானே?" அவனிடம் கேட்டு அழுதாள்.

"சொல்லுங்க கௌதம்? நான் இத்தனை வளர... அவன் என்னுள் விதைச்சட்டுப் போன வேதனை, துக்கம், கஷ்டம், அவமானம் என்று எல்லாமேதான்! வெறும் கல்லா இருந்த நான்... இன்று அழகான சிலையா மாற அவன்தானே காரணம்!"

ராட்சச முட்புதரில் தன் கண்களையும், இறக்கையையும் கீறிக்கொண்ட சிட்டுக்குருவியாய்...

சம்யுக்தா மடிந்து, களைத்து, கண்களில் வலியுடன், வேதனையுடன் வீரிட்டு அழுதாள்.



அவளை கண்கொண்டு பார்க்க முடியவில்லை. இதயமெல்லாம் பதற... அவளை என்ன வார்த்தைக் கூறி தேற்றுவது என்று தெரியாமல்... கலங்கி நின்றான், கௌதம்!

# 6

வானமங்கைக்கு வெட்கம் வந்து விட்டதோ... என்னவோ... தன் மேனியெல்லாம் சிவந்து... இரவின் வருகைக்காக காத்திருந்த... பொன்மாலைப் பொழுது!

சம்யுக்தா முன்பு கௌதம் அமர்ந்திருந்தான்.

"நாளை மறுநாள் சென்னையில் நடக்கற கருத்தரங் குக்கு செல்ல வேண்டும் மிஸ்டர் கௌதம். முதல் நாள் விருந்து, ஆட்டம், பாட்டுன்னு அமர்க்களப்படும். இரண்டாம் நாள்... எஸ்டேட் ஓனர்ஸ் யார் அதிகமா விற்பனை செய்து சாதனைப் படைச்சிருக்கான்னு பார்த்து... சாதனையாளர் விருது வழங்கும் விழா நடக்கும்! இந்த வருடம் யாருக்கு அதிர்ஷ்டம் அடிக்குதோ! தேவையான டீடைல்ஸ் எல்லாம் ரெடி பண்ணி வச்சிக் கங்க! எதுவும் மிஸ் பண்ணிடாதீங்க!"

"ஓ.கே. மேடம்!"

அன்று விடியற்காலையில் கௌதம் தயாராகி சம்யுக்தா வீட்டிற்குச் சென்றான்.

பெரிய கேட்! நீளமான காரோடும் பாதை இருபுறமும் பூக்களின் அணிவகுப்பில் நந்தவனமாய் காட்சியளிக்கும் பூந்தோட்டம்! ஒரு பக்கம் டென்னிஸ் கோர்ட், மறுபக்கம் பெரிய நீச்சல் குளம். பங்களாவின் பிரம்மாண்டமே அவனை மிரட்டியது.

கௌதமுக்கு சம்யுக்தாவின் தந்தையை நன்கு தெரியும். ஆனால் அவளுடைய தாயை இன்றுதான் சந்திக்கிறான். மலர்விழிக்கு கௌதமை சட்டென்று பிடித்துவிட்டது.

மலர்விழி கண்களில் கனவுகள் விரிந்து... வண்ண சிறகடித்து பறந்தது.

சம்யுக்தா கிளம்பி அவனருகில் வந்து நிற்க... பெற்றோர் இருவரின் கண்களும் அவர்களின் ஜோடிப் பொருத்தம் கண்டு மகிழ்ந்தது.

நடராஜன், மலர்விழி இருவரின் மனதிலும் கடலளவு ஆசைகள் விரிந்து... ஆலமரமாய் கிளை பரப்பி... விழுது விட்டு ஸ்ட்ராங்காய் நின்றது.

அவள் திருமணம் தோற்ற பின்பு...

இதுவரை யாரோடும் சம்யுக்தாவைப் பொருத்திப் பார்க்காத... அந்த அன்பு உள்ளங்கள்... கௌதமோடு சம்யுக்தாவைப் பொருத்திப் பார்த்து... இருவரும் கண்களாலேயே ஆயிரம் கதைச் சொல்லிக் கொண்டனர்.

ப்ரிட்ஜில் இருந்த பாலை அவசர அவசரமாய் சுட வைத்து... மலர்விழியே காபியை போட்டு எடுத்து வந்து நீட்ட...

"ஓ... தேங்க்ஸ் ஆன்ட்டி!" என்று சிரித்தபடி வாங்கிக் கொள்ள... மலர்விழி மகிழ்ந்து அவனையே நோக்க...



"ஸாரி... ஸாரி மேடம்! உங்களைக் கண்டதும் என்னே தெரியாமல் ஒரு ஒட்டுதல் வந்துடிச்சி! அதான் ஆன்ட்டின்னு அழைச்சிட்டேன். தப்புன்னா மன்னிச்சிக்கங்க அங்கிள். ஸாரி... ஸாரி சார்!" என்று அவன் சட்டென்று வந்துவிட்ட வார்த்தைகளால் தடுமாறி அவதிப்பட...

அதை ரொம்பவே ரசித்த, விரும்பிய நடராஜன் சொன்னார்.

"உங்களுக்கு ஆன்ட்டி, அங்கிள்ன்னு எங்களை அழைக்க பிடிச்சிருந்தா... அப்படியே அழைக்கலாம் தம்பி!"

"தேங்க்ஸ் அங்கிள்! அத்தை.. மகாலட்சுமி கணக்கா... ரொம்ப இளமையா இருக்கீங்களே! அதன் ரகசியம்தான் என்ன?" என்று குறும்பாய் கேட்க...

மலர்விழி வெட்கப்பட்டாள். நடராஜன் கலகலவென சிரித்தார்.

"தம்பி என் பெண்ணை ஜாக்கிரதையா பார்த்துக்கங்க!" என்று நடராஜன் கௌதம் கைப்பிடிக்க...

"என்ன அங்கிள்... அதை நீங்க சொல்லணுமா? நான் பார்த்துக்கறேன்! கவலையே இல்லாமல் அத்தையை கொஞ்சிட்டு ஜாலியா இருங்க!" என்று கௌதம் கண் சிமிட்ட...

"உங்க குறும்பை அப்பா, அம்மாகிட்ட காட்டணுமா?" என்று கௌதமை முறைத்தாள் சம்யுக்தா.

"அப்பா அவர் எப்பவுமே இப்படித்தான். தப்பா எடுத்துக்காதீங்க! இங்க பாருங்க கௌதம். உங்க வாலை சுருட்டிட்டு கிளம்புங்க! நான் வரேம்மா... வரேப்பா!"

என்று கூறி சம்யுக்தா கிளம்ப... கௌதமும் விடை பெற்று கிளம்பினான்.

ஊட்டியில் இருந்து கோயம்புத்தூர் வரை கார் பயணம், அடுத்ததாக கோவையிலிருந்து சென்னை வரை விமானப் பயணம்.

முதன் முதலாய் கௌதம் செய்த விமானப் பயணம், முதலில் பயமும்... பின்னர் பரவசமும் அவனிதயத்தில் குடி கொண்டது. தன் மனதிற்கு பிடித்த பெண்ணின் அருகில் அமர்ந்து... அவள் பேசும் அழகை ரசித்து... அவள் புன்னகையை கண்டு புல்லரித்து... அவள் இழுத்து வெளிவிட்ட மூச்சுக்காற்றை... அவனும் சுவாசித்து... அவள் கண்மூடி கொஞ்ச நேரம் உறங்கிய காட்சியை உள்ளுக்குள் ஓவியமாய் வரைந்து... அந்தப் பயணம் தேனைவிடத் தித்தித்தது.

ஹோட்டல் தாஜ்ஜில் அருகருகாய் அறைகள். அங்கேயேதான் மாலை கருத்தரங்கு.

அவள் ஓய்வு எடுத்துக் கொண்டு இருக்க... கௌதம் குளித்து ரெடியாகி... சம்யுக்தாவின் அறைக் கதவைத் தட்ட திறந்தாள்.

"ரொம்ப போரடிக்குது மேடம். பீச் பக்கம் தானே! போகலாமா? ஏழு மணிக்குதானே கருத்தரங்கு. என்ன சொல்றீங்க? ப்ளீஸ்..." அவன் கெஞ்ச... மறுப்பு சொல்லாமல் அவனோடு கிளம்பினாள்.

மாலை நாலு மணி. பீச்சில் வெய்யில் தெரியவில்லை. ஈரப்பதம் கலந்த தென்றல் இலவசமாய் அவர்கள் மேனி வருட... முன்னுச்சி முடியைச் சிலுப்ப... சம்யுக்தா பேரழகியாய் ஜொலித்தாள்.



காற்றின் அசைவுக்கெல்லாம்... அந்தப் புறமும் இந்தப் புறமும் தாளம் போட்டு தலையாட்டிய... முன்னுச்சி சுருள் முடியை... மெல்ல கைகளால் தீண்டிப் பார்க்க பேராசை யெழ... கௌதம் சிரமப்பட்டு தன்னுள்ளேப் போட்டு புதைத்துக் கொண்டான்.

அவர்கள் தனியிடம் தேடி அமர... ஒரு பூக்கார சிறுமி ரோஜா மலர்களை விற்றுக் கொண்டு அருகில் வர... ஒரு அழகான இளம் சிவப்பு வண்ண ரோஜாவை வாங்கினான். அதை சம்யுக்தாவிடம் நீட்ட...

"இல்லை மிஸ்டர், நான் பூ வச்சிக்கிறது இல்லை. அதுவுமில்லாமல் பூவை செடியில் பார்க்கத்தான் பிடிக்கும். அதைக்கிள்ளி தலையில் சூடிக்கொள்ள பிடிக்காது!" மறுத்தாள்.

"இன்று மட்டும் எனக்காக... காதோரம் செருகிக் கொண்டால்... சாந்தி நிலையம் என்ற படத்தில் நடித்த காஞ்சனா போல இருப்பீர்கள். தூக்கிப் போட்ட கொண்டையும், இழுத்துப் போர்த்திய சேலையுமாய்தான்... அப் படத்தில் காஞ்சனா தோன்றுவார்... பழைய படம், நல்ல படமும் கூட... நீங்க பார்த்திருக்கீங்களா?" என்று கௌதம் சிரித்தபடி கேட்ட...

சம்யுக்தா முறைத்தாள்.

"ப்ளீஸ் மேடம்... நிஜமா காதோரம் செருகிக் கொண்டால் தேவதையாய் இருப்பீர்கள். மறுக்காதீர்கள்!" என்று இளம் சிரிப்புடன் நீட்ட... அந்த முகம் வாடிவிடக் கூடாது என்று வாங்கிச் செருகிக் கொண்டாள்.

'அவன் முகம் வாடினால் எனக்கென்ன?'

'அந்த முகம் வாடிவிடக் கூடாது என்று எனக்கெதுக்கு அவ்வளவு அக்கறை?'

தனக்குள் கேட்டுக் கொண்டாள். ஆனால், அந்த கேள்விகளுக்கு விடைதான் தெரியவில்லை.

"நீங்க சுடிதார், டாப்ஸ், ஜீன்ஸ், மெடின்னு மாடர்ன் ட்ரஸ் போடலாமே! அங்க பாருங்க! அறுபது வயசு கிழவிகூட மாடர்ன் ட்ரஸ்ல கலக்கறதைப் பாருங்க! உங்க ஆறு முழ சேலை காஸ்டியூமை விடவே மாட்டீங்களா?" கௌதம் விளையாட்டுக்கு சொல்லி புன்னகை புரிய...

"மிஸ்டர் கௌதம்..." என்று சம்யுக்தா முகம் சுளித்து எரிச்சலாய் சீற...

"இங்க நான் உங்கள் தோழன்! வெறும் கௌதம்னு கூப்பிடுங்க. மிஸ்டரையும், மேடத்தையும் தூக்கி கொஞ்ச நேரம் தூரப் போடலாமே! என்ன?"

"ஆமா சம்பளத்தை என்ன செய்தீர்கள்? தார்ட்டி தவுசன் போதுமா?" கேட்டாள்.

"தங்குமிடம் ப்ரீ சாப்பாடு ப்ரீ பிறகு எனக்கென்ன செலவு? இதுவே அதிகம். ஒரு முதியோர் இல்லத்துக்கு ஐயாயிரம் அனுப்பறேன். அடுத்த பிறவியிலாவது அநாதையாய் ஆகாமல் தாய், தந்தையோடு, உற்றார் உறவினரோடு பிறப்பேன்..! பிறக்க வைப்பான் கடவுள் என்று!" சட்டென்று முகம் வாடி கௌதம் சொல்ல...

"இங்க பாருங்க கௌதம். நாங்கெல்லாம் இருக்கோம் இல்லையா? அப்புறம் எப்படி நீங்கள் அநாதையாவீர்கள்? சொல்லுங்க! வருந்தாதீங்க! சரி மீதியை என்ன செய்ய றீங்க?" சம்யுக்தா பாசமாய் பேச... கண்கள் பொங்கியது.

"நாலுபேரை காலேஜ்ல படிக்க வைக்கிறேன்! வசதியில்லாத வீட்டுப் பிள்ளைகள்! அவர்கள் அக்கௌண்ட்டுக்கு ஆளுக்கு ஐயாயிரம் எனப் பிரித்து



அனுப்பிவிட்டேன். மீதி ஐயாயிரம் எனக்கு!" சாதாரணமாய் கௌதம் சொல்ல...

"என்ன ஆச்சரியம்?" சம்யுக்தா கூறி மலர...

"நீங்க நாலாயிரம் பேருக்கு நல்லது செய்யும்போது... நான் நாலு பேருக்கு செய்யக்கூடாதா? வேலை கிடைச்சதிலிருந்து செய்யறேன்!"

"எவ்வளவு நல்ல மனசு! சேமிப்பு எதுவும் இல்லையா?"

"ஒரு லட்சம் தேறும். இருக்கு! சேமிச்சி என்ன பண்ணப் போறேன்! சம்பாதிக்கிற பணத்துல நாலு குழந்தைங்க அறிவுக்கண்ணைத் திறப்பதே... எனக்கு ஆத்ம திருப்தி!"

"ரொம்ப சுவாரசியமான மனிதரா இருக்கீங்க! ஐ லைக் யூ!" என்று சம்யுக்தா கூற...

சட்டென்று வானத்தில் மிதந்தான். உலகத்து சந்தோசமெல்லாம் ஒன்றுகூடி அவனிதயத்தில் நடைப் போட்டது. 'இதற்கே இத்தனை மகிழ்ச்சியென்றால்... அவள் 'ஐ லவ் யூ!' சொன்னால் இன்னும் எத்தனை சந்தோசமும்... பரவசமும் அடையும்... இந்த கள்ள மனசு!'

"ஹலோ... கௌதம்... எங்க இருக்கீங்க? கண்ணைத் திறந்துட்டே எதுனா கனா காணறீங்களா?" அவள் முகமருகே கையை சொடுக்க... அவன் முகத்தை சிலுப்பி... நினைவுக்கு வந்தான்.

"அடுத்த முறை மதுவைப் பார்க்கப் போகும்போது என்னையும் அழைச்சிட்டுப் போறீங்களா? மதுவைப் பார்க்கணும் போல ஆவலா இருக்கு. என்னோ தெரியல!"

"சரி" என்று கூறிவிட்டு அவள் சுற்றுப் புறத்தை வேடிக்கை பார்க்க...

"ஏதுனா பேசுங்களேன்?"

"என்ன பேச?"

"உங்களைப் பற்றி! உங்க ஆனந்த் பற்றி!" கேஷுவலாய் கேட்க...

சம்யுக்தா முகம் நிமிடத்தில் சிவந்து... கோபமானாள்.

"அதுயென்ன உங்க ஆனந்த்? அவனை நினைக்கவே அருவெறுக்கும்! ஏன் அவனைப் பற்றிய பேச்சை எடுக்கறீங்க? ச்சே!" கத்தினாள்.

அவள் கோபம் அவனை கதிகலங்க வைத்தது.

"ஸாரி... ஸாரிங்க!"

"இனி இது போல பேசாதீங்க கௌதம்! யோசிச்சி பேசக் கத்துக்கங்க! அடுத்தவங்க மனசு புண்படறா போல வார்த்தையை கொஞ்சமும் யூஸ் பண்ணாதீங்க! எனக்கு ஆறின புண்ணை திரும்பவும் கத்திக் கொண்டு கீறி விட்டாப்போல வலிக்குது. கௌதம்! ஏன்? ஏன் கௌதம்? என்னோட செகரட்டரி நீங்க! அந்த லிமிட்டைத் தாண்டக் கூடாது! புரியுதா? நான் நல்லா இருக்கிறது உங்களுக்கு புடிக்கலையா?" கண்களில் நீர் லேசாய் எட்டிப் பார்த்தது.

"ஆபீஸ்லதான் உங்க செகரட்டரி! இப்போ நான் உங்க நண்பன். தினம் தினம் இப்படி இருக்குமோ... அப்படி இருக்குமோன்னு... புதுசு புதுசா ஏதுனா சிந்திச்சிக் குழம்பறேங்க! ப்ளீஸ்..."

சம்யுக்தா அமைதியாய் இருந்தாள்.



கண்களில் ஆழ்கடலின் அமைதி! உள்ளமோ உலைக் கலமாய் கொதித்துக் கொண்டிருந்தது.

வலிக்க வலிக்க அந்த நாள் நினைவுகளை எடு திருப்பிச் சொல்ல ஆரம்பித்தாள், சம்யுக்தா.

# 7

சம்யுக்தா எல்.கே.ஜி.யிலிருந்து பனிரெண்டாம் வகுப்புவரை படித்தது எல்லாமே மது இப்போது படித்துக் கொண்டிருக்கும் மேட்டுப்பாளையம் சரஸ்வதி வித்யாலயா பள்ளியில்தான். பெண்கள் மட்டுமே பயிலும் பள்ளி. ஒத்தப் பிள்ளையானாலும் ஆண்கள் வாடையே தெரியாமல் இருக்க... அப்பள்ளியில் சேர்த்து விட்டனர்.

அந்த பள்ளியில் பிரின்ஸ்பால் முதல் கேட் காவலாளி வரை வெறும் பெண்கள் மட்டுமே! அவ்வளவு கரெக்டான பள்ளி! அவளை விடுமுறையில் அழைத்துச் செல்லவும், பின்னர் அவளைக் கொண்டு வந்து விடவும் நடராஜனே வருவார்.

சொந்த பந்தம் என்று சில சொற்ப ஆண்களைத் தெரியும்! அதுவும் சித்தப்பா, பெரியப்பா, அவர்களுடைய பிள்ளைகள். அதுவும் மலர்விழி பக்கத்து சொந்தங்கள் இவர்களெல்லாம்!

எந்த ஒரு விழாவாக இருந்தாலும் அவளை அழைத்துச் செல்ல மாட்டார்கள். அப்படி ஒரு பாதுகாப்பாய்...

சம்யுக்தாவை வளர்த்ததன் காரணம்? நடராஜனின் தங்கை தேவிதான்!

நல்ல அழகி! கள்ளம் கபடு இல்லாதவள்!

சிறு வயதிலேயே தாயும், தகப்பனும் இறந்து விட... அவளுக்கு தாயாகவும், தந்தையாகவும், சகோதரனாகவும் மாறி... அவளை கண்ணின் கருமணியாய் பாதுகாத்து வந்தார் நடராஜன்.

நடராஜனின் உயிரும்... உலகமும் தங்கைதான்!

எந்தச் செயலையும் அவளைக் கேளாமல் செய்ய மாட்டார். அப்படி ஒரு பாசப்பிணைப்பு.

இருவருக்கும் வயது வித்தியாசம் நிறைய!

கோயம்புத்தூரில் ஸ்பின்னிங் மில்ஸ், மாடர்ன் ரைஸ் மில்ஸ், சில்க் ஹவுஸ், கோல்டு ஹவுஸ் என்று ஏகப்பட்ட பிசினஸ் உள்ள பெரும்புள்ளி வீட்டிலிருந்து... நடராஜனை தேடி வந்து சம்மந்தம் பேசிவிட்டுச் சென்றார்கள். காரணம்? நடராஜனின் நல்ல குணம்... எந்த கெட்டப் பழக்கமும் இல்லாமல் எளிமையாய் முன்னேறி வருபவன். நல்ல திறமையான இளம் பிசினஸ் மேனும் கூட அவன்! அந்த தகுதியே அவருக்கு பெரிய இடத்திலிருந்து வலிய வந்து... பெண் கொடுக்க முன் வந்தனர். அவருக்கும் அப்பெண்ணை நிரம்பவே பிடித்து விட்டது. தேவியும் தனது அண்ணியாக வரப்போகிறவளின் அழகில் சொக்கித்தான் போனாள்.

ஆறு மாதம் கழித்து கல்யாணம் எனப் பேசப்பட்டது. அவரும் தலையாட்டி வைத்தார்.



இதற்கிடையே படப்பிடிப்பு குழு ஒன்று சென்னையிலிருந்து ஊட்டிக்கு வந்தது. நடராஜனின் எஸ்டேட், பழத்தோட்டங்களில் வீட்டில் என படப்பிடிப்பு நடத்த அனுமதி கேட்க... அவரும் சம்மதித்தார்.

தேவிக்கும் சந்தோசம். ஆசையாசையாய் ஷூட்டிங் பார்த்தாள். அவளுக்கு பெருமை தலை கொள்ளவில்லை. தன் தோழிகளை அழைத்து வந்து காட்டினாள்.

அந்த படப்பிடிப்பு குழுவில் அசிஸ்டெண்டாய் வேலைப் பார்த்த... அழகிய இளைஞன்... இவளையே நோக்க... தேவியும் அவனையே நோக்க... அந்தப் பார்வை பரிமாற்றத்தால்... அவளுக்கு காதலும்... அவனுக்கு ஆசையும் பிறந்தது.

அவனுடைய அழகான பேச்சில் மயங்கி விட்டாள்.

படப்பிடிப்பு குழு எல்லாமும் முடிந்து கிளம்பியும்... அவன் அங்கேயே தங்கி... தேவியிடம் பசப்பு வார்த்தைகள் கூறி... அவளையும் தன்னோடு யாருக்கும் தெரியாமல் இரவோடு இரவாய் அழைத்துக் கொண்டு சென்றான்.

அவளைவிட... அவள் கொண்டு வந்த ஏராளமான நகைகளையும், பணத்தையும் அவன் விரும்பினான்.

ஒரு கோயிலில் வைத்து தாலிகட்டி குடும்பம் நடத்தினான்.

ஊட்டியில் நடராஜனின் தங்கை ஓடிப்போய் விட்டாள் என்ற செய்தி பரவி... அவரால் வெளியே நடமாட முடியாமல் அவமானப்பட்டுப் போனார்.

கோயம்புத்தூரிலிருந்து பெண் வீட்டார் வந்து உறவை முறித்துக் கொண்டு போனார்கள்.

"நல்ல பையன்... ஒழுக்கமான குடும்பம் என்று தான் உனக்கு பெண் கொடுக்க முன் வந்தோம்! உன் தங்கை இப்படி தரம் கெட்ட ஓடுகாலியா இருப்பான்னு நினைச்சி கூட பார்க்கலே! நீ வேறப் பொண்ணைப் பார்த்துக்கோ! ச்சே! இந்த மாதிரி விவஸ்தை கெட்ட குடும்பம்ன்னு தெரியாமல் சம்பந்தம் பேசிட்டோம்! வரோம்!" என்று காறி முகத்தில் துப்பாத குறையாய் சென்று விட்டனர்.

நடராஜன் அவமானத்தால் தவித்தான். தத்தளித்தான்.

இங்கே சென்னையில்...

தேவி போட்டிருந்த. கொண்டு வந்த நகையையும், பணத்தையும் சுருட்டிக்கொண்டு... அந்த கயவன் வயிற்றுப் பிள்ளையோடு... தேவியை தவிக்க விட்டு விட்டு சென்றுவிட... மீண்டும் நிறைமாத கர்ப்பிணியாய் ஊட்டி வந்தாள். அண்ணனைக் கண்டு அழுது அலற...

நடராஜன் தகாத வார்த்தையால் திட்டி... தேவியை அனுப்பிவிட... அவள் எங்கே போனாள்...? என்ன ஆனால்? என்றே இன்னமும் தெரியாது.

நடராஜன் பின்னர் மனம் வருந்தி தேட தேவி கிடைக்கவே இல்லை. கொஞ்சம் மனக்காயம் ஆறியதும்... ஒரு ஏழை வீட்டில் வாடிக் கொண்டிருந்த மலர்விழியை நடராஜன் திருமணம் செய்தார்.

மறு வருடமே சம்யுக்தா பிறந்தாள்.

தனது தங்கை போல சம்யக்தா ஆகிவிடக் கூடாது என்று சிறுவயதிலிருந்தே கண்டிப்புடனும், கறாருடனும் வளர்த்து வந்தார்.

தந்தைக்கு அடங்கியே பழக்கப்பட்டவள். அவர் நினைப்பதைவிட நல்ல முறையில் வளர்ந்து வந்தாள்.



சம்யுக்தா கொஞ்சம் முரட்டுத்தனமாய், முகடாய், கோபக்காரியாய்தான் வளர்ந்தாள். பெண் தோழிகள் கூட அதிகம் கிடையாது. அவள் கவனம் முழுக்க படிப்பில் தான். பனிரெண்டாம் வகுப்பில் மாவட்டத்தில் முதலாவதாய் வந்து தேர்ச்சி பெற்றாள்.

சம்யுக்தாவின் மதிப்பெண்ணிற்கு எளிதாய் மருத்துவப் படிப்பு படிக்க இடம் கிடைக்கும். ஆனால் அவள் பிசினஸ் பற்றிய படிப்பு படித்து... அப்பாவுக்கு உதவவே ஆசைப் பட... அவரும் மறுப்பு சொல்லாமல் சேர்த்து விட்டார்.

கல்லூரி படிப்பு கோயம்புத்தூரில்... அதுவும் பெண்கள் மட்டுமே பயிலும் மகளிர் கல்லூரி!

இந்த சமயம் ஆனந்த் என்ற இருபத்து மூன்று வயது இளைஞன் நடராஜனின் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தான்.

அவனின் வேலை செய்யும் பாங்கு, சுறுசுறுப்பு, அவனால் கம்பெனிக்கு ஏற்பட்ட லாபங்கள் எல்லாவற்றையும் கண்ணுற்ற நடராஜன் இரண்டு வருடத்திலேயே மேனேஜராய் பதவி உயர்வு கொடுத்தார்.

ஆனந்தும் நடராஜனுக்கு விசுவாசமாய் இருந்தான். அவன் மேல் நல்ல மதிப்பு வைத்திருந்தாலும்... வீட்டுக்கெல்லாம் அழைத்து வந்ததில்லை.

ஆனந்த் நடராஜனுக்கு விசுவாசமாய் இருந்ததுக்கு காரணம்... அவருடைய பெரும் சொத்தின் மேல் இருந்த அளவிட முடியாத ஆசையால்தான்! சம்யுக்தாவைப் பற்றி கேள்விப்பட்டு... அவளை மணந்தால்... எல்லா சொத்தும் தமக்கே சொந்தமாகும் என்ற பேராசையால்... அவரிடம் நல்லவனாய் வேடம் போட்டும்... நல்ல பேரெடுத்து

அவரின் மனதில் இடம் பெற நிறைய கஷ்டப்பட்டும் உழைத்தான். அவன் உழைப்பால் கம்பெனி உயர... அவர் மனதில் ஆனந்த் உயர்ந்தான்.

மூன்றாம் வருட கல்லூரிப் படிப்பில்... முதன் முதலாய் விடுமுறைக்கு சம்யுக்தாவைப் போய் கல்லூரியிலிருந்து அழைத்து வா ஆனந்தை அனுப்பினார்.

சம்யுக்தா கேட்டருகே வந்து... அப்பாவைத் தேட... அவரில்லாமல் ஒரு புது இளைஞன் காரில் ஒயிலாய் சாய்ந்து நின்று கொண்டிருந்தான்.

சம்யுக்தா அருகில் போனாள்.

"யூ... யூ மிஸ் சம்யுக்தா...?" அவன் கேட்க...

"யெஸ்! நீங்க யார்? என் அப்பா எங்கே?" கேட்க...

"சார் வர்லீங்க! என்னை அனுப்பி வச்சார். நான் உங்க கம்பெனி மேனேஜர்! உட்காருங்க!" கார் கதவை திறந்து விட...

சம்யுக்தா நம்பாமல் அப்பாவிடம் செல்லில் பேசினாள்.

"சம்யூம்மா... என்னால் முடியலடா. நம்ம மேனேஜர்... நல்லவர்! அவரோட புறப்பட்டு வாம்மா!" என்று கெஞ்ச...

"என்னப்பா நீங்க?" என்று கடுமையாய் கேட்டுவிட்டு... வேண்டா வெறுப்பாய் அவனை ஏறிட்டுக் கூட பாராமல்... பின் சீட்டில் அலட்சியமாய் ஏறி அமர...

ஆனந்த் அவமானமானான். முன் சீட்டில் உட்காருவாள் என்று எதிர்பார்த்தவன்... ஏமாற்றமும் அடைந்தான்.

எந்தப் பெண்ணும் அவனைக் கண்டால் திரும்பித் திரும்பி பார்த்துவிட்டுத்தான்... செல்லுவாள்! ஆனால்



சம்யுக்தா அவனையும், அவன் அழகையும், கம்பீரத்தையும் அலட்சியப்படுத்திவிட்டு... ஒரு புத்தகத்தைப் பிரித்துக் கொண்டு படித்ததைக் கண்டு... அவன் முகம் கறுத்தது.

அதனை தன் ஆண்மைக்கும், கம்பீரத்துக்கும், அழகுக்கும் ஏற்பட்ட இழுக்காய்... அவமானமாய் உணர்ந்தான்.

ஆனந்த் அதையெல்லாம் முகத்திலிருந்து மறைந்து... அவளை வசீகரித்து... தன் பக்கம் இழுக்க பேச்சக் கொடுத்தான்.

"சம்யுக்தா... கல்லூரியில நாள் முழுக்க படிச்சது போதாதா...? பயணம் பண்ணும்போது படிக்கணுமா...? தலைவலி வந்துடப் போகுதுங்க! மூடி வையுங்க! எதுக்கு கண்ணையும், உடலையும் கெடுத்துக்கிறீங்க? எதுனா பேசங்க! கார் ஓட்டுவது எனக்கும் எளிதாய் இருக்கும்!" என்று சொன்ன ஆனந்தை நிமிர்ந்து ஒரு முறை முறைத்துவிட்டு மீண்டும் புத்தகத்தில் கவிழ்ந்தாள்.

ஆனந்துக்கு ஓங்கி கன்னம் பழுக்க அறைந்தது போல இருந்தது.

"என் பேர் ஆனந்த்! எம்.பி.ஏ. கோல்ட் மெடலிஸ்ட்! நீங்க என்ன படிக்கறீங்க?"

"................"

"என்ன பேசவே மாட்டீங்களா?"

"................"

"உங்க மௌனம்கூட அழகுதாங்க!"

ஆனந்தை எரிமலையாய் முறைத்தாள்.

"உங்க முறைப்புகூட வொண்டர்புல்!"

'மடையா, வாயை மூடி உன் வேலையை பாருடா!'

"என்னங்க பேசினால்... உங்க வாயில் உள்ள முத்துக்கள் அனைத்தும் உதிர்ந்துடும்ன்னு பயமா?" மீண்டும் தொண தொணக்க...

அவளுக்கு வயிரெல்லாம் எரிந்தது.

"மிஸ்டர் உங்க வேலையென்னவோ அதைச் செய்யுங்க! தேவையில்லாமல் பேசாதீங்க! தலையை வலிக்குது!"

ஏனென்றே தெரியவில்லை. அவளுக்கு ஆனந்தை பிடிக்கவில்லை. அவனிடம் கள்ளமும், கபடும் நிறைய இருப்பது போலப் பட்டது. பேச்சில் செயற்கை முலாம்! போலியாய் பேசி... போலியாய்ச் சிரிப்பதாய்... அவளுக்குத் தோன்றியது.

உள்ளொன்று வைத்து... புறமொன்று பேசுவதாய் அவள் மனதுக்குப்பட்டது.

இவனை எப்படி அப்பாவுக்குப் பிடித்தது? அப்பாவின் நன் மதிப்பை எப்படிப் பெற்றிருப்பான்? மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டாள்.

அன்றைய பயணம் அவனுடைய அறுவையாலும்... தொண தொணப்பாலும் நீண்டு... ஒரு வழியாய் முற்றுபெற...

அப்பாவைக் கண்டதும் எரிச்சலானாள்.

"என்னப்பா... நீங்கள் வராமல்?" என்று ஆனந்த் முன்பே அப்பாவை அதட்ட...



'என்ன திமிர்? எத்தனை அலட்சியம்? எத்தனை அளவு ஒரு ஆணை அவமானப்படுத்துவாள்?'

ஆனந்த் உள்ளம் உலைக்கலமாய் கொதித்தது.

'இவளை சும்மாவிடக் கூடாது! என்ன செய்யலாம்?' யோசித்தான்.

'காதலித்து ஏமாற்றலாமா?'

'கல்யாணம் செய்து அத்தனை சொத்துக்களையும் தன் பெயரில் எழுதிக் கொண்டு... பின்னர் விற்று... சுருட்டிக் கொண்டு ஓடிவிடலாமா?'

'கல்யாணம் செய்து... சொத்துக்களை ஏமாற்றி... தன் பெயரில் எழுதிக் கொண்டு... அவளை ஒரு அடிமையாய்... ஒரு வேலைக்காரியாய்... தன் தேவைகளுக்கு என்னிடம் கையேந்தும் பிச்சைக்காரியாய்... நல்ல சவுக்கடி கொடுத்து... நாயை விட கேவலமாய் இந்த சம்யுக்தாவை நடத்தலாமா?'

அவனுக்கு மூன்றாவது ஐடியா பெட்டராகவும், பிடித்தும் இருந்தது.

'கல்யாணம் செய்ய வேண்டுமானால்... இன்னும் நல்லவனாய் தன்னை பட்டைத் தீட்டிக் கொள்ள வேண்டும்!'

'அவர்கள் வீட்டுக்குள் நுழைய வேண்டும்!'

'சம்யுக்தா குட்டி மனதில் இடம் பிடிக்க... பல மன்மதக் கலைகளைக் காட்ட வேண்டும்! மயக்கி மடியில் போட்டுக் கொள்ள வேண்டும்!'

'என் வெல்லக்கட்டிப் பேச்சில் மயங்காதவள் எவளாவது இந்த உலகில் இருக்க முடியுமா? இதுவரை

எத்தனை எத்தனை பேரழகிகளை மயக்கி மடியில் போட்டு இருப்பேன்!'

ஆனந்த் மெதுவாய் காய்களை நகர்த்தினான்.

அவரின் உடல்நிலையைக் காரணம் காட்டி... எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டு செய்து... அவரை ஆபீஸ் வரவிடாமல்... அவனே பார்த்துக் கொண்டு... மெல்ல மெல்ல வீடுவரை வந்தான்.

முதலில் காபி... பின்னர் ஜூஸ்... பின்னர் பழ சாலட்... அதற்கடுத்து நடராஜனுக்கு சமமாய் அமர்ந்து சாப்பிட்டான்.

சில நாட்கள் வேலையை விளக்கிவிட்டு போலியாய் கொட்டாவி விட அவரும் அவனை சில நாட்கள் படுக்கச் சொல்ல .. அது பல நாட்களாய் நீண்டு... பின்னர் வீட்டிற்குப் பின்புறம் உள்ள கெஸ்ட் ஹவுஸுக்கு வந்தான். சொந்த வீட்டைப் போல புழங்கி... மூன்று வேளையும் உண்டான்.

அடுத்த முறை அவளை அழைக்க அவன் வந்தபோது... முகத்தை சுளித்து வேண்டா வெறுப்பாய் ஏறி அமர்ந்தாள்.

'இருடி... கூடிய சீக்கிரமே என்னைப் பார்த்து அலட்சியப் படுத்தும் முகரையை ரத்தம் வராப்பல பேத்துடறேன்.' மனதிற்குள் கறுவினான்.

'எப்படிப்பட்ட சிங்கத்தையே அடக்கி... பிடரி மயிரை கொத்தாய் பிடித்து ஏறி முதுகில் அமர்ந்து விட்டேன்...! நீ எம்மாத்திரம்? உன்னை வளைக்க என்னால் முடியாதா?'

''என்ன சம்யுக்தா களைச்சி தெரியறே? எதுனா சாப்பிட்டு விட்டுப் போகலாமா? எனக்கும் கொலைப்பசி!''



''அதெல்லாம் ஒண்ணும் இல்லே! நீங்க காரை வீட்டுக்கு விடுங்க! ரொம்பமா எதுனா அறுக்காதீங்க! வாளும், பிளேடும், ரம்பமும் இல்லாமல் மனுசாளை அறுக்கிற திறமை உங்க வார்த்தைகளுக்கு உண்டு. கொஞ்சம் வாயை மூடி செயலில் காட்டுங்க! சீக்கிரம் வீடு போய் சேரணும்!'' என்று சிரிப்பை அடக்கி நறுக்கென்று சொல்ல... முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டான்.

வீட்டினுள் செல்ல... அவனும் பின் தொடர்ந்தான். ஷோபாவில் ஹாயாய் காலை நீட்டி அமர... மலர்விழி மகளைப் பார்ப்பதைவிட்டு... அவனுக்கு காபியும், ஸ்நாக்ஸும் எடுத்து வந்து நீட்ட... ஆச்சரியமாய் பார்த்தவளுக்கு பின்னர் அனைத்தும் புரிய கொதித்து விட்டாள்.

''ஏம்மா... உனக்கும் அப்பாவுக்கும் புத்தி எதுனா கெட்டிடுச்சா? அப்பா... அந்த ஆளை முதல்ல வீட்டை விட்டு துரத்துங்க! எனக்குப் பிடிக்கலே! எப்படி இருந்தவர்... இப்படி மாறிட்டீங்களே!'' மனம் பதை பதைக்க பேசினாள்.

''ஆனந்த் நல்ல பையன்மா! எவ்வளவு ஹெல்ப்பா இருக்கான்! தெரியுமா? என்னை ஆபீஸுக்கு வரவிட மாட்டேங்கிறான் இப்போ எல்லாம்! கம்ப்ளீட்டா நான் பெட் ரெஸ்ட்ல இருக்கேன். தொழிலை முன்னுக்குக் கொண்டு வரான். அவனால் எக்கச்சக்க லாபம்! நம்பிக்கையா தெரியத்தான் கெஸ்ட் ஹவுஸ்ல குடி வச்சிருக்கேன்!''

''அப்பா நீங்க செய்யறது எதுவுமே எனக்குப் பிடிக்கலே! வேணாம்பா! ஆகாயத்துல போற சனியை ஏணி

வச்சி இறக்கிடாதீங்க! நான் எப்படி புரிய வைப்பேன்! அவனைப் பார்த்தா நல்லவனா தெரியல! பொறுக்கி போல இருக்கான்! பேச்சில செயற்கைத்தனம்! நடத்தையில ஈனத்தனம்! என்னால் உங்களுக்கு எப்படி விளக்கறதுன்னே தெரியலையே!''

''நீ ஒண்ணும் சொல்ல வேணாம். ஆனந்தோட பழகினா அவனுடைய இனிமை தெரியும்! நீ முதல்ல போய் குளிச்சுச் சாப்பிடு!'' கடுமையாய் பேசினார்.

அப்பாவை மறுத்து இன்று இவ்வளவு பேசியதே அதிகம் என்பதால்... கண்கள் கலங்க நகர்ந்தாள்.

அவன் பார்வை, பேச்சு, அந்த வீட்டில் எடுத்துக் கொள்ளும் உரிமை, சில சமயம் அவளையே அதட்டினான். எதுவும் பிடிக்காமல் போக அந்த விடுமுறையில் சீக்கிரமே ஹாஸ்டலுக்கு திரும்பினாள்.

அத்தையை ஏமாற்றிய ஆணினத்தையே பிடிக்கவில்லை! அத்தையின் காதல் பொய்த்துப் போனதால்... காதலே அடியோடு பிடிக்காமல் போனது. அவளுக்குத் தெரிந்த நல்ல ஆண் அப்பா மட்டுமே!

நடராஜனை ஏமாற்றிவிட்டு... அவனே வந்தான். போதாக் குறைக்கு வாரத்தில் ஒரு நாள் அவளிடம் அக்கறைப் போல காட்டிக் கொள்ள வர... சம்யுக்தா எரிச்சலானாள்.

சில நாட்கள் வருவான். அவளிடம் முகத்தை நெறித்துக் கொண்டு கள்ளென்று பேசிவிட்டுப் போய் விடுவாள்.

சில நாட்கள் வரவே மாட்டான். காத்துக் கிடந்து திரும்புவான்.



எத்தனை இனிமையாய் பேசினாலும் சம்யுக்தா மசியாமல் போக... அவளுக்கு பொறாமையை தூண்ட மற்ற பெண்களைக் கிண்டலடிப்பான். அவள் அதனை பொருட்டாகவே எடுத்துக் கொள்ளமாட்டாள்.

''சம்யுக்தா அந்த நீலச் சுரிதார் காரியை பாரேன்! எப்படி கிக்கா இருக்கா! அந்த ப்ளாக் டைட் ஜீன்ஸ், வொய்ட் பனியன்காரி எப்படி பூசணாப்போல கொழுக் மொழுக்குன்னு இருக்கா பார்! அந்த மாதிரி இருக்கறவளை கட்டிகிட்டாத்தான் சுகமா இருக்கும்! உன்னைப் போல வத்தலா இருக்கவளைக் கட்டிட்டா எப்படி கிக் வரும்? சில பெண்கள் அழகைப் பாதுகாக்கறேன்னு சொல்லிட்டு... சாப்பிடாமல்... கண்ணுல உன்னைப்போல உயிரை வச்சிட்டு அலையுதுங்க! எனக்கு அப்படி உள்ள பொண்ணுங்களை சுத்தமாப் பிடிக்காது! நீ கூட நல்லா சாப்பிட்டு உடம்பைத் தேற்று!''

''எதுக்கு நான் உடம்பைத் தேற்றணும்! அதைச் சொல்ல நீங்க யார்?'' சீறினாள்.

''நானா? பின்னாடி கொஞ்ச நாள் கழிச்சி நான் யாருன்னு சொல்றேன், கண்ணு!'' என்று செல்லமாய் கன்னத்தில் தட்ட... கொதித்துப் போனாள்.

''இந்த மாதிரி வேலையெல்லாம் என்கிட்ட வச்சிக்காதீங்க! கன்னத்துல அறைஞ்சிடுவேன். கொஞ்சம்கூட வச்சிப் பார்க்க மாட்டேன்! ஜாக்கிரதை! அப்பாட்ட சொன்னா உங்க வேலையே போயிடும்!''

''சொல்லேன்! அவர் நம்பறாரான்னு பார்ப்போம்!'' ஆணவமாய் பேசுவான். பின்னர் மெதுவாய் இறங்கி வருவான்.

"சம்யூ கண்ணு... ஆசையில கன்னத்தில் தட்டினால்... இதையெல்லாம் போய் அப்பாகிட்ட சொல்லுவாங்களா? சொல்லாதேம்மா! அப்பாவுக்கு என்மேல் நல்ல மதிப்பு, மரியாதை! கெடுத்துடாதேம்மா! ப்ளீஸ்..." கெஞ்சினான்.

அவளுடைய பிறந்த நாளைத் தெரிந்து கொண்டு... நள்ளிரவு பனிரெண்டு மணிக்கு போன் செய்தான்.

"ஹலோ சம்யுக்தா... என் இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்!"

"இதைச் சொல்ல என் தூக்கத்தைக் கெடுக்கணுமா?" அவள் அலட்சியமாய் சொல்ல...

"மகிழ்ச்சி பொங்கட்டும்! அடுத்த பிறந்த நாளில்... நீ என்னுடையவளாய்... என் மடியில் இருப்பாய்! அப்போது அந்த அழகான பட்டுக் கன்னத்திலும், ரோஜா இதழிலும் முத்தமிட்டு... வாழ்த்துச் சொல்வேன்! கட்பிராமிஸ் யுக்தா!" என்று கெஞ்சியவன்... அவள் எதிர் முனையில் சீறி திட்ட ஆரம்பித்தபோது... செல்லை ஆப் செய்தான்.

சம்யுக்தா சூடானாள்.

'கிறுக்கன் சும்மா உளறுகிறானா? அல்லது நிஜமாகவே பேசுகிறானா? ஆனந்த்... இதை முளையிலேயே கிள்ளி எறியறேண்டா! என் அப்பாவிடம் சொல்லி உன்னை கம்பெனியிலிருந்து தூக்கிறேனா இல்லையா பார்!' சபதம் கொண்டாள்.

சம்யுக்தாவின் சபதம் பொய்க்கப் போவது தெரியாமல்!



# 8

ஆனந்த்தான் வென்றான்.

எத்தனைச் சொல்லியும்... படிப்பு முடிந்த கையோடு... ஆனந்த் நல்லவன், வல்லவன், திறமைசாலி என்றும்... தனக்கு பின்பு இத்தனை சொத்துக்களையும் கட்டிக் காக்கும் மிகப் பெரிய பொறுப்பை நல்ல முறையில் செய்வான் என்றும்... நடராஜன் அவள் கெஞ்சலுக்கு, விருப்பத்துக்கு மதிப்புக் கொடுக்காமல் முகூர்த்த நாள் குறிக்க பஞ்சாங்கத்தை எடுத்துக் கொண்டார்.

"அப்பா... கொஞ்ச நாள் உங்களோட பிசினஸ் பார்க்கிறேன்! என்ன வயசாகுது டாடி? ஏன் டாடி இப்படி அவசரப்படுத்தறீங்க? மெல்ல திருமணம் செய்துக்கிறேனே! ப்ளீஸ்ப்பா... ஆனந்த் வேண்டாம்பா! பிடிக்கலப்பா! நான் இதுவரை எதுக்காவது உங்களிடம் மறுப்பு சொல்லியிருக்கேனா?" கண்ணீர் வழிந்த கண்களோடு கெஞ்சினாள்.

"பொண்ணுங்களை ரொம்ப நாள் வச்சிருக்கக் கூடாதும்மா! வயசு வந்த உடனே காலா காலத்துல ஒருத்தன் கையில பிடிச்சிக் கொடுத்துடணும்! இல்லேன்னால் உன் அத்தை தேவியைப் போல எங்கையாவது ஏமாந்துடுவீங்க! என் தங்கைன்னால் எவ்வளவு உயிரோ... பாசமோ... அதுபோல உன் மேல் என் உயிரையே வச்சிருக்கேன் சம்யுக்தா! உன்னை வெளியில் திருமணம்

செய்து கொடுத்துட்டு... எங்களால் உன்னைப் பிரிஞ்சு ஒரு நொடி கூட வாழ முடியாதும்மா! ஆனந்துக்கு என்ன குறை? சொல்லு? படிப்பிருக்கு! அழகிருக்கு! அவனும் நம்ம வீட்டோடவே இருந்துக்க சம்மதிச்சிட்டான்! நாம் சொல்வதை தட்டமாட்டான்! இதைவிட வேற என்ன வேணும்? கையிலே வெண்ணெயை வச்சிட்டு எதுக்கு நெய்யுக்கு அலையனும்?

"தேவி உன்னைப் போலத்தான் கெட்டிக்காரி! எப்படி ஏமாந்தாளோ...! அப்படி ஏமாந்து வயிற்றுல பிள்ளையை சுமந்துட்டு வந்தவளை... வீட்டோட வச்சிக்காமல் விரட்டி அடிச்சிட்டேன். எங்கே போனாளோ...? என்ன ஆனாளோ...? உயிரோடு இருந்தால்... வந்திருப்பாள்! என் தங்கம் இறந்து தான் போயிருப்பாள்ன்னு நினைக்கிறேன்! அவளோட நினைப்பு இப்போ எல்லாம் அதிகமா வந்து வாட்டுது! கனவுல அடிக்கடி வராம்மா! எனக்கு தேவியை திரும்பவும் பார்க்கனும்போல வெறி வருது. அவள் மீண்டும் உன் வயிற்றில் வந்து பிறப்பாள் என்று தோன்றுது. மறுக்காதே கண்ணம்மா! நீ நினைச்சால் என் தேவியை... கல்யாணம் பண்ணி பிள்ளையாய் பெற்றுக் கொடுக்க முடியும்! பெரியவங்க... உன்னைப் பெற்றவங்க... உனக்கு கெடுதல் செய்ய நினைப்போமா? சொல்லுடா தங்கம்மா? உன் வாழ்க்கையை பாழ் பண்ண நினைப்போமா? பாழும் கிணற்றுல இடித்து தள்ள நினைப்போமா?" அப்பா மெதுவாய், உருக்கமாய் பேசினார்.

"சம்யுக்தா... நாங்க பார்த்தவரைக்கும் ஆனந்த் குணத்துல தங்கம்! பெரியவங்ககிட்ட மரியாதையா இருக்கார். தொழிலை நிர்வகிக்கிற திறமை அதிகம்! இதுபோல மாப்பிள்ளையை ஊர் ஊரா தேடிட்டுப் போனாலும் கிடைக்காது! தெரியுமா?" என்று மலர்விழி சொல்ல...



"வேணாம்மா... வேணாம்! ஆனந்த் எனக்கு வேணாம்! கல்யாணம்கூட பண்ணிக்க நான் தயார்! ஆனந்த் இல்லாமல் வேற மாப்பிள்ளையைப் பாருங்க! நான் சந்தோஷமா கழுத்தை நீட்டறேன்!"

"ச்சே... எத்தனை சொன்னாலும் உனக்குப் புரியாதா? என் வயிற்றுலதான் பொறந்தாயா? இல்லே பொறந்து இருந்தப்ப... ஆஸ்பிடல்ல இருந்த... நிறைய குழந்தைகள்ல மாறி... எவ பெத்த பிள்ளையோ வந்து... வளர்ந்து... எங்க பேச்சக் கேட்கக் கூடாதுன்னு இருக்கியா? நான் பெத்த பிள்ளையா இருந்தால்... சந்தோசமா சம்மதித்து இருப்பாய்! எனக்கு சந்தேகமா இருக்குடி!" அம்மா ஆத்திரமாய் கத்தினாள்.

'எப்படி சொல்லுவாள்? எதைச் சொல்லுவாள்? பொறுக்கி போல தன் கண்முன்பே அடுத்த பெண்களை ரசித்து அசிங்கமாய் வர்ணித்ததைச் சொல்வாளா? கன்னத்தில் தட்டி ரவுடித்தனம் செய்ததைச் சொல்லுவாளா? உன் கன்னமும், உதடும் ரொம்பவே கிக்கா... அழகா இருக்கே... என்று முத்தமிட அருகில் வந்து அடிப்பட்டு... அவன் சென்றதை சொல்லுவாளா?'

"நான் முடிவு எடுத்தா எடுத்ததுதான்! அந்த முடிவை இனி நானே நினைச்சாலும்கூட என்னால் மாற்ற முடியாது! நீயும் எதுனா காதல்... கீதல்ன்னு உன் அத்தையைப் போல விழுந்துட்டு வந்துட்டையா? இவ்வளவு சொல்லியும் எங்கள் அறிவுரை ஏறலேன்னா என்ன அர்த்தம்? சொல்லு சம்யுக்தா? எவனையாவது காதலிக்கிறாயா?" கோபமாய் கேட்க...

"அதெல்லம் இல்லேப்பா! நீங்களா எதுனா ஏன் கற்பனை பண்றீங்க?" வேகமாய் கேட்டாள், சம்யுக்தா!

"அப்போ காதல் இல்லை இல்லையா? ஆனந்த்தான் என் மாப்பிள்ளை! உன் புருஷன்! போ... போய் சந்தோசமா இரு! சிம்பிளா! கோயில்ல கல்யாணம்! பிறகு கிராண்டா ரிசப்ஷன் வச்சி பிரமாதப்படுத்திடலாம்!"

"அப்பா..." என்று மேலே பேசுவதற்குள் நடராஜன் சென்றுவிட்டார்.

'பிடிக்காத ஒருவனோடு... கல்யாணம்...!' சம்யுக்தா ஊமையாய் அழுதாள்.

ஆனந்த் அழகன்தான்! ஆனால், அவனைப் பிடிக்கவில்லை!

ஆனந்த் புத்திசாலிதான்! ஆனால், அவனைப் பிடிக்கவில்லை!

'வெறுப்போடு முதலில் இருந்தே அவனைப் பார்த்ததாலா? எல்லோரும் சொல்வதுபோல அவன் நல்லவன்தானா? நான்தான் அவனைப் புரிந்து கொள்ளவில்லையா?'

சம்யுக்தாவிற்கு இந்த கேள்விகளுக்கெல்லாம் விடை தெரியவில்லை.

'ஏய் மனமே... உனக்கு மாலையிடப் போகும் மன்னவன் அவன்! அவனை அருவெறுக்காதே! அவனிடம் இருக்கும் கெட்ட குணங்களை விலக்கி... ஒதுக்கி வைத்து விட்டு... நல்லவைகளை ஆராய்ச்சி செய்து மகிழு! அவனை உனக்குப் பிடிக்கும்!'

தினம் தினம் இடைப்பட்ட நாட்களில் அவனைத் தேற்றிக் கொள்ள மெல்ல வெறுப்பு அகன்றது.

ஆனால் அவன் மேல் காதலும்... அன்பும் கொஞ்சம் கூட ஏற்படவில்லை. அவனை மணந்து... அவனிடம்



நடந்து கொள்ளும் முறையில்தான்... சம்யுக்தாவிற்கு ஆனந்த் மேல் நேசம் ஊற்றெடுக்கும் என்பது மட்டும் அவளுக்கு உறுதியாய் தெரிந்தது.

மங்களகரமான மணநாளும் வந்தது.

கோயம்புத்தூர் அருகே இருந்த குலதெய்வம் கோயிலில் கல்யாணம்!

ஆனந்த் அவள் கழுத்தில் மாங்கல்யம் சூட்டினான். அடுத்த வினாடி ஒரு வெற்றிச் சிரிப்பை அவன் உதடுகள் சிந்தியது. அது உண்மையா? அல்லது அவளுக்கு ஏற்பட்ட பிரமையா?

இரவு வந்தது.

முதலிரவு அறை!

ஆனந்த் பட்டு வேட்டி சட்டையில் அழகாய் அமர்ந்து இருந்தான்.

சம்யுக்தா அலங்காரப் பதுமையாய்... மெதுவாய் பால் சொம்போடு உள்ளே நுழைந்தாள்.

'என்னுடையவன்...! என்னில் ஐக்கியமாகப் போகிறவன்...! எனக்கே எனக்காய் சொந்தமானவன்...!'

சம்யுக்தா முரண்டு பிடித்த மனதிற்கு இவ்வாறு கூறி கடிவாளமிட்டாள். ஆனால் கஷ்டமாய்த்தான் இருந்தது.

பால் சொம்பை நீட்ட வாங்கிப் பருகினான். காலில் விழப் போனவளைத் தடுத்தான்.

"வீணான சாஸ்திர, சம்பிரதாயமெல்லாம் நம்மிடையே வேணாம் யுக்தா! இப்படி உட்கார்!" அருகில் இருந்த இடத்தை காட்ட அமர்ந்தாள்.

"ஆஹா என்ன அழகு! எத்தனை அழகுன்னு பாடனும் போல இருக்கு! காலையில் இருந்து இரவுக்காக தவமிருந்தேன் யுக்தா!" அவன் அசிங்கமான இடம் பார்த்து கண்ணடித்தான்.

அவன் காணாததைக் கண்டதுபோல அவசர அவசரமாய் கட்டியணைத்தான்! முத்தமிட்டான்! முகர்ந்தான்!

சம்யுக்தா ஆனந்தின் வேகம் தாங்க முடியாமல் தத்தளித்தாள்! தவித்தாள்! ஒரு அழகான ரோஜா முள்ளில் மாட்டி தன் இதழ்களையெல்லாம் பிய்த்துக் கொண்டாற் போல ஒரு வேதனையை அனுபவித்தாள்.

ஒரு மலராத மொட்டை மெல்ல மெல்ல மலர வைக்காமல்... அவசர அவசரமாய் கசக்கி வாசனையை முகர்ந்தான், ஆனந்த்!

ஒரு காதல் வழியும் பார்வை! ஒரு அனுசரணையான பேச்சு! 'உனக்கு என்ன பிடிக்கும்? எது பிடிக்கும்? என்னிடம் என்ன குறை? சொல்லு தங்கம்? என்னை உனக்காக... உனக்கு பிடிச்சாப்போல மாத்திக்கிறேன்டா...!' என்று கொஞ்சலான பேச்சு என்று எதுவுமே இல்லாமல்... வேட்டைக்கு புறப்பட்டவன் போல அவசரம் காட்ட... சம்யுக்தா கலங்கி விட்டாள்.

'காலம் முழுக்க இவனோடு எப்படி வாழ்வது?' என்ற பயம் அவளுக்கு இப்போதே வந்து விட்டது.

சம்யுக்தா களைத்துப் போய் உறங்க... திரும்பவும் அவளை நாடினான். மறுக்க மறுக்க அவன் பேச்சை காதில் வாங்கவில்லை. அவன் வேகம் தாங்காமல் தடுமாறினாள்.



அன்றைய இரவில் அவளை பலமுறை ஆனந்த் நாட... விடியற்காலையில் சம்யுக்தாவிற்கு சுரமும், கடும் குளிரும் வந்து நடுங்கிவிட... நடராஜனும், மலர்விழியும் பதறிவிட்டனர்.

டாக்டர் வந்து ஊசி போட்டு... மருந்து, மாத்திரை கொடுத்து "புதுமணப் பெண் அல்லவா? உடம்புக்கு ஒத்துக் கொள்ளாமல் சுரம் வந்துடிச்சி! பயப்படும்படி எதுவுமே இல்லை நடராஜன்" என்று டாக்டர் கூறிவிட்டுச் சென்றார்.

ஆனந்த் அருகில் வந்தாலே பயந்து நடுங்கினாள்.

சிங்கம், புலியை கண்டாற்போல அவனைக் காணவே குலை நடுங்கியது.

அன்று இரவு தாயைவிட்டுப் பிரியாமல் மலர்விழியோடு உறங்கினாள்.

ஆனந்தை ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை. முகத்தை போர்வையால் மறைத்துக் கொண்டாள்.

மறுநாளும்... மறுநாளும் ஆனந்தோடு தனியே இருக்காமல்... ஒன்று நடராஜனோடோ... அல்லது மலர்விழியோடோ இருந்தாள்.

இரவானால் மலர்விழியை விட்டு அகல மாட்டாள். அப்பா, அம்மாவோடோ படுத்துக் கொள்ள...

ஆனந்த் தவித்தான். அவன் தவிப்பு, ஏக்கம் புரிந்து மெல்ல மெல்ல அவளை சமாதானப்படுத்தி... மலர்விழி சம்யுக்தாவை ஆனந்தின் அறைக்கு அனுப்பி வைத்தான்.

சம்யுக்தா மிரட்சியோடு உள்ளே நுழைய... ஆனந்தின் கோபமான பார்வையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் நடுங்கினாள்.

அவளிடம் இருந்த துணிச்சலும், வீரமும் எங்கேத்தான் ஒடி ஒளிந்து கொண்டதோ!

அறை முழுக்க புகை மண்டலம்! சிகரெட் வாசம் நாசியைத் தாக்கியது. சம்யுக்தாவிற்கு குமட்டிக் கொண்டு வந்தது. சும்மாவே அந்த வாசம் பிடிக்காது. இதில் நல்ல காய்ச்சல் கண்டு... வாய் கசந்து... மெல்ல தேறி வந்த அவளால் தாங்க முடியவில்லை.

''உங்களுக்கு எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லைன்னு அப்பா சொன்னாரே?'' என்று அவனைப் பார்த்துக் கேட்கும் போதே... கண்களில் கண்ணீர் பூ அவளை அறியாமலேயே சட்டென்று பூத்து மலர்ந்து.. கன்னத்தில் சரம் கோர்த்தது.

''ஆயிரம் பொய் சொல்லி... ஒரு கல்யாணத்தை செய்யலாம்ன்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க! அதுல இது ஒரு பொய்!'' என்று ஆனந்த் சிரிக்க... அவன் மூச்சுக் காற்றில் ஆல்கஹால் வாசம் வந்தது.

''ஐயோ...!'' அலறினாள்.

''நீங்க குடிச்சியிருக்கீங்களா? குடிப்பழக்கமும் இருக்கா? அப்பாகிட்ட எந்தப் பழக்கமும் இல்லேன்னு நாடக மாடினீங்களா? இன்னும் என்னென்ன கெட்டப் பழக்கம் இருக்கு? சொல்லுங்க? சொல்லுங்க?'' அவன் சட்டையை கொத்தாகப் பிடித்துக் கேட்க...

''விடுடி... விடு! நாட்டுல நான் ஒருத்தன் தான் குடிக்கிறேனா...? முக்கால்வாசிப் பேர் குடிகாரங்கடி! கீழ்தட்டு வர்க்கமா இருக்கட்டும்... மேல் தட்டு வர்க்கமா இருக்கட்டும்... அத்தனைப் பேரும் குடிக்கிறாங்க! உன்னைப் போல மேல் தட்டு வர்க்கத்துல பொம்பளைகளும்



குடிக்கறாளுங்க! நீயும் குடி! எனக்கு கம்பெனி கொடுடி! மகிழ்ச்சியாய் இருக்கும்!''

ஒரு கோப்பையில் மதுவை சரித்து அவளிடம் நீட்ட... கோபமாய் தட்டி விட்டாள்.

''இதை வாங்கிட்டு வந்து... உன் அப்பனுக்குத் தெரியாமல் மறைச்சி வைக்க நான் பட்ட பாடு எனக்கு தாண்டி தெரியும்! புடிக்கலைன்னால் சும்மா இருக்காம தட்டி விடறியா? உனக்கு ராங்கி அதிகம்டி! உன் ராங்கித் தனத்துக்கு முடிவு கட்டத்தான்... உன் கழுத்திலே நான் தாலி கட்டினது! அது உனக்கு தெரியுமா?''

சம்யுக்தாவின் மேல் எரிமலை லாவா பீய்ச்சியடித்தாற் போல் வீறிட்டாள்.

''ஒரு நாள் கூட என்னைப் பிடிச்சி பேசியிருக்கீயா? என்னைப் பார்த்தாவே அருவெறுத்து... இந்த அழகு முகம் சுளிப்பே! இப்போ படுடி! நல்லா நினைச்சி நினைச்சி அழு! ஆனால் அதுக்கான நேரம் இப்பயில்ல!'' என்று கூறிக் கொண்டே அவளைக் கட்டி முத்தமிட்டான்.

ஆல்கஹால் வாசம் குடலைப் புரட்ட... அவன் மேலேயே 'ஓவ்...' என வாந்தியெடுத்தாள்.

''சனியனே... மேலேயே அசிங்கம் பண்ணிட்டியே! ச்சே...!'' என்று சட்டையை கழற்றி தூர வீசினான்.

''வாடி... வந்து படு!''

''நான் மாட்டேன்! எனக்கு உங்களைப் பிடிக்கலே!''

''பிடிச்சாலும் பிடிக்கலேன்னாலும் நான் உன் புருஷன்! அதை ஞாபகத்துல வச்சிக்க! மரியாதையா வந்துடு! நாலைஞ்சி நாளா பட்டினி போட்டுட்டியேடி நாயே! நான்

பசிச்சி இருக்கேன். உடம்பெல்லாம் சூடாகி இருக்கு! நீ வந்து அணைச்சாத்தான் குளிரும்!''

அவள் அழுகையோடு பின்னோக்கி நகர...

''பிருவெல்லாம் வேண்டாம்! எல்லாக் கலையும் எனக்கு தெரியும்! சினிமாவுல ஹீரோயினை வில்லன் தூக்தி.. தூக்தி ரேப் பண்றாப்போல ரேப் பண்ணனுமா? அந்த சீனை நீ பிராக்டிக்கலா பார்க்கனுமா? அனுபவிக்கனுமா? சொல்லுடி?''

''ச்சே... நீயெல்லாம் ஒரு மனுசனா? ஒரு அப்பாவியை நல்லவனா நடிச்சி.. கழுத்தையறுத்துட்டடையே! என்னை கல்யாணம் பண்ணி.. என் வாழ்க்கையையே நாசமாக்கிட்டடையே! சண்டாளா... எந்த மாதிரியெல்லாம் என் புருஷன் இருக்கனும்னு கற்பனைப் பண்ணி வச்சிருந்தேன்! எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லாமல்.. அந்த ஸ்ரீராமனைப் போல விரதச்சரியம் கொண்டவனாய்... எனக்கு மாலை சூட வருபவன் இருக்கனும்ன்னு.... நான் செய்த அத்தனைக் கற்பனைகளும், கனவுகளும் கானல் நீராயிடிச்சே!

''அப்பவே அப்பாட்ட இவன் வேணாம்ன்னு கெஞ்சிக் கூத்தாடினேன்! என்னைப் பெற்றவர்கள் கேட்கலையே! என் அப்பா ஒரு ஹார்ட் பேஷண்ட்! இதை எப்படிச் சொல்வேன்! கடவுளே!'' அப்படியே மண்டியிட்டு, மடிந்து, தரையில் கவிழ்ந்து கதறினாள்.

''ஏய் இங்கே பாருடி!'' என்று தொட்டவனின் கையைத் தட்டிவிட்டாள்,

''தொட்டா நடக்கறதே வேற...'' கைநீட்டி வேகமாய் பேசினாள். கண்ணாடி சன்னல்களால் ஆன அறை என்பதால் வெளியில் அவர்கள் பேச்சு கேட்காது.



''உன் அப்பனுக்காக.. நல்லவனா நடிக்க என் பொம்பளைப் பழக்கத்தை விட்டுட்டு.. மீண்டும் சுவைக்க... இந்த நாலு நாளும் நான் பட்ட அவஸ்தைப் போதும்! நீ வர்லன்னால் எனக்கு ஆட்சேபணையே இல்லை. ஆனால் உனக்கு பதிலா இந்த இடத்துல எனக்கு இப்ப யாராவது வேணும்!''

சம்யுக்தா காறி.. எச்சிலை.. கொத்தாய் அவன் முகத்தில் உமிழ்ந்தாள். அவன் துடைத்துக் கொண்டே சொன்னான்.

போ.. போய் உன் அம்மாவை அனுப்பு! என் மாமியாரும் நல்லா தளதளன்னு கொழுகொழுன்னு.. வயசானாலும் கட்டுக்குலையாமல் சிக்குன்னு இருக்கா! அணைச்சிட்டா பஞ்சுப் பொதியை கட்டிட்டாப் போல சுகமா இருக்கும்!'' ஆனந்த் முடிக்க...

கண்மண் தெரியாமல் கோபம் கொண்டு பத்ரகாளியாய் மாறி ஓங்கி கன்னம் பழுக்க பழுக்க அறைந்தாள்.

சம்யுக்தாவிற்கு மூச்சு வாங்கியது.

''இதுக்கு மேலே ஒரு வார்த்தை பேசினே.. கொலையே செய்துடுவேன். எங்களை என்ன இளிச்ச வாய் குடும்பம்ன்னு நினைச்சியா? நாளைக்கே உன் வேஷத்தை கலைச்சிடுவேன்! அப்பாவுக்கு ஏதாவது ஆயிட்டா.. என்ன பண்ணுவதுன்னு மன்னிச்சி விடலாம்ன்னு பார்த்தா.. என் அம்மாவையே உன்னோட படுக்க அனுப்ப சொல்றீயா?'' கண்களில் கனல் வீசியது.

''சரி உன் அம்மா வேண்டாம்! உன் சித்தி கூட சூப்பர் தான்! எடுப்பான அந்த மார்பு.. தளதள உடம்பு எல்லாமே ரம்யம்தான்! விதவை வேற! பாவம்! அனுப்பேன்!'' ஆனந்த் குழறலாய் கூற....

அவனை புரட்டி எடுத்துவிட்டாள். போதையில் இருந்ததால்.. அவளின் ஆத்திரத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறினான், ஆனந்த்.

# 9

அன்றைய சம்பவத்திற்கு பிறகு வெளியில் கணவன் மனைவியாய் நடித்தவர்கள்... தங்களுடைய அறையில் எலியும் பூனையுமாய் இருந்தனர்.

முதலிரவு அன்று அவளைத் தொட்டதுதான்! அதன் பிறகு அவன் கிட்டே நெருங்கினாலே... தூரப்போய் விடுவாள். அவன் தொடவே அவளை அனுமதிக்காமல் போக.. வலுவாய் சண்டையிட்டான். அடித்தான். ஒரு நாள் உச்ச கட்டமாய் கையில் சிகரெட்டால் சுட... சம்யுக்தா துடிதுடித்துப் போய்விட்டாள்.

பெற்றவர்களுக்கு தெரியாமல் இருக்க பெரும்பாடு பட்டாள். ஊமையாய் உள்ளுக்குள் அழுதாள். இரவெல்லாம் அவளின் கண்ணீர் பட்டு.. தலையணையே குளிரில் நடுங்கி விறைத்துப் போனது. அவளின் கண்ணீர் கதை அறிந்த ஜீவன்.. அவளின் தலையணை மட்டுமே!

சம்யுக்தா மிரட்டலில் படியாமல் போக.. ஆனந்த் கெஞ்சிப்போனான்.

'பொலிகாளையாய் வரன்முறை கெட்டு திரிந்த கயவன்! ச்சே...'



'எத்தனைப் பெண்களை தொட்டு.. கட்டி சுகம் அனுபவித்த உடம்போ!' அவனைப் பார்க்கவே புழுவைக் கண்டாற்போல அருவெறுக்கும்.

''யுக்தா.. உனக்கு பிடிச்சாப்போல நடந்துக்கிறேன்! நீ என்ன சொல்றீயோ கேட்கிறேன்! உன் அனுமதியில்லாமல் தொடவே மாட்டேன்டா! தொழிலை விரிவு படுத்தணும்! அதுக்கு பணம் வேணும்! ஒவ்வொன்றுக்கும் உன் அப்பாகிட்ட கெஞ்சி நிற்க முடியல! சொத்துக்களை என் பெயரில் எழுதி வச்சிட்டு.. பாங்கல இருக்கற பணத்தை என் அக்கௌண்டுக்கு மாற்றிவிட்டால்.. என் இஷ்டம் போல.. விரிவுபடுத்தி அமோகமா கொண்டுவர முடியும்! என்ன சம்யுக்தா சொல்றே? உன் அப்பாவோட காதுல போட்டு வைக்கறீயாடா, செல்லம்!''

''நான் மாறிட்டேன் யுக்தா கண்ணா! உன் விருப்பத்தை நிறைவேற்றுவதுதான் என் முதல் வேலையே! உனக்கு பிடிச்சாப் போலவே இருக்க விரும்பறேன். பார்த்தாயா.. நீ என்னை நம்பல போல! நம்பாமல் பாக்கறீயேடா! சத்தியமாடா! ப்ளீஸ்டா..!''

ஆனந்தின் கெஞ்சலும், கொஞ்சலும் மிளகாயாய் காந்திற்று! அந்த முகத்தில் நல்லவனாய் வேஷம் கட்டி நடிப்பது அப்பட்டமாய் சம்யுக்தாவிற்கு தெரிந்தது.

ஒரு நாள்....

சம்யுக்தா நீச்சலுடையில் அவர்கள் வீட்டு குளத்தில் நீந்திக் கொண்டிருந்தாள். நண்பகல் 12.00 மணி இருக்கும். இதமான வெயில், நீந்துவது அவளுக்கு ரொம்பவே பிடிக்கும்.

அப்போது ஆனந்தை எதிர்பார்க்கவில்லை. காரை விட்டிறங்கி சம்யுக்தா நீந்திக் கொண்டிருந்ததை ஆவலாய்.. கண்கள் வெளியே வந்துவிடும் அளவு விறைத்துக்கொண்டு பார்த்தான். அவன் நிற்பதை அறிந்த சம்யுக்தா... அவசர அவசரமாய் எழுந்து ஓடிப்போய்.. அந்த பெரிய டவலால் உடம்பை மூடிக் கொள்வதற்குள்.. செல்போனில் ஏகப்பட்ட கிளிக் செய்துவிட்டான்.

அதனைக் கண்ட சம்யுக்தா... ஆத்திரமாய் அவனருகில் வந்து.. செல்போனை பிடுங்கி.. பட்டனைத்தட்டிப் பார்க்க... அவளின் கவர்ச்சியை.. உடம்பை பல்வேறு கோணங்களில் படம் பிடித்திருந்தான்.

''என்ன ஆனந்த் இது?'' கத்தினாள்.

''என் பொண்டாட்டி எவ்வளவு அழகுன்னு.. என் ப்ரண்ட்ஸ்கிட்ட காட்டி.. மார்த்தட்டிக்கத்தான் யுக்தா! அப்படியே எனக்கு ஆசை வரும்போது எடுத்து பார்த்துக்கவும்தான். நீதான் தொடவே விடலையே! போதையில ஏதோ உளறினேன்னு...!'' அவன் இளிக்க...

''ச்சே...! எவ்வளவு பெரிய அயோக்கியன் நீங்க!'' என்று கூறி செல்போனை காலில் போட்டு மிதித்தாள்...! சுக்கு நூறாய் போனது செல்போன்!

''ஏய்.. ஏய்.. எத்தனை காஸ்ட்லி...!'' அவன் கத்தினதை லட்சியம் செய்யாமல் வீட்டிற்குள் சென்றாள்.

அதற்கு அடுத்த நாள்...

''என்ன சம்யூ.. மாப்பிள்ளை தொழிலை விரிவுபடுத்தணும்! பக்கத்துல சகாயமா ஒரு எஸ்டேட் வருது... அதை வாங்கிப்போடணும்! ஒவ்வொன்றுக்கும் என்னைக் கேட்டு நிற்க அவமானமா இருக்காம்! சொத்துக்களை என்



பெயரில் எழுதி வையுங்க மாமான்னு சொல்கிறார். எழுதிடலாமா? சம்யூம்மா... நீ என்ன சொல்கிறாய்? உன் விருப்பம்தான்டா, என் உயிரே!''

'ஆனந்த் வேண்டாம் என்று சொன்னதை கேட்கலீயேப்பா! நான் எத்தனை சித்ரவதைப்படுகிறேன்! தாயையே... அதுவும் என் தாயையே தாரமாக்கி படுக்கைக்கு கூப்பிட்டவன்! அய்யோ அப்பா... அந்த கொடுமையான நாளை நினைக்கவே குமட்டுகிறதே!'

''என்ன சம்யூம்மா...? என்ன சிந்தனை?'' அவளைப் பிடித்து நடராஜன் உலுக்க... விழித்தாள்.

தன்னிடம் கெஞ்சி நடக்காமல் போக.. நேரே அப்பாவிடம் போய்விட்டானா? இதனை விடக்கூடாது! சொத்தை எழுதி வாங்கிக் கொண்டு.. மூவரையும் தெருவில் விட்டு கதவை பூட்டினாலும் பூட்டுவான். அல்லது கொலையும் செய்ய அஞ்சமாட்டான்.

ஆனந்த் நல்லபாம்பு போன்றவன்! நம்பமுடியாது! எப்போது படமெடுப்பான் என்றே தெரியாது!

''வேணாப்பா! கல்யாணத்தையே ரிஜிஸ்டர் பண்ணலே! அதுக்குள்ள என்ன அவசரம்?''

கல்யாணத்தை ரிஜிஸ்டர் பண்ணிடலாம்மா! எனக்கு வயசாகுது! எனக்குப் பிறகு என் ஒரே வாரிசு நீ! உன் கணவன் ஆனந்த்! அதை பொறுப்பாய் நிர்வகிக்கப் போகிறவரும் அவரே! எதுக்கு நாள் கடத்தணும்?''

''நீங்க வீட்டுல இருங்க! தொழிலை அவர் கவனிச்சிக்கிட்டும்! ஆனால் அவர் பேர்ல இப்போ எதுவும் எழுதி வைக்கவேணாம்! இது ஒண்ணுக்கு மட்டும் என் பேச்சுக்கு மதிப்பு கொடுங்கப்பா! ப்ளீஸ்...''

மகளின் பிடிவாதம்... கெஞ்சல் எதற்கும் அர்த்தம் புரியாமல்... பேசாமல் அவ்விடம் விட்டு நகர்ந்தார்.

நடராஜனின் மனசை மாற்றி.. சம்யுக்தா தனது தோழியைப் பார்க்க கூடலூர் வரை சென்றபோது.. வக்கீலோடு வந்து... எல்லாச் சொத்துக்களையும் அவன் பெயரில் எழுதி.. நடராஜன் பத்திரத்தில் கையெழுத்து போட... ஆயத்தமான போது.. சம்யுக்தா புயலாய் உள்ளே நுழைய... ஆனந்த் வெளிறி.. வெலவெலத்துப்போனான்.

''வா யுக்தா...! உனக்கு சர்ப்ரைஸா இருக்கட்டும்ன்னுதான்...!'' என்று செயற்கையாய் சிரிக்க முயற்சிக்க...

''வக்கீல் அங்கிள்... அப்பாவுக்குத்தான் அறிவில்லே! உங்களுக்குமா? இப்போ என்ன அவசரம்? அப்பா நல்லாத்தானே இருக்கார்! குத்துயிரும்.. குலையுயிருமா இழுத்துட்டா இருக்கார்? ம்? என் கையெழுத்தும் தேவை தானே?'' சம்யுக்தா பெருங்குரலெடுத்து கத்தினாள்.

''உன் கணவர்.. உன்னிடம் அப்புறமா வாங்கிக்கிறேன்னு சொன்னார்ம்மா!''

''இந்த சமாதானப் பேச்செல்லாம் வேண்டாம்! கொடுங்க அந்தப் பேப்பரை!'' சம்யுக்தா அந்தப் பேப்பரை வாங்கி கிழிக்க போக...

''யுக்தா.. யுக்தா வேண்டாம்! ப்ளீஸ்.. என்ன செய்யறே? எதுனா மடத்தனமா செய்யாதடி!'' என்று ஆனந்த் கெஞ்ச...

அந்த பத்திரத்தாளை சுக்கு நூறாய் கிழித்து ஆவேசமாய் ஆனந்த் முகத்தில் எறிந்தாள்.



நடராஜன், மலர்விழி, வக்கீல் மூவரும் ஸ்தம்பித்து நிற்க...

ஆனந்த் ஆத்திரமானான்.

சம்யுக்தாவை ஓங்கி அறைந்தான்.

நடராஜன், மலர்விழிக்கு முதல் அதிர்ச்சி!

சம்யுக்தாவின் முடியை கையில் சுருட்டி அவள் முதுகு, கன்னம், மூக்கு என்று பாராமல் அடித்தான். கீழே விழுந்தவளை ஓங்கி.. கால்களால் எட்டி எட்டி உதைத்தான்.

''என்னடி பெரிய இவன்னு நினைப்பா...? நானும் பார்க்கறேன்... பொம்பளை போலவா இருக்கே! பொலி காளை போல உன் அப்பன் வளர்த்து வச்சிருக்கான்! நானும் போனாப் போகுதேன்னு விட்டுப் போனால் ரொம்பத்தான் துள்றியே!பெரிய அழகின்னு நினைப்பா? கிரீடம் சூட்டிக் கொள்ளாதது தான் பாக்கியா? இப்போ சொல்றேன்.. கேட்டுக்கடி.. உன் அப்பனுக்கும், ஆத்தாளுக்கும் தெரியட்டும்! உன் அழகைப் பார்த்து கட்டிக்கலே! மலை போல குவிஞ்சி கிடக்கற சொத்துக்காகத்தான் கட்டிக்கிட்டேன்! இந்த சொத்தே இல்லைன்னும்போது.. உன் கூட என்ன வாழ்க்கை? தேவையில்லேடி! நான் கட்டின தாலியை கழட்டிக் கொடுடி!''

நடராஜன், மலர்விழிக்கு இரண்டாவது அதிர்ச்சி!

ஆனந்த் இப்படிக்கூட பேசுவானா? வாயில்லாப் பூச்சியாய் ஆறடி உயரமும் மூன்றடியாய் குறுகிய... கைக்கட்டி தன் முன்பு பவ்யமாய் பேசிய ஆனந்தா இது?

நடராஜன் இவ்வாறு நினைக்க...

இதயத்தின் மையப்பகுதியில் ஊசியாய் ஒரு வலி ஏற்பட்டு.. அலையலையாய் புறப்பட்டது! அவரைப் புரட்டிப்போட்டது.

''வேணாம்.. வேணாம் ஆனந்த்'' இவ்வளவு நாள் மிடுக்காய் இருந்தவள்.. இப்போது சாதாரண.. சராசரி பெண்ணாய் மாறி பரிதவித்தாள்.

''கொடுடி.. கழற்றிக் கொடுத்துடு!'' அவன் முன்னேறினான். மலர்விழி ஓடிவந்து அவன் கைப்பிடித்து அழ.. வேகமாய் உதறினான்.

''மாட்டேன்... மாட்டேன்!'' புது மஞ்சள் கயிற்றுடன் கோர்த்து இருந்த தாலியை கையில் மறைத்துக் கொண்டு அழுகையோடு பின் வாங்கினாள்.

''நம்ம கல்யாணத்தை இன்னும் பதிவு பண்ணலே! எனக்கு வசதியாப் போச்சு! கோர்ட், போலீஸ் ஸ்டேஷனுன்னு அலையவே தேவையில்லை! இனி நான் உன் புருஷனில்லே! இந்த நிமிடத்துல இருந்து நீ யாரோ.. நான் யாரோத்தான்!''

ஆனந்த் சொல்லிக்கொண்டே.. படக்கென்று பலமாய் மஞ்சள் கயிற்றை இழுக்க.. மாங்கல்யம் அவன் கையோடு பிய்த்துக் கொண்டு வந்துவிட்டது.

''ஐயோ.. கடவுளே...!'' சம்யுக்தா அலறினாள்.

மலர்விழி தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

நடராஜனுக்குப் பேச வாய் வராமல் குழறியது. நெஞ்சைப் பிடித்துக் கொண்டார்.

''உன் முன்னாடி ஒருநாள் எப்படியாவது பெரிய பணக்காரனாகி.. உன்னைவிட ஒரு பேரழகியை மணந்து...



உன் முன்னாடி வந்து நிற்பேன். அப்போ தெரியும்.. இந்த ஆனந்த் பற்றி! கூடிய சீக்கிரமே வருவேன்! நிச்சயமாய்!'' என்று இரைந்து கத்தியவன்.. ஒரு வெள்ளைத்தாளில்...

''உனக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை. உனக்கு நான் புருஷனில்லே! எனக்கு நீ பொண்டாட்டியில்லே! ஒரு நாளும் உன்னிடம் என் மனைவி நீன்னு வந்து நிற்கவே மாட்டேன்!'' என்று எழுதி கையெழுத்திட்டு.. சம்யுக்தா முகத்தில் வீசினான்.

''இதையே என் விவாகரத்து பத்திரமா வச்சிக்கலாம்! வரேன்டி! பெரியாளாக ஆகி மீண்டும் வந்து உன் கண் முன்னாடி நிற்பேன்!'' ஆனந்த் வெளியேற...

நடராஜன் வேரறுந்த மரமாய் சாய்ந்தார்.

உடனடியாய் செயல்பட.. அவர் காப்பாற்றப்பட்டார்.

ஆனால் ஒரு காலும், கையும் வரவில்லை. வாய் பேச்சு புரியாமல் குழறலாய் இருந்தது.

சம்யுக்தா மூலையில் முடங்கி அழக்கூட முடியாமல்.. கடமை அழைக்க.. விரைவிலேயே தன்னைத் தேற்றிக் கொண்டு.. அப்பாவின் அத்தனை வியாபாரத்தையும் பாண்டியன், நாகராஜன் உதவியோடு கவனித்தாள்.

ஆனந்தோடு ஏற்பட்ட ஒருநாள் உறவால்... சம்யுக்தா கர்ப்பமாக... மலர்விழி, நடராஜன் எவ்வளவு கெஞ்சியும் கேளாமல்... அச்சு அசலாய் தேவியின் ஜாடையில் மதுமதியை பெற்று அவர்கள் கையில் தந்தாள்.

விபரம் தெரிந்து அப்பா.. அப்பா என்று புலம்பிய மகளை.. மேட்டுப்பாளையம் பள்ளியில் சேர்த்து.. ஹாஸ்டலில் விட்டாள்.

இதற்கிடையே பலபேர் அவளை திருமணம் செய்ய வந்தனர். ஆனால் சம்யுக்தா மறுத்துவிட்டாள். 'பால் சுடும் என்று அறிந்த பூனை.'

'பிள்ளையை விட்டுவிட்டு வரவேண்டும்!'

'எவ்வளவு சொத்து தேறும்! என்னா தாரமிழந்தவளை கட்டிக்கணுமில்லையா?'

'முதலில் சொத்தை எழுதி வைத்தால்தான்.. பின்னர் திருமணம்!'

- என்று வந்தவர்கள் அனைவரும் கொடூர புத்தியை காட்ட.. நடராஜன், மலர்விழியும் கல்யாண பேச்சையும், ஆசையையுமே விட்டுவிட்டனர்.

அத்தனையையும் கௌதமிடம் கொட்டிவிட்டு.. மடியில் முகம் புதைத்து.. முதுகு குலுங்க அழுதவளை... இழுத்து நெஞ்சில் அணைத்துக்கொள்ள எழுந்த எண்ணத்தை தன்னுள்ளே புதைத்து....

''சம்யுக்தா.. சம்யூ...''

'ம்கூம்' அவள் எழுந்தபாடில்லை.

''சம்யூ.. சம்யூம்மா.. இங்கே பார்! இது பீச்! எல்லோரும் நம்மையே பார்க்கறாங்க சம்யுக்தாம்மா! அழுகையை நிறுத்து! கண்ணைத்துடை! எழு! ஹோட்டலுக்கு போக லாம்!'' அவன் உள்ளம் வலிக்க வலிக்க... உள்ளுக்குள் நொந்துப் போனான்.

'என்னவளுக்கு இப்படி ஒரு சோதனையா?'

'உள்ளம் வெடிக்க வெடிக்க உள்ளுக்குள் வேதனையா?'



''கௌதம்.. நான் இதுவரை அவனைப் பார்க்கலே! கனவிலும் கூட! இனிமேலும் அந்த ராட்சசனை பார்க் கக்கூடாதுன்னு கடவுள்கிட்ட தினமும் வேண்டிக்கிறேன்! கடவுள்கிட்ட நான் கேட்கும் வரம் இதுதான்! என் வேண்டுதல் நிறைவேறுமா? கடைசிவரை அவனைப் பாராமலேயே செத்துப்போகனும்ன்னு ஆசைப்படறேன்!'' கன்னங்களில் ஆறாய் வழிந்த கண்ணீரோடு கூற...

''சம்யுக்தாம்மா... என்ன பேசறே!'' அவள் வாயைச் சட்டென்று கைகளால் பொத்தினான் கௌதம்.

'செத்துப்போகனும்!' என்ற ஒற்றைச் சொல்லால் அவன் இதயம் சுதி தப்பி தாறுமாறாய் அடித்துக் கொண்டது.

''ஆமாம் கௌதம்! ஆண்களையே பிடிக்காமல் இருந்த எனக்கு.. மேலும் எரிகிற தீயில் பெட்ரோல் ஊத்தினாப் போல செய்துட்டுப் போயிட்டான். பெண்களை மென்மை யான.. இதமான மலருக்கு ஒப்பிடுவாங்க. அவன் ஒத்த ராத்திரியிலே... என்னை கசக்கி.. காயப்படுத்தி.. ஐயோ... அந்த கொடுமையை நினைக்கவே பயமா இருக்கு! அவனோடு எப்படி வாழப் போறேனோன்னு அன்றைய இரவு பயந்து போனேன். அந்த அளவு நரகத்தைக் காட் டிட்டாங்க!'' கண்களைத் துடைக்க.. மீண்டும் பொங்கிய நீரூற்றாய்.. கன்னத்து சமவெளியில்.. கண்ணீர் வேகமாய் ஓடிப் பாய்ந்தது.

''என் வாழ்க்கை... இப்படியெல்லாம் ஆக.. என் அத்தையின் சாபமோ.. என்று அப்பா உள்ளுக்குள் குமைஞ்சிப்போறார். அவர் நன்கு நடந்து, பேசிப்பார்க்க ஆசை கௌதம் எனக்கு! நிறைவேறுமா?''

"உன் அப்பா சீக்கிரமே குணமாவார்! நிச்சயமா!"

"எனக்கு ஒரு குழந்தையிருப்பது அவனுக்கு தெரியாது! நான் அந்த ஆனந்தை வாழ்நாள் முழுக்க பார்க்கவே கூடாது! அவன் என் கண்முன்னாடி... என்றுமே நெஞ்சை நிமிர்த்தி வந்து நிற்கக்கூடாது! நடக்குமா கௌதம்? சொல்லுங்க?" சிறு குழந்தையாய் அழுகையோடு கேட்டாள்.

"இதுநாள் வரை வராதவன் இனிமேலா வரப்போறான்! நிச்சயமா அவனை பார்க்க மாட்டே! போதுமா? போகலாமா?" என்று அவனுக்கு ஆறுதல் கூற... சந்தோசமாய் எழுந்து அவனோடு நடந்தாள்.

அவன் வார்த்தை பொய்க்கப் போவது தெரியாமல்!

# 10

பூமி இரவின் மேல் காதல் கொண்டு... வாழ்த்துப்பாடி வரவேற்றுக் கொண்டிருந்தது.

அதே ஹோட்டலின் கான்பரன்ஸ் ஹாலில் பார்ட்டி நடைபெறுவதால் ஸார்ப்பாய் 7.00 மணி வாக்கில் கிளம்பி வெளியே வந்தவளை... திருப்தியாய் ரசனையுடன் நோக்கி சொன்னான் கௌதம்.

"அழு மூஞ்சி சம்யுக்தா போய்... அழகான சம்யுக்தா வந்தாச்சா..! குட்! அப்படியே மணவறைக்கு தயாரான பெண்ணாய் எவ்வளவு அழகு! திரும்பி வந்த உடனே



சுத்திப்போடணும்! என் கண்ணையே நம்பமுடியாது! கண்வச்சாலும் வைக்கலாம்!" சிரித்தான் கௌதம்.

கௌதமும் அழகிய தேவனாய் சம்யுக்தாவிற்கு காட்சி தர... அவனிடமிருந்து கண்களை விலக்க முடியாமல் திணறினாள்.

'ஆண்களில் கூட இத்தனை அழகா?' கம்பீரமுமாய் நல்ல உயரத்தில் இருந்த கௌதமையே விழி அகற்றாமல் நோக்க...

"என்ன இது அடிக்கடி ரசனையோடு கூடிய பார்வை? எதுனா சம்திங்...?" என்று கௌதம் கிண்டலடிக்க.. சட்டென்று இயல்புக்கு வந்தவள்...

"நத்திங்!" என்று கூறி வேகமாய் நடக்க... கௌதம் தோள் குலுக்கி சிரித்துவிட்டு..'அவளைப் பின்தொடர்ந்தான்.

அந்த பெரிய ஹாலுக்குள் நுழைய... ஷாக் அடித்தாற் போல நின்றுவிட்டாள், சம்யுக்தா!

கண்ணெல்லாம் இருட்டிக் கொண்டு வந்தது. கால்கள் தொய்ந்து... வேரறுந்த மரமாய் சாயப் போனவளை.. கௌதம் சட்டென்று தாங்கிப் பிடித்தான்.

சம்யுக்தா ஒரு பூச்செண்டாய்... மொத்த பாரத்தையும் அவன் மேல் போட்டு.. அவனோடு ஒண்டிக்கொண்டாள். கண்கள் சொருக மயங்கினாள்.

"சம்யூ.. சம்யூ.. சம்யூம்மா... என்ன? என்னடாம்மா? ஏய்.. ஏய்.. என்ன? இங்கே பார்!" மயங்கியவளை அணைத்தாற்போல தூக்கி வந்து.. மெதுவாய் அமர வைத்து.. முகத்தில் தண்ணீர் அடிக்க.. விழித்தவள்... விழிதெரியாத குழந்தையாய் முழித்தாள்.

அதற்குள் கூட்டம் கூட...

"ஒன்னுமில்லே.. ப்ளீஸ் மேம்... ஜென்டில்மேன் கொஞ்சம் காற்று விடுங்க! வெறும் மயக்கம்தான்! முழிச்சிட்டாங்க! இனி நார்மலாயிடுவாங்க!" என்று கூற.. மெதுவாய் கூட்டம் கலைந்தது.

"சம்யூ... என்ன? என்னடா? என்ன பார்த்தடா? சொல்லு? ஏன் திடீர்ன்னு? என்ன பயம்? யார்? யார்டா?" கௌதம் சிறுபிள்ளையிடம் கேட்பதுபோல கேட்க...

"அவன்.. அவன்..." பயத்துடன் கைகள் நடுங்க காட்டினாள். "ஆனந்த்.. ஆனந்த்!" உதடு நடுங்கியது.

ஏசியிலும் சம்யுக்தாவிற்கு வேர்த்து கொட்டியது.

"எங்கே? யார்? யார் சம்யூ...?"

"சாம்பல் வண்ண கோட் போட்டு நம்மையே முறைக்கிறான்! ஐயோ.. கௌதம் பயமா இருக்கே! யாரை பார்க்கக் கூடாதுன்னு நினைச்சேனோ.. அவன்! அவனைப் பார்த்துட்டேனே!" கௌதம் கையை கெட்டியாய் பிடித்துக்கொண்டாள்.

"நான் இருக்க... எதுக்கும்மா பயம்? என்னை மீறி உன்னை அவன் என்ன செய்துடுவான்? ம்? பார் எப்படி வேர்த்திருக்கு! அடடா...!" கைகுட்டையை எடுத்து அவள் முகத்தை துடைத்துவிட்டான்.

"நாம போயிடலாம் கௌதம்! நைட்டே ப்ளைட் பிடிச்சி போயிடலாம்!" சிறுபிள்ளையாய் அழுதாள்.

"சம்யூ... கோழைமாதிரி பேசாதே! அவன் வெறும் மூட்டைப்பூச்சி! மூட்டைப்பூச்சிக்கு பயந்துட்டு.. வீட்டை கொளுத்தற முட்டாளா நாம்? எனக்கு ஐஜியை தெரியும்!



என் ப்ரண்ட் சிவாதான் சென்னையின் ஐ.ஜி! எந்த ஹெல்ப்புன்னாலும் செய்வான். பயப்படாதே!" என்று கூற... கொஞ்சம் நடுக்கம் குறைந்து அமர்ந்திருந்தாள்.

"சம்யுக்தா நல்லா இருக்கீயாமா?" என்று கேட்ட சில பெரியவர்களுக்கு பதில் சொல்லாமல் அவள் இருக்க...

"இயல்பா ஒரு சம்யுக்தா! ஆட்டம், பாட்டு, பாட்டில்ன்னு அமர்க்களப்படுது! உனக்கு குடிக்க என்ன வேணும்?"

"பியர்? பிராந்தி? ஸ்காச்?"

"................."

"நாட்டுச்சாராயம், ஊறுகாய்த்தான் பிடிக்குமா?" சம்யுக்தா... அவன் கேட்ட தொனியைப் பார்த்து மலர்ந்து சிரித்தாள்.

"குட்.. இது போலச் சிரிச்சுட்டு இரு! நான் போய் கூல்ட்ரிங்ஸ் எதுனா எடுத்துட்டு வரேன்!"

"வேணாம்.. வேணாங்க! என்னைத்தனியே விட்டுட்டு போகவேண்டாம், கௌதம்! ப்ளீஸ்..." அவன் கையை கெட்டியாய் பிடித்துக் கொண்டாள்.

அவளுடைய கையின் குளிர்ச்சி.. அவனுடைய வெப்பமான உடலில் மூடுபனியாய் ஊடுருவி சிலிர்க்க வைத்தது.

சம்யுக்தாவின் அண்மை, அவள் மீது இருந்து வீசும் சுகந்தமான பெண்வாசம் அத்தனையும் பிடித்துவிட... அவன் அருகிலேயே அமர்ந்துவிட்டான்.

"சம்யூம்மா... அங்கே பார்! ஒருத்தி என்னைக் கண்ணாலேயே கற்பழிச்சிடுவா போலத் தெரியுது! அவளோட

ஜோடியா ஆட வாணுமாம்! அதான் ஏக்கமா பார்க்கிறான். கொஞ்ச நேரம் அவளோட ஆடிட்டு வரேனே!'' பொய் யாய் கௌதம் கெஞ்ச...

''அவள் மட்டுமா? எல்லாருமேதான்.. உங்க மேல வச்சக்கண்ணை எடுக்காமல் பார்க்கறானுங்க!'' முணு முணுத்தாள்.

''உனக்கு பொறாமையா இருக்கா?'' சட்டென்று கேட்க...

உடனே பதில் சொல்லாமல் பேய் முழி முழித்து பின்னர் ''இல்லை!'' என்றாள்.

''சரி. நான் ஆடணும்! நீயாவது வாயேன்! நீயும் அனு பவிக்காமல்.. என்னையும் அனுபவிக்க விடாமல்.. என்ன இது கொடுமையிடா சாமி!'' போலியாய் புன்னகைத்து கௌதம் சிணுங்க...

''திஸ் ஈஸ் டூ மச்! நான் உங்க முதலாளி! நீங்க என் அஸிஸ்டெண்ட்! அந்த லிமிட்டைத் தாண்டக் கூடாது! புரியுதா?'' என்று கோபமாய் கையை உதறி சொல்ல...

''இவ்வளவு நேரம் நான் உனக்கு வெறும் கௌதம்! நீ எனக்கு சம்யூம்மா! இப்போ நீ முதலாளி! நான் வெறும் தொழிலாளியா..? நல்ல கதையா இருக்கே! சரி என்ன சாப்பிடறே?'' நக்கலாய் கேட்க...

''எனக்கு எதுவும் வேண்டாம்! அவன் நம்மையே பார்க்கிறான். எனக்கு அச்சமா இருக்கு! கிளம்பலாம் கௌதம்! நாளைய கருத்தரங்குல கலந்துக்கலாம்! விருந்து வேணாம்! போலாம், கௌதம்! ப்ளீஸ்...'' என்று கெஞ்ச.. அவன் எழுந்து நடக்க பின் தொடர்ந்தாள். ஆனந்த் பார்த்துக் கொண்டே இருந்தான்.



ஆனந்த் முன்வழுக்கை விழுந்து.. சிறிய தொப்பைப் போட்டு.. கண்களுக்கு கீழே கருவளையம் ஏற்பட்டு.. பார்க்கவே அசிங்கமாய் தெரிந்தான். ஆனால் அந்த கண் களில் மட்டும் பழைய அதே ஒளி, கள்ளம், கபடு, திருட்டுத்தனம் இருந்தது.

''ஹாய் மன்மதா.. கம்பெனி குடுக்கறீங்களா? ஜஸ்ட் ஆப்பனவர் ஆடலாம்?'' என்று ஒரு அழகி பாவாடை, காக்ராசோளியில் தொப்புளைக் காட்டிக்கொண்டு வந்து.. சிரித்தபடி கௌதமைப் பார்த்துக் கேட்க, சம்யுக்தா முகம் சுளித்தாள்.

''நல்ல சான்ஸ்தான்! ஆனால், என் மேம்க்கு இதெல் லாம் பிடிக்காதே! ஸாரி ஏஞ்சல்! வேற எவனையாவது தேடிக்கோ...!'' என்று சம்யுக்தா பின்பு நடக்க...

''வாவ்... பியூட்டிபுல்! எத்தனை உயரம்! எத்தனை கம் பீரம்! நான் இதுபோல ஒரு ஆணை இதுவரை பார்த்த தில்லையே! யூ லுக் வெரி ஸ்மார்ட்'யா!'' என்று ஒரு அழகி.. பிதற்றிக்கொண்டே அருகில் வந்து கௌதம் எதிர்பாராத சமயம்.. எம்பி அவன் கன்னத்தில் முத்தமிட்டு விட்டாள்.

''ச்சே...!'' என்று அருவெறுப்பாய் அந்த அழகியைத் தள்ளிவிட்டான்.

சம்யுக்தா கோபமாகி அவனை முறைத்துவிட்டு நடந்தாள்.

''என்மேல் எந்த தப்புமில்லே சம்யுக்தா...!'' அவன் சொல்வதை காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.

ஆனந்தை கண்டது ஒருபுறம் திகில் என்றால்... பலாப்பழத்தைக் கண்ட ஈக்களாய் கௌதமை சில

பெண்கள் காதல் வழிய.. காமம் வழிய.. பார்த்தது கண்டு மறுபுறம் பொறாமை வந்தது.

தனக்கு சொந்தமான பொம்மையை.. பொருளைத் தொட்டால் கோபம் கொள்ளும் குழந்தையைப் போல.. கோபம் கொண்டாள்.

"குட்நைட் சம்யூ...!" என்று கௌதம் மென்மையாய் சொன்னதற்கு.. பதிலாய் அறைக்குள் நுழைந்து 'டமார்' என்று வேகமாய் கதவைச் சாத்தினாள்.

கொஞ்ச நேரத்தில் கதவு தட்டப்பட.. கௌதமாய் இருக்கும் என்று திறந்தவள்.. எதிரில் நின்ற ஆனந்தைக் கண்டவுடன்.. மின்சாரம் தாக்கினாற்போல அதிர்ந்தாள்.

"நீங்க.. நீ.. நீ.. எங்கே?" நாக்கு மேலன்னத்தில் ஒட்டிக் கொண்டது.

உடம்பெல்லாம் திகில் பரவி மழையில் நனைந்த மயிலாய் வெடவெடத்தாள்.

"யுக்தா.. என் கண்ணே.. எப்படிடா செல்லம் இருக்க? உன்னை விட்டு பிரிஞ்சிப்போய் ரொம்ப கஷ்டப்பட்டுட்டேன்டா! என்னை கல்யாணம் பண்ணிட்டப்ப மெலிஞ்சி... ஒரு மாதிரி தெரிஞ்சே! இப்போ தேவதைப் போல ஜொலிக்கிறாயே கண்ணே...! என் டேஸ்ட்டுக்கு தகுந்தாப்போல இருக்கியே யுக்தா!" என்று ஆனந்த் உளற... அவன் மூச்சுக்காற்றில் ஆல்கஹாலின் வாசம்! வயிறு முட்ட குடித்திருப்பான் போல! நிற்க முடியாமல் தள்ளாடினான்.

"யுக்தா.. அலைஞ்சி திரிஞ்சி.. எனக்கு ஒரு குருடி தான்டா கிடைச்சா! முகரையும் சகிக்காது! ஆனால் வால்பாறையில கேப்பட்ட எஸ்டேட், சொத்துன்னு



இருக்கு! அவ அப்பனை ஏமாற்றி எழுதி வாங்கிட்டேன்! என் மனசில நீ இன்னமும் இருக்கேடா! நீ ம்ன்னு கண்ணசைச்சால்.. அந்த குருடியை மலைமேல் இருந்து உருட்டி தள்ளிட்டு வந்துடுவேன்! என்ன சொல்றே?" அவள் கைப்பிடிக்க உதறியவள்.. ஓங்கி கன்னம் பழுக்க அறைந்தாள்.

"பொறுக்கி ராஸ்கல்! போடா! யுக்தாவாம் யுக்தா! பழைய சம்யுக்தான்னு நினைச்சியா? எங்க வீட்டு தெய்வத்தை சிதைச்சிட்டு வந்த பாவியே! கண்முன்னால் நின்னே கொன்னுடுவேன்.. கொன்னு! உன் குணம் தெரியாமல்.. உன்னை மணந்துட்ட பெண்ணுக்காக வருத்தப்படறேன்டா! போடா.. போய்.. எனக்கு பண்ணிய பாவத்தைப் போக்க.. கடவுள் உனக்கு நல்ல சான்ஸ் கொடுத்திருக்கார். மிஸ் பண்ணிடாதே! அந்த ஊனமான பெண்ணை நல்லா வாழ வைக்கிற வழியைப் பாருடா!" பத்ரகாளியாய் சம்யுக்தா கத்த...

"என்னடி டா.. டான்னு ஆயிரத்து எட்டு முறை சொல்றே? உன் புருஷன்கிற மரியாதை இல்லையா? எனக்கு உன்னை அனுபவிக்கனும்ன்னு ஆசையா இருக்கு, வாடி!" சம்யுக்தா கையைப் பிடித்து இழுக்க...

"பொறம்போக்கு நாயே.. விடுடா!" அவள் அலறிய குரல் கேட்டு.. கௌதம் கதவைத் திறந்தவன் பதறி.. ஓடி வந்து.. ஆனந்தை நான்கு அறை அறைய.. அவளைப் பிடித்திருந்த கையை விட்டுவிட்டு திரும்பினான்.

"யார்டா நீ...?"

"உனக்கு எமன்டா! என்னைக்கு தாலியை அறுத்துட்டு ஓடினியோ.. அன்னைக்கே உனக்கும் சம்யூவுக்கும் உள்ள உறவு விட்டுப்போச்சு! சம்யூ.. இப்போ என் காதலி!

நாளைய மனைவி! விரைவிலேயே ரெண்டுபேரும் மணந்துக்கப் போறோம்!'' கௌதம் மனதிலிருந்த எண்ணங்கள் வார்த்தையாய் வர...

ஆனந்த் அதிர்ந்தான். சம்யுக்தா மிரண்டாள்.

''என்னடா பார்க்கறே? உன்னை... என் சம்யுக்தாவை பார்க்க கூட அனுமதிக்கமாட்டேன்! மீறி அவளைத் திரும்பி பார்த்தே தொலைச்சிடுவேன்டா! இந்த கௌதமைப் பற்றி உனக்கு தெரியாது! ஐ.ஜி. சிவா என் ப்ரண்ட்தான்! போன் பண்ணின உடனே வருவான். உன்னை கைது பண்ணுவான்! நாளைக்கு எல்லா பேப்பர்லேயும், டி.வி. நியூஸ்லேயும் 'பல பெண்களை மணந்து ஏமாற்றிய வாலிபர் கைது'ன்னு உன் போட்டோவோட பேர் வரும்! பரவாயில்லையா? பொய்யில்லேடா!'' என்று கௌதம் சிவாவிற்கு போன் செய்ய....

''ஏய் சிவா.. எங்கடா இருக்க? உடனே வரமுடியுமா? நானா தாஜ்ல இருக்கேன்! கருத்தரங்கு ஒன்றுக்காக வந்தேன்! இங்கே ஒருத்தன் பிரச்சனைப் பண்றான்! உடனே வரியா...?''

''வேணாம்.. வேணாம்...'' என்று ஆனந்த் பின்வாங்க...

''பிராப்ளம் சால்வ்டா...! நீ வரவேணாம்! நானா? நாளைப் பகல் ப்ரீதான்! வரேன்! நிச்சயமா வரேன்டா, மடையா!'' என்று செல்லை ஆப் செய்தான்.

ஆனந்த் திரும்பி பாராமல் ஓடினான்.

''சம்யூ.. நீ உள்ளே வா! தண்ணீர் குடி! படு! அவன் திரும்ப வந்தாலும் வரலாம்! நான் இங்கேயே இருக்கேன். என்னிடம் எந்த பயமும் வேண்டாம்! என் விரல் நகம் கூட உன்மேல் படாது! ப்ராமிஸ்!''



கௌதம் நீட்டிய நீரைப் பருகினாள். அப்படியே படுக்கையில் படுத்தாள். அவன் போர்த்திவிட்டு.. விளக்கை அணைத்து.. இரவு விளக்கைப் போட்டான்.

அவ்வளவு நீள உடலை குறுக்கி.. கஷ்டப்பட்டு ஷோபாவில் படுத்தவன்.. உடனே உறங்கிவிட.. சம்யுக்தா தூக்கம் வராமல் புரண்டாள்.

'சம்யூ.. என் காதலி! நாளைய மனைவி! விரைவில் மணந்துக்கப் போறோம்!' என்று கௌதம் கூறிய வார்த்தைகளே அவள் காதில் ஒலித்தது. கம்பீரமாய் நெஞ்சை நிமிர்த்தி சொன்ன காட்சியே மனத்திரையில் மீண்டும் மீண்டும் வந்தது.

'ஏன் அப்படி சொன்னான்?'

'என்னை ஆனந்திடமிருந்து காப்பாற்றச் சொன்ன பொய்யான வார்த்தைகளா?'

'அல்லது நிஜமாகவே நேசிக்கிறானா?'

'அவன் என்னை நேசித்தாலும்.. அவனை நேசிக்க எனக்கு என்ன தகுதியிருக்கிறது?'

'அவன் கல்யாணமாகாத ப்யூர் வாலிபன்!'

'நான் ஏற்கனவே ஒருவனை மணந்து, ஒரு பிள்ளையை பெற்றவள்! எனக்கும், அவனுக்கும் பொருந்துமா?'

'கௌதம் மட்டும் எப்படி நல்லவனாய் இருக்க முடியும்?'

'அத்தையையும், என்னையும் ஏமாற்றிய... அதே ஆணினம் தானே, கௌதமும்!'

'ஒரு முறை தீக்குளித்தது போதாதா...?'

'கௌதம் நல்லவனாகவே இருந்து.. என்னை நேசித்தாலும்.. அவன் நேசத்தை ஏற்றுக்கொள்ளமாட்டேன்!'

'எனக்கு இந்தப் பிறவியில் மட்டுமில்லாமல்.. இனி வரும் பிறவிகளிலும் ஆண்துணை தேவையில்லை! கல்யாணம் என்ற தூக்குக் கயிறும் தேவையில்லை! அந்த கயிற்றில் ஒரு முறை மாட்டி.. முழி பிதுங்கி... பாதி உயிர்போய்.. வெற்று ஆளாய்.. மதுவுக்காக மட்டும் வாழ்வது போதாதா?'

சம்யுக்தா கண்டதை நினைத்து.. பின் மெதுவாய் உறங்க.. நள்ளிரவுக்கு மேல் திடீரென அலறினாள்.

''கௌதம்.. கௌதம்.. என்னைக் காப்பாற்றுங்க! ஆனந்த்.. ஆனந்த்.. ஐயோ.. கௌதம் என்னை அவன் கிட்ட இருந்து காப்பாற்றுங்க! உங்களால் மட்டும்தான்.. என்னை.. என்னை காக்க முடியும்! ப்ளீஸ்.. வாங்களேன்.. வாங்களேன்!'' அழுகையோடான அலறலில் எழுந்தான், கௌதம்!

''சம்யூ.. சம்யுக்தாம்மா.. இங்கபாருடா.. நான் கௌதம் தான்! விழிச்சிக்கோடா..! விழிச்சிக்கோ கண்ணம்மா! இந்த தண்ணீரைக் குடிடா செல்லம்! ஆனந்த் இனி உன் வழிக்கே வரமாட்டான்!''

சம்யுக்தா மலங்க மலங்க விழித்தாள். அவன் டம்ளரில் தண்ணீரை நீட்ட.. வாங்கி பருகினாள்.

''என்ன சம்யூ.. கெட்ட கனவா..?''

''என்னை விட்டு எங்கேயும் போயிடாதீங்க!'' அவன் கையை கெட்டியாய் பிடித்துக்கொண்டு விடவேயில்லை.



''நான் போகல! நீ படு!'' அவள் படுத்த பிறகும் அவன் கையை விடவில்லை.

சம்யுக்தா விடிந்து எழுந்த போது.. கௌதம் கையை இரவு முழுக்க பிடித்துக்கொண்டு இருந்ததால்.. அவன் உட்கார்ந்த நிலையிலேயே கட்டிலில் தலைசாய்த்து உறங்கிக் கொண்டிருந்தான்.

நாற்காலியில் உடலிருந்தாலும்.. அவளருகில் அவன் தலை இருந்தது.

''ஸாரி.. ஸாரிங்க கௌதம்!'' என்று சம்யுக்தா பதறி னாள்.

அவன் முகம் பார்க்க சம்யுக்தாவிற்கு அவமானமாய் இருந்தது.

சிவாவைப் பார்க்க வெளியேப் போன கௌதம் திரும்பிய போது கையில் ஒரு பார்சல் இருந்தது. அவன் நீட்ட.. புரியாமல் வாங்கிப் பார்த்தவள்.. ''யாருக்கு?'' என்று கேட்டாள்.

''உனக்குத்தான்! சிவாவோட சென்னை சில்க்ஸ் போனேன்! எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது. வாங்கிட்டேன்! உனக்கு பிடிச்சிருக்கா?''

''இதெல்லாம் எதுக்கு? முத்துக்களாலும் மணிகளாலும், ஜம்கிகளாலும், இவ்வளவு கற்களாலும் கிராண்டா இருக்க இதுபோல சேலையெல்லாம் கட்டறதேயில்லை!'' மறுக்க.

''இன்றைய பங்ஷனுக்கு இதைத்தான் கட்டிவரே! என் விருப்பம் இது! அப்புறமா கட்டுவதும், கட்டாததும் உன் விருப்பம், சம்யுக்தா!'' ஒரு மாதிரி வருத்தமான குரலில்,

முகம் வாடி சொல்லிவிட்டு.. தன்னறையில் போய் நுழைந்துக் கொண்டாள்.

மாலை அந்த சேலையைக் கட்டி கண்ணாடியில் பார்க்க. 'இத்தனை அழகா' என தன் பிம்பத்தைப் பார்த்து அதிசயத்தாள்.

"வாவ்.. வாட் எ பியூட்டிபுல்! தலையை தளர பின்னி, ப்ளோட்டிங் விட்டால் பதினெட்டு வயது பருவ மங்கையாய் ஜொலிப்பாய்! சரி பரவாயில்லை.. இழுத்து போர்த்திய சேலையும்.. பாந்தமா தூக்கிப்போட்ட கொண்டையும் உனக்கு பேரம்சம்தான்! என் தேர்வு உனக்கு எப்படியிருக்குமோன்னு பயந்தேன்! சூப்பர்தான்! நான் சேலையைத்தான் சொன்னேன்!" என்று குறும்பாய் கண்சிமிட்ட...

இளநகையோடு பின் தொடர்ந்தாள்.

'இத்தனை பேரழகு பொக்கிஷம் எனக்கே எனக்காய் எப்போது கிடைக்கும்?' அவன் மனம் ஏங்கியது.

சம்யுக்தா அருகில் நிற்பதும்... அவளோடு அருகில் உட்கார்ந்து இருப்பதுமே பெருமையாய் இருந்தது. முன் வரிசையில் அமர்ந்து இருந்தனர்.

கருத்தரங்கு ஆரம்பமாகி அனைவரும் பேசினர். கடைசியாய்...

"இந்த ஆண்டின் ஏற்றுமதியிலும், விற்பனையிலும் சிறந்து விளங்கி.. சாதனையாளர் விருதை தட்டிச் செல்லும் நிறுவனம்.. சம்யுக்தா நிறுவனம்! இந்த இளம் வயதிலேயே இத்தனை அளவு சிகரம் தொட்டு.. இந்த ஆண்டின் சாதனையாளர் விருது பெறும் சம்யுக்தாவை மகிழ்ச்சியோடு மேடைக்கு அழைக்கின்றேன்!" என்று



தலைவர் சொல்ல.. கூட்டத்தில் கரகோஷம் விண்ணைப் பிளந்தது.

"நானா...? நிஜமா.. நம் கம்பெனி பேரையா சொன்னார்? கௌதம்.. கௌதம்.. என்னால் இந்த சந்தோசத்தை தாங்கிக் கொள்ளவே முடியலை!" என்று மலர்ந்து கேட்ட சம்யுக்தாவின் கைப்பற்றி...

"வாழ்த்துக்கள் சம்யுக்தா!" என்று கௌதம் கைக் குலுக்கினான்.

மேடையேறி பரிசு வாங்கியதை.. தூரத்திலிருந்த ஆனந்த் பொறாமையோடு பார்த்துக் கொண்டிருக்க... சம்யுக்தா நெஞ்சை நிமிர்த்தி.. கம்பீரமாய் மைக் முன்பு பேச ஆரம்பித்தாள்.

## 11

மறுநாள்...

விமானத்தைவிட்டு காலையில் இறங்கி... ஏர்போர்ட்டில் இருந்த காரை எடுத்துக் கொண்டு கிளம்பினர்.

நடராஜனுக்கு இரவு அந்த நிமிடமே கௌதம் செய்தியைச் சொல்ல மகிழ்ந்துப்போனார். "எல்லாம் நீங்க வந்த ராசிதான்!" என்று சொல்ல பிரமித்தான்.

கார் வேகமாய் சென்றுக் கொண்டிருந்தது.

"என்னால் நம்பவே முடியல கௌதம் சார்! எனக்கு இன்னும் வியப்பாவே இருக்கு!" என்று கூறியவளை உற்று நோக்கி சொன்னான்.

"அதுயென்ன சார்..! சும்மா கௌதம்னே சொல்லலாமே!"

"ஏதோ ஆனந்தைக் கண்ட பயத்துல அப்படி மரியாதைக் குறைவா அழைச்சிட்டேன்! என்னை மன்னிப்பீங்களா?"

"மன்னிப்பது இருக்கட்டும்! என்னால் இனி வாங்க மேடம்.. போங்க மேடம்ன்னு எல்லாம் சொல்ல முடியாதும்மா! சம்யூ... சம்யூன்னு அழைச்சி.. அதுவே என் உள்ளத்திலும், எண்ணத்திலும் பலமா பதிவாகிப் போச்சு!"

"தனியா இருக்கும்போது எப்படி வேணாலும் அழையுங்க! நம்ம வொர்க்கர்ஸ் முன்னாடி மானத்தை வாங்கிடாதீங்க! உங்களுக்கு நான் இன்னும் நன்றி சொல்லவே இல்லை. ரொம்ப நன்றிங்க கௌதம்! என்னை ஆனந்த் கிட்ட இருந்து காப்பாற்றியதற்கு! 'சம்யூ.. என் காதலி! நாளைய மனைவி! விரைவில் மணந்துக்கப் போறோம்'ன்னு சொன்ன உடனே ஆனந்த் விதிர்விதிர்ச்சிப் போயிட்டான்! நீங்க சொன்ன பொய்யால்.. அவன் போதையெல்லாம் இறங்கி.. அலண்டுட்டான்! முகமெல்லாம் இருட்டாயிடிச்சி! அந்த போஸை என் உயிர் உள்ள வரை மறக்கவே முடியாதுங்க!" என்று சம்யுக்தா விழுந்து விழுந்து சிரித்தாள்.

கௌதம் சீரியஸானான்.

"சம்யுக்தா.. கொஞ்சம் சிரிக்கறதை நிறுத்திட்டு என் பேச்சை கவனி! அவன்கிட்ட சொன்னது பொய்யில்லே! நிஜம்! நிஜமா.. உன்னை நேசிக்கிறேன், கண்மணி! என் நேசத்தை.. என் உயிருக்குயிரான காதலை ஏற்றுக்கொள்வாயா?" சாலை ஓரமாய் காரை நிறுத்தினான்.



சம்யுக்தா பயத்துடன் அவனை நோக்கினாள்.

"நான் உன்னை காதலிக்கிறேன், சம்யூம்மா! கல்யாணம் பண்ணி மகிழ்ச்சியோட வாழ விரும்பறேன்!" அவன் உயிர் உருக சொல்ல...

"ஐயோ... என்ன இப்படி பேசறீங்க?" அலறினாள்.

"உன்னைப் பார்த்த நொடியே.. நீ என் நெஞ்சுக்குள்ளே புகுந்துட்ட சம்யூம்மா...! உன் ஒத்தப் பார்வையிலேயே உன்னோட நான் முழுவதுமா கலந்துட்டேன்! கரைஞ்சிட்டேன்! உன்னோடு கலந்த என் உயிரை.. இனி தனியே பிரிக்க முடியாது சம்யூ...!"

"எதுனா உளறாதீங்க!" மூச்சு வாங்க வேகமாய் சொன்னாள்.

"நான் உளறலே சம்யூ! கோவில்ல தடுக்கி விழுந்த உன்னை தாங்கிப் பிடிச்ச மறுநொடி.. நம்ம ரெண்டு பேர் பார்வையும் கலந்துட்ட நிமிடத்துலே.. என்னுள் காதல் இறங்கிடிச்சி! உன்னை திரும்பவும் பார்ப்பேனோ.. மாட்டேனோன்னு கலங்கின கொஞ்ச நேரத்தில்... உன்னை மீண்டும் கண்டேன்! அப்போதே என்னுள் காதல் ஆழமா வேர்விட்டு.. வளர்ந்து.. கிளைப்பரப்பி.. விண்ணை முட்டி நிற்குது! நீ இல்லாத ஒரு வாழ்க்கையை என்னால் வாழமுடியாது, சம்யுக்தா!"

"கோவில்ல பார்த்த நொடியே உன் தேவதை... உன் தேவதை இவதான்னு என் மனம் கைகாட்டிச்சி! உன்னைக் கண்டதே வரமாய் நினைக்கிறேன், சம்யுக்தா!" எல்லா வார்த்தைகளும் உள்ளத்திலிருந்து உயிர் உருகலாய் வர...

"நான் கல்யாணமானவள்!"

"அது தெரிஞ்ச பின்னால்.. என் உயிருக்குயிரான காதலோடு கருணையும் கைக்கோர்த்துடிச்சி!"

''எனக்கொரு குழந்தையும் இருக்கு!''

''காதலோடு.. கருணையும்.. மதுமீதான பாசமுமாய் சேர்ந்து.. மேலும் என்னுள் பெருங்காதல் பெருகிடிச்சி!''

''ஆண் இனத்தையே வெறுக்கிறேன்!'' முகம் சுளித்து சொல்ல...

''ஒருத்தரை வச்சி எல்லோரையும் எடைப்போடாதே! ஆண்களில் நீ வெறுக்கும் குணமுடைய கயவர்கள் கொஞ்ச பேர் தான்! அதுக்காக ஒட்டுமொத்த ஆணினத்தையே வெறுப்பது எந்த விதத்தில் நியாயம்? என்னை நீ நம்பலாம்! நம்பணும்! உன்னையும், மதுவையும் வச்சி கண்கலங்காமல் காப்பேன்!'' கண்கள் பளபளக்க சொன்னான். மீண்டும் தொடர்ந்தான்.

''இதுநாள்வரை அநாதையா வாழ்ந்துட்டேன்டா! நான் இதுவரை எந்த பொருள் மேலேயும்.. என் எந்த பெண்மேலேயும் ஆசைப்பட்டதில்லே! நான் விரும்பிய முதல் பெண், சம்யுக்தா! என்னைச் சலனப்படுத்திய பெண், சம்யுக்தா! என் உணர்வுகளை மீட்டி.. காதலைக் கற்றுத் தந்தவள் நீ! என் நேசத்தை புரிஞ்சுக்கோ, சம்யுக்தா!''

கௌதம் அவள் மீதான நேசத்தை சொல்லச் சொல்ல.. அவளிடம் திமிறிக் கொண்டு போன மனதை.. கட்டுப்படுத்த பெரும்பாடுபட்டாள்.

''அசிங்கமா பேசாதீங்க!'' எச்சரிக்க ரொம்பவே கஷ்டப்பட்டாள்.

''உன்னுடைய சொத்துப்பார்த்தோ.. அழகு பார்த்தோ எனக்கு காதல் வர்ல! நீ பணக்காரியா? திருமணமானவளா? எனக்கு எதுவுமே தெரியாது! உன்னை



பார்த்த நொடி... என்னவள்... எனக்கு சொந்தமானவள்.. என் தேவதைன்னு தோண... காதல் வந்துடிச்சி! ஒன்னு சொன்னால் அடிக்க வரமாட்டியே! உன்னோட தினம் தினம் கனவுகளிலும், கற்பனைகளிலும் குடும்பம் நடத்தறேன். அதன் விளைவா வரிசையா வதவதன்னு குழந்தைகள்! அதுல முதல் குழந்தையே நம்ம மதுதான்!''

''சொந்தம்.. பந்தம்.. தாய்ப்பாசம் எதுவுமே எனக்கு தெரியாது, சம்யுக்தா! தாய்ப்பாசமும், தாய் மடியும் எனக்கு வேணும்! உன்னால் மட்டும்தான் எனக்கு அதையெல்லாம் கொடுக்க முடியும். நீ மட்டும்தான் தாய்க்கு தாயாகவும்... தாரத்துக்கு தாரமாகவும் இருப்பாய்! ஏன்னா நீ ஏற்கனவே ஒரு நல்லத்தாய்! தாயில்லாத அத்தனைக் கணவன்மாருக்கும்.. அவரவர்கள் மனைவி தான் தாய்!''

''கண்டமேனிக்கு பேசாதீங்க! சின்ன வயசு! சொல்லக் கூடாதுன்னு நினைச்சேன்! ஆனாலும் சொல்றேன்! அழகும், ஆண்மையும், கம்பீரமும் ஒருங்கே இணைந்த மனிதர் நீங்க! எத்தனைப் பேருக்கு இப்படி அமையும்? நல்லப் பொண்ணா... நானேப் பார்த்து வைக்கிறேன்! சந்தோசமா குடும்பம் நடத்தற வழியைப் பாருங்க!''

''என்னைச் செத்துப்போகச் சொல்லு.. சந்தோசமா செத்துப்போறேன்! ஆனால் வேறப்பொண்ணோட வாழச் சொல்லாதே! உனக்கு அந்த உரிமையும் இல்லே! என் பொண்டாட்டின்னா அது இந்த ஜென்மமில்லே.. இனி எத்தனை ஜென்மமானாலும் நீதான்! கௌதம்.. கௌதம்ன்னு பைத்தியமா என் பின்னால் நிச்சயமாய் அலையும் நாள் வெகு தூரத்திலில்லே!'' என்றவன் கோபமாய் காரை எடுக்க...

சம்யுக்தா.. மிரட்சியுடன்.. திகிலுடன்... அவனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

# 12

''நாளைக்கு சன்டே! மதுவைப் பார்க்கப் போனால் நானும் உன்கூட வருவேன்!''

''வேண்டாம் சார்! ஏற்கனவே டாடி.. டாடின்னு அரிச்சல்ன்னுதான் அங்கே கொண்டுபோய் விட்டதே! இதுல உங்களைக் கூட்டிட்டுப்போனால் அவ்வளவுதான்! வேற வினையே வேண்டாம்!'' சம்யுக்தா கொஞ்சம் கௌதமிடம் கோபமாய் பேசினாள்.

மறுநாள் காலையிலேயே அவன் வீட்டில் இருந்தான்.

மலர்விழி, நடராஜன் இருவரும் இன்முகத்துடன் வரவேற்றனர்.

''தம்பியும் வரேன்னு சொல்றாரே.. அவரையும் கூட்டிப் போகக் கூடாதா?''

''நீங்க அவருக்கு வக்காலத்தாப்பா?''

''உனக்கு துணையா இருக்கும்ன்னுதான்!''

''இதுநாள்வரை எந்த துணையோட போனேன்?''

''இதுநாள் வரையிலும் உனக்கான சரியான துணைக் கிடைக்கலே! இப்போத்தான் கிடைச்சிருக்கு! பயன்படுத்திக்கோயேன், சம்யுக்தா!'' என்று அம்மா சூட்சமமாய் சொல்ல.. ஒருமுறை முறைத்துவிட்டு வெளியேறினாள்.



அவளுக்கு முன்பே.. கௌதம் காரில் ஏறி அமர்ந்து.. முன்பக்க கதவை திறந்துவிட... முறைத்துக் கொண்டே அமர்ந்தாள்.

சம்யுக்தா முகத்தில் அப்பட்டமாய் கோபம் கசிந்தது. மாக்மாவாய்!

பூமிக்கு அடியிலுள்ள நெருப்புக் குழம்பில் வெப்பமும், நீராவியும், வாயுவும், அழுத்தமும் ஏற்பட்டு... அது மேலெழுந்து பூமிக்கடியிலுள்ள பிளவுகளில் நெருப்புக் குழம்பாய், மாக்மாவாய் வெளிப்பட்டு.. பாறைகளின் இடுக்குகளிலும், பிளவுகளிலும் நிற்கும். பின்னர் நாளடைவில் இந்த நிகழ்ச்சி ஏற்பட்டு.. அழுத்தம் காரணமாய்.. பூமி பிளந்து எரிமலையாய் வெளியேறும்!

சம்யுக்தா என்ற எரிமலை எப்போது வெடிக்கும் எனக் காத்திருந்தான், கௌதம்!

அவள் பேசவில்லை! அவனும் பேசவில்லை!

மௌனம் இருவரையும் அடக்கி ஆண்டது.

அந்த மௌனம் படிப்படியாய் அதிகரிக்க.. சம்யுக்தாவினுள் செந்தணல் குறைந்தது.

மேட்டுப்பாளையம் வரை பேச்சேயில்லை!

ரம்யமான சூழ்நிலையில் நகரை விட்டுத் தள்ளி.. பள்ளி இருந்தது. அந்த காம்பவுண்டின் உள்ளேயே ஹாஸ்டலும்!

மதுமதிக்கு ஆள்போய்.. அழைத்து வரப்பட்டாள், விசிட்டர் ஹாலுக்கு!

''ஐய்.. மம்மி!'' என்று ஓடிவந்து வேகவேகமாய் காலைக் கட்டிக்கொள்ள.. ஆசையாய் குழந்தையைத் தூக்கி முத்தமிட்டாள்.

சம்யுக்தாவின் பின்புறம் உயரமாய் நின்ற கௌதமை பரவசமாய் நோக்கினாள்.

அதற்கு பின்னர் "சம்யுக்தா மேடம்.. இங்க வாங்க!" என்று ஹாஸ்டல் வார்டன் அழைக்க.. குழந்தையைக் கீழே விட்டுவிட்டுச் சென்றாள்.

இதுவரை சம்யுக்தாவோடு எந்த ஆண்மகனையும் இணைந்து காணாத மதுவுக்கு, முதன் முதலாய் தாயோடு கௌதமைக் கண்டதும்.. தனது தந்தை என்று நினைத்துக் கொண்டாள்.

"நீங்கதான் என் டாடியா...?" என்று அந்த அழகான பிஞ்சு மலர்ந்து.. அவன் காலை வந்து கட்டிக் கொண்டு பரிதாபமாய் கேட்க...

கௌதம் தாங்கமுடியாமல் உணர்ச்சி மேலிட... பாசம் பொங்க... குழந்தையைத் தூக்கி அணைத்துக்கொண்டான்.

"நீங்க என் டாடிதானே?" மீண்டும் மழலையாய் கேட்க.. இல்லை என்று சொல்ல அவனால் முடியவில்லை.

"ஆமா.. ஆமாண்டா!" கண்கள் கலங்கியது.

"என் டாடி.. என் அப்பா...!" என்று அவன் கழுத்தை இறுக்கி கட்டி.. கன்னம், உதடு, நெற்றி என்று முத்தமிட்டு எச்சில்படுத்தியது.

"என்னையும், மம்மியையும் விட்டு எங்கே போனீங்க? என் ப்ரண்ட்ஸ் எல்லாருக்கும் டாடி இருக்க... எனக்கு மட்டும்தான் இல்லே!"

"அதான் வந்துட்டேன் இல்ல! இனி உன்னைவிட்டு போகமாட்டேன்டா கண்ணா! உனக்கு இந்த டாடியை பிடிக்குதா? எவ்வளவு பிடிக்குது?"



"நிறைய.. நிறைய!" மீண்டும் முத்தமிட்டது. "ஏன் என்னையெல்லாம் விட்டுப் போனீங்க?"

என்ன சொல்வது எனத் தெரியாமல் முழித்தவன்... பின் சொன்னான்.

"நான் ஏழைடா! உன் மம்மியை கல்யாணம் பண்ணிட்டேன்! உன் தாத்தா ஏழைன்னு என்னை உன் மம்மிகிட்ட இருந்து பிரிச்சுட்டார்! உன் மம்மியும் அவ அப்பா பேச்சி கேட்டுட்டு.. என்னைப் பிரிஞ்சு போயிட்டாள்! எனக்கு மட்டும் உன்னைப் பிரிஞ்சி இருக்கணும்ன்னு ஆசையா...? இல்லடா!"

"டாடி நானும் உங்களோட ஊருக்கு வந்துடவா?"

"படிப்பு?"

"செகண்ட் ஸ்டேண்டடுக்காவது ஊட்டியில மம்மிகிட்ட சொல்லி சேர்ப்பீங்களா? அடுத்த இயர்ல இருந்து ஊட்டியில உங்களோடவே படிக்கறேன்! எனக்கு இனி உங்களைப் பிரிஞ்சி இருக்க முடியாது!" அழுதது.

"சரி.. சரி.. இப்படி அழுமூஞ்சி பாப்பாவா இருந்தா எனக்குப் பிடிக்காது!"

"இப்படி ஒரு அழகான அப்பா இருக்கறதா.. மம்மி சொல்லவே இல்லை! எவ்வளவு நீளக் கைகள்! எவ்வளவு நீளக் கால்கள்...! என் டாடி எத்தனை உயரம்! சூப்பரா இருக்கீங்க டாடி! என் ப்ரண்ட்சங்ககிட்ட காட்டணும்! வரீங்களா?"

"மெதுவா காட்டலாம் மது! உன் அம்மா வரா!" என்று கூற... சம்யுக்தாவைக் கண்ட மதுமதி முறைத்தாள்.

"இவ்வளவு நல்ல அப்பா எனக்கு இருக்கார். ஏன் சொல்லல? என் டாடி ஏழைன்னு உன் அப்பாவோட

சேர்ந்துட்டு.. என் செல்ல டாடியை பிரிஞ்சி வந்துட்டையா?"

"டாடியா...? குழந்தைகிட்ட என்ன சொன்னீங்க?" சீறினாள். மதுவை இழுத்துக் கொண்டு மரத்தடி பெஞ்சுக்குப் போனாள். கொண்டு போன உணவைப் பிரித்து ஊட்டப் போக...

"நீ வேணாம்! என் டாடி ஊட்டிவிட்டாத்தான் சாப்பிடுவேன்!" அடம்பிடிக்க...

"என்னங்க இதெல்லாம்...?" என்று சம்யுக்தா பரிதாபமாய் கேட்க..

"என் பொன்னு!" அவளிடமிருந்த உணவை வாங்கி கௌதம் ஊட்ட மது சாப்பிட்டாள்.

"என்னடி படிக்க மாட்டேங்கிறியாம்? பஸ்ட், செகண்டுன்னு ரேங்க் வாங்கினவள்.. இப்போ எயிட் போயிட்டையாமே! வார்டன் புகார் சொல்றாங்க! என்ன ஆச்சிடி?" சம்யுக்தா கோபமாய் கை ஓங்க...

"சம்யுக்தா...!" வேகமாய் அதட்டினான். "நீ இவ்ளோ ராட்சசியா இருப்பேன்னு கொஞ்சம்கூட எதிர்பார்க்கலே! நீ தூரப்போ! மதுக்குட்டி நீ நல்லா படிக்கணும்டா! அப்போதானே நீ டாக்டராக முடியும்! எனக்கும், மம்மிக்கும் ஊசிபோட முடியும்! சொல்லு?" இதமாய் கேட்க...

"ஆமா டாடி!" என்றது.

"சமத்தா படிக்கணும் செல்லம்!"

"அப்படின்னா என்னைத் தினமும் வந்து பார்க்கணும்! ஹாலிடேஸ்ல என்னை பார்க், லேக், தொட்ட பெட்டான்னு கூட்டிப் போவீங்களா?"



"தினமும் வரேன்! ஹாலிடேஸ்ல ஜமாய்ச்சுடலாம்! ஓ.கே.வா!"

குழந்தையோடு நாள் முழுக்க இருந்துவிட்டு கிளம்ப... குழந்தை அவன் காலைக் கட்டிக் கொண்டு அழுதது.

"டாடி.. டாடி.. என்னைவிட்டுப் போகாதீங்க!" என்று அழுததை சமாதானப்படுத்திவிட்டுவிட்டு மனசேயில்லாமல் திரும்பினான்.

"குழந்தைகிட்டப் போய் உங்களை டாடின்னு சொல்லி... ஏன்? ஏன் கௌதம்?"

"நானா சொல்லலம்மா! அப்படி முறைக்காதே! என் டாடியான்னு கேட்ட குழந்தைக்கு இல்லேன்னு சொல்ல மனசு வர்ல! அவளைப் பார்க்காதப்பவே.. என் பொண்ணா மனசுல ஏத்துகிட்டவன்! நேர்ல பார்த்ததும்.. மதுவோட ஏக்கத்துல பாசத்துல உருகிட்டேன்! நிச்சயமா சம்யூ....! பொய்யில்லே!"

அப்படிச் சொன்ன கௌதமை கோபித்துக் கொள்ள மனம் வரவில்லை, இதனால் வரப்போகும் விபரீதம் தெரியாமல்!

## 13

இரவு!

குளிர்ந்த பனிக்காற்று சன்னலின் வழியே ஊடுருவி... உட்புகுந்து.. சம்யுக்தாவின் மேனியை மென்மையாய் தீண்டிச் சென்றது. இந்த குளிர்ந்த தென்றலின் வருடல்

அவளுக்கு மிகவும் பிடிக்கும்! ஊசியாய் உள்ளிறங்கும் இந்த குளிர் பிடிக்கும். நேரம் ஆக ஆக குளிர் அதிகமாக.. கம்ப்யூட்டரை நிறுத்திவிட்டு... சன்னலை மூடி ஹீட்டரைப் போட்டாள்.

உடம்பை இதமாய் முறுக்கி.. படுத்தவளின் செல் போன்.. மெல்ல இசைக்க.. எடுத்தவள் அதிர்ந்தாள். மது ஹாஸ்டலிலிருந்து!

"மதுவுக்கு என்ன மேடம்?" அதிர்ந்தாள்.

"மதுவுக்கு ஒண்ணுமில்லே! நேற்று உங்களோட வந்தாரே அவர்... மதுவைப் பார்க்கணும்ன்னு வம்பு பண்றார். பேர்கூட கௌதம்ன்னு சொன்னார். என்ன செய்வது? புரியலை மேடம்!"

'ஆபீஸ் விட்டு.. பஸ்ஸில் பயணம் பண்ணி.. மதுவைப் பார்க்க புறப்பட்டுவிட்டாரா? ஐயோ கடவுளே.. அவளைப் பார்த்துவிட்டு.. இந்த கடுங்குளிரில் மீண்டும் பயணித்து.. வந்து.. படுத்து.. பாவமே...!'

"மதுவைப் பார்க்க அனுமதிக்க வேண்டாமா?"

"இல்ல.. இல்ல.. அனுமதிங்க! அவர் என் ரிலேடிவ் தான்!" சட்டென்று சொன்னவள் 'தான்தானா கௌதமை உறவென்று சொன்னது?' என்று ஆச்சரியப்பட்டுப் போனாள்.

கௌதமைக் கண்ட மது ஆனந்தக் கூத்தாடினாள்.

"டாடி.. டாடி.. என் செல்ல டாடி.. என் தங்க டாடி... சொன்னமாதிரியே வந்துட்டீங்களேப்பா...!" கழுத்தைக் கட்டி.. முத்தமிட்டு.. மடியில் படுத்துப்புரண்டாள்.

கௌதம்... அந்த மழலையின் அன்பு மழையில் நனைந்து குளிர்ந்துப்போனான். 'ஒரு குழந்தையால் இத்தனை ஆனந்தம் கிடைக்குமா...?' என்று எண்ணி வியந்துப்போனான்.



மதுவோடு கொஞ்சி விளையாடிவிட்டு கிளம்பும் போது "நாளைக்கு வருவீங்களாப்பா...?" என்று குழந்தை கண்களில் கண்ணீர் வழிய கேட்க... "நிச்சயமா மது! போய் படுத்து நல்லா தூங்குடா! வரேன்!" கையாட்டி விடை பெற்று வந்தான்.

பஸ் ஏறினான், கௌதம்!

சம்யுக்தா பலமுறை அவன் செல்லுக்கு முயற்சிக்க... ஸ்விட்ச் ஆப் என்று சொல்லப்பட்டது.

சம்யுக்தா போன் பண்ணி எக்குத்தப்பாய் கத்துவாள் என்று தெரிந்தே.. ஸ்விட்ச் ஆப் செய்து வந்திருந்தான்.

மறுநாள் ஆபீஸிற்கு வந்ததுமே அவனை அவளறைக்கு அழைத்தாள். கௌதமை உட்காரச் சொல்ல அவன் அமர்ந்தான்.

"உங்க மனசுல என்ன நினைச்சிட்டு இருக்கீங்க? அந்த நேரத்துக்கு அவ்வளவு தூரம் பயணம் பண்ணிப் போய்... அவளைப் பார்க்கணுமா? என்ன அக்கறை? ஏன் இப்படி கிறுக்குத்தனமா எதுனா செய்யறீங்க? ஏற்கனவே நீங்க உடம்பு முடியாமல் போய் படுத்தது போதாதா? ஒரே நாளிலே டாடி.. டாடின்னு ஒட்டிட்டாள். மீண்டும் மீண்டும் போய் நீங்க பாசமும், அன்பும் காட்டினால்... அது ஆழ அவள் மனசுல பதிஞ்சிட்டா.. அப்புறமாய் பிரச்சனை உங்களுக்குத்தான் கௌதம்! நாளைக்கு உங்களுக்குன்னு ஒரு வாழ்க்கை, மனைவி, குழந்தைங்கன்னு வரும் போது... இது பூதாகரமா வெடிச்சி.. பெரிய பிரச்சனை வரலாம்! தேவையில்லாம வம்பையும், பிரச்சனையையும் இழுத்துவிட்டுக்காதீங்க, கௌதம்! இனி குழந்தையைப் போய் பார்க்காதீங்க! சொன்னால் கேளுங்க! ப்ளீஸ்..." சம்யுக்தா கெஞ்ச...

"நீயில்லாமல் எனக்கு ஏது வாழ்க்கை? என் மனைவின்னால் அது நீதான்! என் தலைப்பிள்ளைன்னால் அது மதுமிதான். அதைப் புரிஞ்சிக்கோ!" கறாராய் சொன்னான்.

"சும்மா பைத்தியம் மாதிரி உளறிட்டு திரியக்கூடாது, கௌதம்! ஏற்கனவே பாழாப்போன கல்யாணத்தையும், கணவனையும் பார்த்து குடுபட்டவள்... மூச்சு முட்டியவள் நான்! திரும்பவும் அந்த விலங்கைப் பூட்டிக்க எனக்கென்ன புத்தியா இல்லை? சொன்னா கேளுங்க சார்!"

"மாட்டேன்!" கௌதம் சிறுபிள்ளையாய் அடம்பிடிக்க...

"உங்களை வேலைக்கு வச்சகிட்டதே... உங்க கண்ணியமான பார்வையையும்.. ஆடை உரிச்சி அசிங்கமா பாக்காத நல்ல குணத்தையும் பார்த்துதான்! அதுவுமில்லாமல் நான் பயத்துல மயங்கி சரிஞ்சப்ப பூப்போல தாங்கினீங்க...! ஆனால் புத்திகெட்டு அங்க இங்க ஆசைக்கொண்டு என்னைத் தொடவே இல்லை! ஒருநாள் முழுக்க.. அதுவும் இரவு... என்னோட ஒண்ணா இருந்தீங்க! அங்கே நீங்க நெனைச்சி இருந்தா... பயத்துல இருந்தவளை தேத்தறாப்போல.. தொட்டு.. கட்டி.. தட்டிக்கொடுத்து... என்னை கிறங்க வைத்து.. என்னை அனுபவித்து இருக்கலாம்! ஆனால் நீங்க அப்படி செய்யலை! இரவு முழுக்க உங்க கையை பிடிச்சிட்டு தூங்கினவளை.. அத்துமீறி தொடாமல் இருந்த உங்க கண்ணியம் எனக்கு பிடிச்சிருக்கு! அந்த ஆனந்த்கிட்ட இருந்து காப்பாற்றின வீரம் எனக்கு பிடிச்சிருக்கு! தவறாமல் மூனு மாசத்துக்கு ஒரு முறை ரத்த தானம் செய்யற நல்ல மனசை எனக்கு பிடிச்சிருக்கு! நாலு பிள்ளைகளை கல்லூரியில சேர்த்து படிக்க வைக்கிறேன்னு சொன்ன உங்க நல்ல எண்ணத்தைப் பிடிச்சிருக்கு! எல்லாவற்றுக்கும் மேலே நீங்க இறந்த பிறகு உங்க கண்களையும், உடலையையும்



மருத்துவம் படிக்கிற பிள்ளைகளுக்கு எழுதி வைத்த பரந்த... உயர்ந்த குணம் பிடிச்சிருக்கு! உங்க அழகு, கம்பீரம் கூட பிடிச்சிருக்கு! ஆனால் உங்களை காதலனாகவும்.. கணவனாகவும் பிடிக்கலே, கௌதம்!" நீளமாய் பேசி... கண்ணீர்விட்ட சம்யுக்தாவிடம் சட்டென்று சொன்னான்.

"பொய் சொல்லாதே சம்யூ! உனக்கு என்மேல் காதல் இருக்கு!"

"நீங்களா கண்டதை நினைச்சிட்டா நான் பொறுப்பா...?"

"பின்னே ஏன் நான் எவளோடவாவது சிரித்துப் பேசினால் அவ்வளவு கோபம் வருது?" சம்யுக்தாவை மடக்கினான், கேள்வியால்!

"பாவம் பொண்ணுங்க...! ஆண்கள்கிட்ட கெட்டுப் போகக் கூடாதுங்கிற நல்லெண்ணம்தான்!"

"ஆஹா பெரிய நல்ல எண்ணம்! காதலை மட்டும் தன்னுள்ளே போட்டு மறைச்சிக்கவோ.. புதைச்சிக்கவோ முடியாது, சம்யுக்தா! விரைவிலேயே உன் செப்பு வாயால் 'ஐ லவ் யூ கௌதம்!' என்று சொல்ற நாள் வரும்!"

"அப்படி ஒரு நாள் சத்தியமா என் வாழ்க்கையில் வரவே வராது!"

"நீ தோற்கப் போறேடி!" கௌதம் ஆத்திரத்தில் கத்த...

"என்ன இது மரியாதையில்லாமல்?" சம்யுக்தா வெகுண்டாள்.

"ஆபீஸ் டைம்னாலும் நீ பர்சனல் பேசறே இல்லையா? இப்போ நீ என் பொண்டாட்டியா பேசறே! உனக்கெதுக்கு மரியாதை?" சர்வசாதாரணமாய் சொன்னான்.

"ஐயோ.. உங்களுக்கு எப்படி புரிய வைப்பேன்னு தெரியலையே! உங்களை வேலையை விட்டுத் தூக்க

லாம்ன்னாலும்... திரும்ப நல்ல வேலை கிடைக்கும் வரை.. நாலு பிள்ளைகளோட படிப்பு வீணாயிடும்ன்னு பார்க்கிறேன்! சரி நீங்க போங்க! உங்களுக்கு எப்படி சொன்னாலும் புரியாது!'' என்று சொல்லிவிட்டு தலையைக் குனிந்துக் கொண்டாள்.

"அழறியா கண்ணம்மா?" என்று அக்கறையாய் கௌதம் கேட்க "முதல்ல போங்க...!" கத்தினாள், சம்யுக்தா.

கௌதம் கவலையே படாமல் புன்னகைத்துக் கொண்டு வெளியே வந்தான்.

கௌதம் அடிக்கடி மதுவைப் போய் பார்த்தான். அவன் முடிந்தவரை தினமுமே கிளம்ப.. சம்யுக்தா தலையிலடித்துக் கொண்டு.. தனது காரை எடுத்துக் கொண்டு போகச் சொன்னாள்.

''டாடின்னு சொல்றாளே! மேடத்தை மேரேஜ் பண்ணிக்கப் போறீங்களா சார்? என்ன உறவு?'' என்று ஒருநாள் ஹாஸ்டல் வார்டன் கௌதமைப் பார்த்து கேட்க...

''என் மாமன் மகள்! நான் அவளுக்கு அத்தைப் பையன்! என் முறைப் பெண்தான், சம்யுக்தா!'' என்று புளுக... அந்த பொய்யை அப்படியே அந்த அம்மாள் நம்பிவிட்டாள்.

சம்யுக்தா வராத வாரவிடுமுறைகளில் கௌதம் மதுவை சேலம், ஏற்காடு, கோயம்புத்தூர், ப்ளாக்தண்டர் என்று அழைத்துப் போவான்.

சம்யுக்தாவின் வரவைவிட.... கௌதமின் வரவுக்காய் ஏங்கினாள், மது!

பரிட்சை முடிந்து சம்மர் ஹாலிடேய்ஸ் விட.. வீட்டுக்கு வந்த மது.. பெரும்பாலும் மாலைவேளைகளில் அவனோடுதான் செலவிடுவாள். சம்யுக்தா எத்தனை



முகத்தைக் காட்டினாலும், பிள்ளைக்காய் அவன் வீடு வந்துவிடுவான்.

மலர்விழி தரும் இஞ்சி டீக்கு அவன் அடிமை!

நல்ல பிஸியோதெரபிஸ்ட்டை பாண்டியிலிருந்து வரவழைத்தான். அவன் கௌதமின் நண்பன். அவனுடைய ஆலோசனைப் பேரில் ஒரு நர்ஸ்ஸை அமர்த்தி.. ட்ரீட்மெண்ட் கொடுக்க ஏற்பாடு செய்தான். சில சமயம் ஆயிலை எடுத்து அவனே கைகால்களில் தடவி.. நீவி... பிடித்துவிட... கௌதமின் பாசத்தில் நடராஜன் குழைந்து விடுவார்.

ஒரு நாள் சம்யுக்தா இல்லாத சமயம்...

''அங்கிள்.. நான் அநாதைதான்! இல்லாதவன்தான்! ஆனால் நல்ல படிப்பிருக்கு! நெஞ்சிலே தைரியமிருக்கு! உங்க மகளையும், மதுவையும் கண்கலங்காமல் வைத்துக் காப்பேன் அங்கிள்! சம்யுக்தாவை விரும்பறேன் அங்கிள்! உங்களுக்காவது என் ப்ரியம் புரியுதா, அங்கிள்?'' கௌதம் பரிதாபமாய் சொல்ல...

''கெஞ்சிப்பெறுவதோ.. கேட்டுப் பெறுவதோ.. அது காதலே அல்ல! அது தானா வரணும்! ஏற்கனவே வேண்டாம்.. வேண்டாம்ன்னு மறுத்தவளை.. பிடிவாதமா படுகுழியில தள்ளி... அவள் வாழ்க்கையை பாழாக்கின பாவி நான்!'' நடராஜன் சொல்ல...

''எங்களுக்கு ஆசைதான் தம்பி! ஆனால், அவள் விருப்பம்தான் எங்களுக்கு முக்கியம்! நீங்க நல்லவர்! உங்களை ஒருநாள் சம்யுக்தா புரிஞ்சுப்பாள்! புரிஞ்சி உங்களை மணந்துட்டா... முதல்ல சந்தோசப்படற ஜீவன்கள் நாங்க ரெண்டு பேரும்தான்! என் பெண்ணை

பார்க்கவும்.. உங்களைப் மீண்டும் மணக்கோலத்துல பார்க்கவும்.. உங்களைப் போல நல்லவர் கையில் பிடிச்சி கொடுக்கவும்.. அந்த முருகன்தான் அருள் செய்யணும்!'' மலர்விழி கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொண்டாள்.

''சம்யுக்தா.. நாளை புதுச்சேரிக்குப் போறேன்! மதுவையும் கூட்டிட்டுப் போறேன்!''

''அதெல்லாம் வேண்டாம்! குழந்தையை ப்ளான் பண்ணி என்கிட்டே இருந்து பிரிக்கறீங்களா? என்கிட்ட உங்க காதல் செல்லுபடியாகலேன்னு.. குழந்தை மூலமா என்னை அடையலாம்ன்னு ப்ளான் பண்றீங்களா? உங்க ப்ளான் என்கிட்ட ஒருநாளும் நிறைவேறாது!'' சத்தமாய் பேச...

''ஐயோ.. என் செல்லமே! உனக்கு என்னைப் பற்றி நல்லதாவே நினைக்கவும்.. எண்ணவும் தோன்றாதா? என் சம்யூ.. உனக்கு புத்திமட்டமா இருக்கு!'' என்று நக்கலடிக்க... சம்யுக்தா முறைத்தாள்.

''மது உன் மம்மியோட தொல்லையில இருந்து.. நீ, நான் ரெண்டு பேரும்.. ரெண்டு நாளைக்கு தப்பிக்கப் போறோம்! புதுச்சேரியில நான் வளர்ந்த ஆசிரமம், பார்க், பீச், பஞ்சவடி பெரிய ஆஞ்சநேயர் சாமின்னு நல்லா சுத்தப்போறோம்!''

''சரி டாடி!'' குழந்தை அவன் தோளில் படுத்துக் கொண்டது. மெதுவாய் தட்டிவிட்டான்.

''அவளைப் பிரிஞ்சு என்னால இருக்க முடியாது!''

சம்யுக்தாவை கூர்மையாய் நோக்கினான், கௌதம்!

''அவளைப் பிரிஞ்சி இருக்க முடியாதா? இல்ல என்னைப் பிரிஞ்சி இருக்க முடியாதா? சொல்லுடி?'' ஆழமாய் நோக்கி கேட்க



''ஐயோ...!'' சம்யுக்தா தலையில் அடித்துக் கொள்ள.. சிரித்துக் கொண்டே கேட்டான்.

''இவ்வளவு நாளும் பிள்ளையை ஹாஸ்டலில் விட்டுட்டு பிரிஞ்சி இருந்தவள்தானே? உன்னால் என்னைத்தானே பிரிஞ்சி இருக்க முடியாது?'' அவன் கேட்க.. கோபமாய் தரையை உதைத்துவிட்டு ஓடினாள், தன்னறைக்கு!

ஸ்ரீ அன்னையின் சமாதி முன்பு கௌதம் மண்டியிட... மதுவும் அவனைப் போலவே மண்டியிட்டு கைக்கூப்பினாள்.

''தாயே.. என் இனிய அன்னையே! இந்த மது எனது நிஜ மகளாக வேண்டும்! சம்யுக்தா... என் காதலை புரிந்து.. என்னை மணந்து கொள்ள வேண்டும்! முதன்முதலாய் உன்னிடம் நான் வைத்த வேண்டுகோளை... நீ ஏற்கணும் என் அன்னையே! என் உயிரினும் மேலான.. எனது இனிய தாயே.. எனக்கு நீ அருள்புரிய வேண்டும்!''

கௌதம் கண்மூடி உருக்கமாய் வேண்டிக்கொண்டான்.

## 14

கௌதமின் மனதில் காதல் முள் தைத்து தைத்து பெரிய காயத்தை உண்டு பண்ணியது. காதல் அவன் இதயத்தை சேதப்படுத்தி.. சித்ரவதைக்குள்ளானது.

கௌதம் கண்மூடி உறங்கினால்... சம்யுக்தா அவன் கனவுகளில் சில்லென்ற தென்றலாய் வந்து.. கண்சிமிட்டிக் கடந்துப்போனாள்.

அவன் நினைவுத்தடத்தில்... சம்யுக்தா விழிப்பதித்த பாதச்சுவடுகளே நிறைந்து இருந்தது.

சிலசமயம் அவனுக்குத் தெரியாமல் காதலாய் நோக்கு வாள். அதை அவன் கவனித்துவிட்டால் பார்வையைத் தழைத்துக் கொள்வாள். காதலாய் கனிந்த முகத்தை இயல்பாக்க பெரும் சிரமப்படுவாள்.

சம்யுக்தாவின் ஒத்தப் பார்வையிலேயே... பாரதிதாச வின் வாரிசாய் மாறி.. கௌதம் வரிவரியாய் மனதிற்குள் கவிதை எழுதிவிடுவான்.

நாள்முழுக்க அவளோடு இருந்துவிட்டு.. இரவு அவளைப் பிரியும்போது.. அந்த பிரிவு அவனைக் கொன்றது.

சமீபமாய் மதுவோடு மாலையிலிருந்து இரவு ஒன்பது, பத்து மணிவரை குதூகலமாய் இருந்துவிட்டு பிரியும்போது.. குழந்தை கௌதம் காலைக் கட்டிக் கொண்டு அழும்.

''மம்மி.. டாடிய காட்டேஜிக்கு போகவேண்டாம்ன்னு சொல்லுங்க! டாடி நம்மோடவே இங்கேயே படுத்துக் கட்டும்! டாடியையும், உங்களையும் கட்டிகிட்டு.. உங்க நடுவுல படுத்துநான் தூங்கணும்! தாத்தா.. தாத்தா எனக்கு இந்த ஏழை டாடியே போதும்! டாடிய போக வேணாம்ன்னு சொல்லுங்க? ப்ளீஸ் பாட்டி... நீங்களாவது சொல்லுங்க? டாடி நில்லுங்க.. நானும் உங்களோட வரேன்!'' என்று அவன் பின்னே மது ஓட.... சம்யுக்தா இழுத்து பிடித்து.. அவன் தொல்லை தாங்காமல்.. சட்டென்று ஆத்திர முற்று.. மதுவை ஓங்கி அறைந்தாள்.

இதனைக் கண்ணுற்ற கௌதம் நொடியும் தாமதிக் காமல்.. சம்யுக்தாவை கன்னம் பழுக்க அறைந்துவிட்டான்.

சம்யுக்தா கோபத்தில் முகம் சிவந்து கத்தினாள்.



''என் குழந்தை அடிப்பேன்! கொன்னுக்கூடப் போடு வேன்! அதைக் கேட்க நீங்க யார்?'' என்று சம்யுக்தா கேட்க...

கௌதம் வெலவெலத்து நின்றுவிட்டான். சம்யுக்தா திரும்ப ஒரு அறை விட்டிருந்தாலும் தாங்கிக் கொண் டிருப்பான். ஆனால், நாவால்.. வார்த்தை என்ற நெருப்பு மூட்டி சுட்டதை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

கௌதம் எப்படித்தான் இருப்பிடம் வந்தான்... படுத் தான் என்றே அவனுக்கு தெரியாது. மனம் அலைப்புற்று.. அவனைப் புரட்டிப்போட அவனால் உறங்க முடிய வில்லை. கௌதம் தாளமுடியாமல் புரண்டுப் புரண்டு படுத்து.. கடைசியாய் உறக்கம் அவன் கண்களுக்கு தாலாட்டுப் பாடிய சமயம்.. செல்போன் வீறிட்டு திடுக்கிட வைத்தது.

''கௌதம் குழந்தைக்கு திடீர்ன்னு சுரம் வந்திடுச்சி! டாடி டாடின்னு புலம்பறாள்! நான் பேசினதை மனதில் வச்சிக்காதீங்க! உடனே புறப்பட்டு வாங்க. கார் அனுப்ப றேன்! ப்ளீஸ் மதுவுக்காக... மனசுல எதையும் வச்சுக் காமல்... ப்ளீஸ்...'' சம்யுக்தா கெஞ்ச...

''நிச்சயமா வரேன்!''

கௌதம் எழுந்து சட்டைமாட்டி வெளியே ஓடிவர... கார் வந்து நிற்க.. கொஞ்ச நேரத்தில் மதுவின் முன் நின்றான்.

டாக்டர் ஊசி போட்டு.. மாத்திரை கொடுத்துவிட்டு கிளம்பின நேரம்.. கலங்கிப் போய் கௌதம் நின்றான்.

''என் கண்ணே!'' என்று குழந்தையை அணைக்க...

''டாடி... டாடி.. என்னைவிட்டுப் போகாதீங்க!'' என்று கூறி கழுத்தைக் கட்டிக்கொண்டது.

விடிய விடிய பொட்டு தூக்கமில்லாமல் மடியிலேயே வைத்திருந்த கௌதமைப் பார்க்க.. நிஜமாய் மதுமதியைப் பெற்ற தந்தைப்போல சம்யுக்தாவின் கண்களுக்கும், கருத்துக்களுக்கும் தோன்றியது.

அதிலிருந்து சிலநாட்கள் அவனோடு புறப்பட்டுவிடுவாள், மது! விடிய விடிய நெஞ்சின் மேலேயே படுக்க வைத்திருப்பான்.

ஒருநாள்...

"டாடி நாளைக்கு தொட்ட பெட்டாவுக்கு போகலாமா?"

"நான் ரெடிடா! உன் ஆத்தாதான் பிகு பண்ணுவா?" சொன்னவன் சிரிக்க.. சம்யுக்தா சீரியஸாய் முறைத்தாள்.

"என்னம்மா.. ப்ளீஸ்ம்மா... போலாம்மா..." மது கெஞ்சினாள். "இதுநாள்வரை என் டாடி என்னோட இல்ல! இப்போ இருக்கும்போது என்ன? நீ மோசம் மம்மி!"

"உனக்கு வாய்க்கொழுப்பு அதிகம்டி!" சம்யுக்தா மதுவை அதட்டினாள்.

"மதும்மா.. உன் மம்மி வருவாள்! காலையிலே தயாராகி இருங்க! வந்துடறேன்!"

"நான் மாட்டேன்! அதுவும் உங்களோடன்னா நான் மாட்டேன்!"

"நீ வரேடி! என் குழந்தையோட சந்தோசம்தான்.. என் சந்தோசமுன்னு சொல்லிட்டு திரியறதெல்லாம் பொய்யா?"

"அது நிஜம்!" அழுத்தமாய் சொன்னாள்.

"அந்த நிரூபி!" அதட்டலாய் சொன்னான்.

"இத்தனை நாளும் இந்த முரட்டு மம்மிட்ட மாட்டு கஷ்டப்பட்டேன் டாடி! ஆசைப்பட்டு கேட்டால் ங்கியே தரமாட்டாள்!"



"உனக்கு என்னெல்லாம் பிடிக்கும்? இந்த டாடிகிட்டக் கேளு வாங்கித்தரேன்!"

"நல்ல அப்பா!" கழுத்தை இறுக்கி உதட்டிலும், கன்னத்திலும் மலராத முத்தத்தை வைத்தது.

கௌதம் அழுத்தமாய் மலர்ந்த முத்தத்தை பதிலாய் பதித்தான்.

"இந்த குழந்தையோட பாசத்துக்காகவே.. உன்னை சந்தர்ப்பம் கிடைச்சா கெடுத்து.. உன்னை என் பொண் டாட்டியா ஆக்கிக்கணும்னு தோணுது! ஐயோ.. நீ பத்ரகாளியா மாறாதேம்மா! அவ்வளவு கீழ்த்தரமான புத்தி உள்ளவன் நானில்லே! என் மூளையில அப்படி ஒரு எண்ணமும் இல்லே! அப்படியே ஒரு எண்ணமே இருந்தாலும் மனம் ஒரு நாளும் ஒப்புக்காது! நான் அக்மார்க் சுத்தின நல்லவனாக்கும்!" என்று சம்யுக்தாவின் காதில் கிசுகிசுக்க...

"என்ன டாடி?"

"மம்மிக்கும், எனக்கும் உள்ள ஒரு ரகசியம்டா! நீ சொல்லு? என் தங்கத்துக்கு என்னெல்லாம் பிடிக்கும்?" அன்பாய் கேட்டான், கௌதம்!

"டாடி.. நீங்க பைக் ஓட்டுவீங்களா?"

"சூப்பராடா!"

"அப்போ தொட்டபெட்டாவுக்கு பைக்குல அழைச்சிப் போறீங்களா?"

"சரிடா! நேரமாகுது! டாடி நேரமாய் போய் படுத்தா தானே.. காலையில எழுந்து சீக்கிரமே கிளம்பி வாமுடியும்!"

"உங்ககிட்ட எது பீ வீலர்?"

"வீணா இந்த அழகான சின்ன மண்டையைப் போட்டு குழப்பிக்க வேணாம்! இழுத்து போர்த்திட்டு தூங்கு கிழவி

மாதிரி வரவேணாம்! மார்டன் ட்ரஸ்ல வா சம்யூ!'' கௌதம் கண்சிமிட்ட...

''நான் வர்லே!'' மறுக்க...

''நீ வராமல் என் மகள் உன்னை விடமாட்டாள்!''

''என் மகள்ன்னு அதுயென்ன சொந்தம் கொண்டாட றீங்க?'' வேகமாய் கேட்க...

''எப்போ என்னைப் பார்த்ததும் டாடின்னு சொன் னாளோ அப்போதிருந்து என் மகள்தான்.. என் மது!''

''ஒருபோதும் உங்களை ஏத்துக்க மாட்டேன்! வீணா கனவு காண்றதை விட்டுட்டு பொழப்பைப் பாருங்க!''

''நீ என்ன ஏத்துகிறது? உன் புருஷனா.. என்னை என் மகளே ஏத்துட்ட பின்னாடி.. உன் சம்மதமெல்லாம் ரெண்டாம் பட்சம்தான்!''

''பொறுக்கி மாதிரி பேசாதீங்க! அசிங்கப்படுத்திடு வேன்!'' கோபமாய் கத்த...

''என் பொண்டாட்டி நீ! என் மரியாதையை கெடுப் பாயா?'' கௌதம் மலர்ந்து சிரிக்க.. பெரும் கோபத்திற்கு ஆட்பட்டாள்.

''யூ.. யூ.. கில் மீ...!'' கத்தினாள்.

''கொன்னுப்போட்டுடு நிம்மதியாய் போய் சேரறேன்! உன் கையால சாக கொடுத்து வச்சிருக்கணும்!''

''ஐ ஹேட் யூ...''

''என்னது ஐ லவ் யூ வாடா?'' கண்ணடித்து சிரிக்க...

''ஐ ஹேட் யூ! ஐ ஹேட் யூ! யூ.. யூ.. ஸ்கௌண்ட்ரல்.. யூ.. யூ.. இடியட்!''



''என் காதுல ஐ லவ் யூன்னு கேட்டது கண்ணே!''

''என்கிட்ட உதைப்பட போறேடா!''

''ஆஹா.. என்ன தவம் செய்தேன்! உன் கை என் மேல்பட காத்திருக்கிறேன், கண்மணி! சரி வரேன்! குழந்தை முன்னாடி இப்படி கோபப்படாதே! இதுவரை குடும்பம், குழந்தை, மனைவின்னு கனவே காணாதவன்! குடும்ப பந்தங்கள் பற்றி தெரியாதவன்ம்மா! திடீர்ன்னு கிடைச்ச அப்பா பாசத்துல குளிர்ந்துப் போய் இருக்கேன்! கொஞ்சம் கருணைக்காட்டுடா! கெடுத்துடாதேடா! இந்த அநாதைக்கு இந்த ஒரு சந்தோசத்தை மட்டும் விட்டுக் கொடுக்கக்கூடாதா? ப்ளீஸ்...'' என்று சொன்னவன் முகம் வாடிச் சென்றான்.

சம்யுக்தா சிலையாய் நின்றுவிட்டாள்.

மறுநாள் புத்தம் புதிய ஹீரோஹோண்டா க்ளாமரில் வந்து மன்மதனாய் இறங்கினான்.

''ஐய்யா.. என் டாடி!'' என்று ஓடி வந்த குழந்தையை அலாக்காய் தூக்கி மார்பில் அணைத்துக் கொண்டான்.

சம்யுக்தா வெளியே வந்தவள்.. அதிசயத்தாள்.

''ஏது? புதுசா?''

''ஆமா..!''

''எப்படி? எப்படி?''

''இதுயென்ன கேள்வி? குக்கிராமத்திலா இருக்கோம் நாம்! நேற்று நேராய் போய் வாங்கிட்டு.. ரிசார்ட்டுக்குப் போனேன்!''

''வீண் செலவு! அவன் நாளைக்கு விமானத்தையும், ட்ரைனையும் கேட்டா...?''

''கேட்க மாட்டா! இந்த அப்பனால என்னெல்லாம் வாங்கிக் கொடுக்க முடியுமோ... அதைத்தான் மது கேட்பாள்!''

''ரொம்பத்தான் உங்களுக்கு ஏத்தம்! சின்னக் குழந்தை மேலர்ல போகனும்னு கேட்டதற்காக.. ஐம்பதாயிரத்தைக் கொட்டி.. யாராவது வண்டி வாங்குவாங்களா? அதுவும் உறவே இல்லாத குழந்தைக்கு!'' அழுத்தம் கொடுத்து சொன்னாள்.

''ஒருநாள் நிஜமாவே என் மகளாவாள்! உனக்கு நான் தாலி கட்டியதும்!''

''பைத்தியக்காரன் மாதிரி உளறாதீங்க!''

''ஒருநாள் இந்த பைத்தியத்தை கட்டிக்க... பைத்தியமா அலைவே!'' என்று பழித்துக் காட்டினான்.

''என் வாழ்க்கையில அப்படி ஒரு திருப்பமே வராது''

''என்னைக்கு இருந்தாலும்... என் பொண்டாட்டி நீதான்! அதை மாத்த உன்னாலோ... அந்த கடவுளாலோ முடியாது!''

''இடியட்... இடியட்...!'' திடீரென கத்தினாள்.

''நாளைக்கு இதே வாயால என் இதயமே... என் உயிரேன்னு சொல்றபடி இருக்கும்! கொஞ்சம் அடக்கி வாசிம்மா!''

''நிறைவேறாத கற்பனை!''

''அது என் பிரச்சனை! நீ கிளம்பு!''

அங்கே வந்த நடராஜன் ''எதுக்குப்பா வீண் செலவு'' என்றார்.



''இல்லே அங்கிள்! மது ஆசைப்பட்டாள்! அதை நிறைவேத்தறதுல எனக்கு சந்தோசம்! உங்க பொண்ணு சின்னக் குழந்தைப் போல வர்லேன்னு அடம் பண்றாள்!''

''போயிட்டு வாயேன் சம்யுக்தா!'' தந்தை, தாய், மது எனக் கெஞ்ச... கௌதம் முகம் வாட... மனம் மாறி கிளம்பினாள்.

குழந்தையை முன்புறம் ஏற்ற...

''அவளை உங்க பின்னாடி உட்கார வையுங்க!'' சம்யுக்தா சொல்ல...

''மாட்டேன் மம்மி! ஹரிதா அவ டாடியோட இங்கேத் தான் உட்கார்ந்துட்டு வருவாள்!'' மறுக்க...

சம்யுக்தா வேண்டா வெறுப்பாய் ஏறி அமர... கௌதம் வண்டியைக் கிளப்பினான்.

''சம்யூ... சம்யூ... இவ்வளவு இடைவெளித் தேவையா? விழுந்துடப் போறடா! என்னருகில் நகர்ந்து வந்து... ஒட்டி உட்கார்! கெட்டியா என்னைப் பிடிச்சிக்கோ! நான் எழுபது, எண்பதுன்னு வேகம் எடுக்கப் போறேன்! நீ விழுந்து கையை, காலை உடைச்சிக்காதே!''

சம்யுக்தா அவன் சொல்லச் சொல்ல நகர்ந்து அமர...

''டாடி வேகமா போங்க! காற்று ஜில்லுன்னு முகத்துல மோதறது சூப்பர்!'' மது சொல்ல...

கௌதம் வேகமாய் போக... ஒரு கொண்டை ஊசி வளைவில் எதிர்க்கே வந்த லாரியை கவனிக்காமல் சென்றவன்... பின் கவனித்து பிரேக் போட்டு நிற்க...

சம்யுக்தா காட்சி உணர்ந்து... நடுங்கி... பயந்து கௌதமை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள். அவன் முதுகில் ஒண்டினாள்.

அவனின் ஆண்வாசமும், அருகாமையும்... அவளை என்னென்னவோ செய்தது. ஆனந்த் தொட்டபோது அருவெறுத்த இந்த உடம்பு... இன்று கௌதமை தொட்ட போது மின்சாரம் தாக்கினாற்போல ஒரு உணர்வு ஏற்பட்டு... அவனைக் கட்டிக் கொண்டே சாகும் வரை இருக்க வேண்டும் போலத் தோன்றியது.

சம்யுக்தாவின் மெல்லுடல்... பூக்குவியலாய் அவன் மேல்பட... சிலிர்த்துப் போனான்.

'ஆஹா... என்ன சுகம்?'

'ஒரு பெண்ணின் உடல் இத்தனை சுகத்தை அள்ளித் தருமா?'

சம்யுக்தாவை அன்று கோவிலில் தொட்டபோது வெறும் தென்றல் மட்டும்தான் வீசியது!

இன்றோ குளிர்காலத் தென்றலாய்... மூடுபனியாய் அந்த சுகம் உள்ளிறங்கி... உயிர்வரைச் சென்று தித்தித்தது.

"மெல்லப் போங்கப்பா!" கெஞ்சினாள்.

"சம்யூ... சம்யூம்மா... என்னைவிட்டுடாதேடா! கையை எடுத்துடாதே! இப்படியே கொஞ்ச நேரம் இருக்கிட்டு வாடாம்மா! ப்ளீஸ்... ரொம்ப சுகமாயிருக்கு!"

"அதுக்கு வேற ஆளைப்பாருங்க!"

"ஏய் நிஜமா... நான் வேறு ஆளைப் பார்த்தால் சந்தோஷப்படுவியா?"

அவள் மௌனம் காக்க...

"முடியாது! உன்னால முடியாதுடி! நான் வேற ஒருத்தியை கொஞ்சிட்டு... கட்டிட்டு இருக்காப்போல கற்பனைப் பண்ணிப்பாரேன்! முடியுதான்னு சொல்லேன்!"



"நீங்க எவளோட இருந்தா எனக்கென்ன?"

"சண்டையா டாடி?" மது பயத்தோடு கேட்க...

"இல்லே... இல்லேடா...!" சமாளிக்க கஷ்டப்பட்டான்.

தொட்ட பெட்டாப் போய் வண்டியை நிறுத்தி விட்டு... குழந்தையைத் தூக்கிக் கொண்டான். சொந்தப் பிள்ளையைக் கூட... சட்டை அழுக்காகி விடும் என்று தூக்காத நிறைய தகப்பன்மார்களை சம்யுக்தா பார்த்திருக்கிறாள்.

அங்கிருந்த ரெஸ்டாரெண்ட் கூட்டிப் போய் வற்புறுத்தி இருவரையும் சாப்பிட வைத்தான்.

மதுமதி ஓடினாள், ஆடினாள், இருவரின் கைப்பிடித்து தொங்கினாள்.

ப்ரஸ்ஸான கேரட்டும், அனலில் வாட்டிய முத்துச் சோளத்தையும் வாங்கிச் சாப்பிட்டனர்.

மயிலிறகை சிறுவர்கள் விற்க...

"மயிலிறகு வேணும்பா! புக்குல வச்சிட்டாக் குட்டிப் போடும்!" சின்ன முகம் சுருக்கி ஆசையாய்க் கேட்க...

"என் செல்லமே!" என்று கட்டிக் கொண்டான். ஒரு கட்டு மயிலிறகு வாங்கிக் கொடுக்க... "இவ்வளவும் எனக்கா?" என்று குதூகலித்தது.

செல்போனில் விதவிதமாய் படமெடுத்தான்.

"ஹாய் சம்யுக்தா... ஹவ் ஆர் யூடி?" என்று ஒரு பழையத் தோழி அருகில் வர... கௌதமும், மதுவும் நகர்ந்துக் கொண்டனர்.

இரு பெண்களும் பேச்சு சுவாரசியத்தில்... பாறையின் மறுபுறம் நகர்ந்து போய்விட... அதுவும் சம்யுக்தா பின்பு

கிடுகிடு பள்ளம்! விழுந்தால் எலும்புக்கூட மிஞ்சாது கிடைக்காது.

கௌதம் பயந்துவிட்டான்.

கௌதம் பதறி ஓடிவந்து... சம்யுக்தாவை அருகே இழுத்து அணைத்தான்.

"ஏய் கிறுக்கி... கிராதகி! பழைய ப்ரண்டைப் பார்த்தால்... பின்னாடி என்ன இருக்குன்னு கவனிச்சிப் பார்க்க மாட்டாயா? விழுந்தால்... ஐயோ...! என்னங்க நீங்க.. உங்களுக்கு அறிவே இல்லையா? அவள் நகர்ந்து போறா..! பின்னாடி பள்ளம் இருப்பது... அவளுக்குத் தெரியாது! ஆனால், உங்களுக்குத் தெரியுமில்லே! ச்சே... நீ உன் ப்ரண்டைப் பார்த்த லட்சணம் போதும்டி, மடச்சி! என் உள்ளமெல்லாம் பதறிடுச்சி! வாடி! கொஞ்ச நேரத்துல என்னை பதறடிச்சிட்டியே, ராட்சசி! வாடின்னா...!" என்று கௌதம் கைப்பிடித்து இழுத்துச் சென்றான்.

கண்கள் கலங்கி, உடல் படபடத்து, அவளைத் திட்டி இழுத்துக் கொண்டு போன கௌதமையே விழி அகற்றாமல்... அவனையே ஸ்பரிசித்துக் கொண்டு சென்றாள் சம்யுக்தா!

## 15

வானத்தில் மேகமூட்டம் இல்லாமல்... குளிரும் இல்லாமல்... சூரியனின் இதமான வெய்யிலின் அணைப்பில் இருந்த ரம்மியமான காலைப் பொழுது!



கௌதம், மது, பெற்றோர்களின் வற்புறுத்தலுக்கு கட்டுப்பட்டு... சம்யுக்தா மதுவை ஊட்டியில் உள்ள தரமானப் பள்ளியில் சேர்த்தாள்.

குழந்தை குதூகலித்து பள்ளிக்குச் சென்றது.

மாலையில் தவறாமல் வந்து குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துவிட்டு கௌதம் செல்ல... மது வகுப்பில் முதல் ராங்க் வாங்கினாள்.

அன்று ஞாயிறு என்பதால் காலையிலிருந்து சம்யுக்தா கம்ப்யூட்டர் முன்பு அமர்ந்து மும்முரமாய் வேலை செய்து கொண்டிருந்தாள்.

"மம்மி... வெளியில் க்ளைமேட் ரொம்ப சூப்பரா இருக்கு! கண்ணாமூச்சு விளையாடலாமா? தாத்தா, பாட்டி கூட வரேன்னு சொல்லிட்டாங்க! வரீங்களா?" மது அருகில் வந்து கைப்பிடித்து இழுக்க...

"தூரப்போடி! எனக்கு வேலையிருக்கு!" என்று முகம் சுளித்து எரிச்சல்பட...

"மம்மி... ப்ளீஸ்..." என்று மீண்டும் கெஞ்ச... மறுக்க முடியாமல்... கம்ப்யூட்டரை ஆப் பண்ணிவிட்டு வந்தாள்.

தோட்டத்து மைதானத்தில் மெல்ல மெல்ல நடக்கும் அப்பாவே உற்சாகமாய் வந்து நின்றுவிட... சம்யுக்தா சந்தோசமானாள்.

"ஆட்டத்துல எந்த மாறுபாடும் இல்லையே? யார் மாட்டி அவுட் ஆனாலும்... தோற்ற நபரை வென்ற நபர் கட்டி முத்தமிடற... அதே முறைதானே?" என்று நடராஜன் மதுவைப் பார்த்து கேட்க...

"ஆமாம் தாத்தா!" மது சிரித்தாள்.

"மம்மி நீங்கதான் பெரியவள்! உன் கண்ணுல துணியைக் கட்டுக்க! கமான் குயிக் மம்மி!"

"வாயாடி... என்னை முதல்ல மாட்டி விடறியா? கொடுடி துணியை!"

"டாடியும் இருந்தா விளையாட்டு நல்லாயிருக்கும்! இல்லையா மம்மி?" என்று மது சொல்ல...

"அவரை நினைக்காம இருக்கவே மாட்டியாடி!" என்று குழந்தையை அதட்டிவிட்டு... கண்களில் துணியைக் கட்டி... மெல்ல கைகளை நீட்டி... அவர்களைப் பிடிக்க சம்யுக்தா செல்ல... மூவரும் அவளுக்கு அகப்படாமல் ஓட...

"நான் இங்கே... இங்கே இருக்கேன் மம்மி!" குரல் கொடுத்து மது கொலுசு சிணுங்க ஓடினாள்.

கௌதம் பொழுது போகாமல்... மதுவைப் பார்த்து கொஞ்சி விட்டுப் போகலாம் என்று நினைத்து வந்தவனுக்கு... அவர்களின் விளையாட்டு சுவாரசியம் தர... அருகே போனான்.

சம்யுக்தா அவனுடைய காலடி ஓசையை தந்தையுடையதாய் எண்ணி... முன்னேறி... அவனைப் பிடிக்கப் போக... அவனும் அகப்படாமல் நகர... சம்யுக்தா நாலே எட்டில் எட்டிப் பிடித்து விட்டாள்.

"மாட்டனீங்களா? வசமா மாட்டனீங்களா?" என்று கூறி கண் கட்டை அவிழ்த்துப் பாராமலேயே... அப்பா தான் என்று நினைத்து... சட்டென்று அணைத்து... முகம் பிடித்து முத்தமிட... 'இது அப்பாவின் வாசமல்லவே!' என்று நினைத்து கண் கட்டை அவிழ்த்துப் பார்க்க அதிர்ந்தாள்.



அவனும் முதலில் அதிர்ந்து... பின் அவள் முத்தம் தந்த சுகத்தில் ஆனந்தப்பட்டு சிலாகித்து... அப்படியே சிலையாய் கிறங்கி நின்றான்.

சம்யுக்தாவின் முகம் முதலில் வெட்கத்தில் சிவந்து... பின் அவமானத்தில் மழைநோ வானமாய் குப்பென்று கறுத்தது.

"ஸாரி... ஸாரிம்மா...!" கௌதம் சிலை உயிர் பெற்று பேசியது.

"டாடி... மாட்டனீங்களா! மம்மிகிட்ட அவுட் ஆனீங்க!" என்று மது கைத்தட்டி சிரிக்க...

'கண்டநாள் முதலே... சம்யுவிடம் அவுட் ஆனவனாச்சே!' மனதோடு சொல்லிக் கொண்டான்.

"மம்மிகிட்ட துணியை வாங்கி கட்டிட்டு... மம்மியை விரட்டிப் பிடிச்சி... கட்டியணைச்சி... முத்தமிட்டு மம்மியை நீங்க வெல்லணும் டாடி! ஓ.கே.வா?"

"இல்லேம்மா! வேலையிருக்கு!" என்று மதுவிடம் சொல்லிவிட்டு... சம்யுக்தாவின் புறம் திரும்பினான்.

"சம்யுக்தா... என்னைத் தப்பா எடுத்துக்காதே! உன் மகிழ்ச்சியை கெடுத்ததற்காய் வருந்துகிறேன்! நீ என்னை மன்னிக்க வேண்டுகிறேன்! வரேன்! வரேன் மது! ஸாரி அங்கிள்!" என்று எல்லோரையும் பார்த்துக் கூறிவிட்டுச் சென்றான்.

"எவ்வளவு நல்லப் பிள்ளை! இந்த சம்யுக்தா கழுதை மட்டும் சரின்னு சொன்னால்... கல்யாணத்தை ஜாம் ஜாம்ன்னு நடத்திடலாம்!" என்று அம்மா அப்பாவிடம் புலம்புவது கேட்டது.

அன்று முழுக்க கள்ளுண்ட கணக்காய்... அவள் ஸ்பரிசத்தையும், முத்தத்தையும் நினைத்து நினைத்து மகிழ்ச்சியில் திளைத்தான். நாள் முழுக்க கால் போன போக்கில் லேக், பார்க் என்று அலைந்து திரிந்தான். பசி கூட மறந்து விட்டது.

சம்யுக்தா முத்தமிட்ட இடத்தை நாள் முழுக்க தடவித் தடவி மகிழ்ந்தான். நாள் முழுக்க முத்தமிட்ட இடத்தை பாதுகாக்க... முகமே கழுவவில்லை.

கௌதம் எத்தனை பக்குவமாய் எடுத்துச் சொல்லியும், சம்யுக்தா அவன் காதலைக் காதில் போட்டுக் கொள்ளவே மாட்டேன் என்று பிடிவாதமாய் இருக்க... நிறையவே எரிச்சல் பட்டான்.

மஞ்சுவிடம் போய் நின்றான்.

"மஞ்சு... எனக்காக ஒரு ஹெல்ப் பண்ண முடியுமா?"

"நானா? எப்படி? சரி சொல்லுங்க ப்ரதர்!"

"நான் சம்யுக்தாவைக் காதலிக்கிறேன்!"

"அதான் உங்க உருகலான... ஏக்கமான பார்வையே காட்டிக் கொடுக்குதே! எங்களுக்கெல்லாம் இது எப்பவோ தெரியுமாக்கும்!" என்று கூறி கிண்டலாய் சிரிக்க...

"சம்யுக்தா என்னைப் புரிந்து கொள்ளவே மாட்டேங்கிறாள்! அவளுக்கு என்மேல் விருப்பமும், காதலும் இருக்கு! அதை வெளிக் கொண்டு வரணும்! நீ நினைச்சா முடியும் மஞ்சு!"

"என்னண்ணா விளையாடறீங்களா?"

"நிஜமா மஞ்சு!"

"சரி, உங்களுக்கு உதவ காத்திருக்கேன்! இது எனக்கு கிடைச்ச பெரும்பாக்கியம். எங்க குடும்பத்துக்கு நிறைய



உதவறீங்க! அக்காவுக்கு மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்னு முயற்சி எடுத்துட்டு இருக்கீங்க! நான் எந்த விதத்துல உதவணும்?"

கௌதம் விளக்க... முதலில் மௌனித்தவள்... பின்னர் இன்முகத்துடன் பலமாய் தலையாட்டினாள், மஞ்சு!

"தேங்க்யூம்மா!" மஞ்சு கைப்பிடித்து கண்ணில் ஒற்றிக் கொள்ள...

"நன்றி சொல்லி அந்நியமாக்கறீங்களே... கௌதம்ண்ணா!" என்று முகம் வாடினாள்.

சம்யுக்தா பார்க்கும் போதெல்லாம் மஞ்சுவிடம் சிரிக்கப் பேசினான். சீண்டி விளையாடினான்.

காலையில் அவனோடுதான் மஞ்சு வருவாள். மாலையானால் திரும்பவும் வண்டியில் புறப்படுவார்கள், இருவரும்! இதையெல்லாம் கண்ணுற்ற சம்யுக்தாவிற்கு ஆத்திர ஆத்திரமாய் வந்தது.

அன்று... இடைவேளை முடிந்து கொஞ்ச நேரம் மஞ்சுவிடம் பேசிவிட்டு திரும்பியவனைக் கண்டதும்... அவளுள் தீ கொழுந்துவிட்டு எரிந்தது.

சம்யுக்தா கத்த ஆரம்பித்தாள்.

"அவகிட்ட அப்படி என்ன சிரிச்சி சிரிச்சி பேச்சு? இது பார்க்கோ... தியேட்டரோ இல்லை! உங்க மன்மத லீலைகளை அரங்கேற்றம் செய்ய!"

"நான் எவகிட்ட சிரிச்சி பேசினாலும்... விளையாடினாலும் கண்டிக்கிற உரிமை உனக்கில்லே! நீ யாரும்மா... என் பொண்டாட்டியா? இல்ல என் காதலியா?"

சத்தம் வெளியே கேட்காத கண்ணாடி அறை என்பதால் அவனும் சுதந்திரமாய் கத்தினான்.

"இது என் ஆபீஸ்! நான் உங்க பாஸ்! எனக்கு கேட்க ரைட்ஸ் இருக்கு!"

"நீ எனக்கு பாஸ்தான்! நான் இல்லேன்னு சொல்லல. இடைவேளையின்போது நான் யாரோட பேசினாலும் உனக்கு கேட்க ரைட்ஸ் இல்லே! வேலையில தப்பிருந்தால் தட்டிக்கேள்! கைகட்டி பதில் சொல்றேன்!" சண்டைக் கோழியாய் சிலிர்த்துக் கொண்டு கத்தினான்.

"ஆபீஸ் காம்பவுண்ட்டுக்குள்ள என்ன நடந்தாலும் கேட்பேன்! இது ஒழுக்கமான ஆபீஸ்! ஒழுக்கம் இங்கே முக்கியம்! ஒழுக்கத்தை இங்கே வேலை செய்யற அத்தனைப் பேரும் கடைப்பிடிக்கணும்!" பாம்பாய் சீறினாள்.

"அடடா... உங்க ஒழுக்கத்துக்கு பங்கம் வராப்பல என்னம்மா தப்பு பண்ணினேன்! அவளை தனியே அழைத்துப் போய்..." என்று மேலே சொல்லப் போக...

"ஐயோ போதும் நிறுத்துங்க!" வெறும் பேச்சியே அவளுக்கு வயிற்றைக் கலக்கியது.

"இங்கே யாருமே காதலிக்கறதே இல்லையா? உனக்குக் காதலும், கல்யாண ஆசையும், விருப்பமும் இல்லேன்னால்... எல்லோருமே உன்னைப்போல சாமியாரா விரதம் இருக்கணும்ன்னு எங்களுக்கெல்லாம் தலையெழுத்தா? நீதான் வாழ்க்கையை ரசிக்கத் தெரியாதவள்! ஆசையோடு வாழவும் தெரியாதவள்! மத்தவங்களாவது சந்தோசமா இருக்கட்டும்ன்னு எண்ணாமல்... ஏன் அடுத்தவர்களைப் பார்த்து பொறாமைப் படுகிறாய்! நான் யாரோட வேணும்ன்னாலும் பேசுவேன்! என் இஷ்டம்!"

"ஆபீஸ் நேரத்துல ஆபீஸ் வேலையைப் பார்க்கணும்! இடைவேளை முடிஞ்சி பத்து நிமிடம் கழிச்சு வரீங்களே!



உங்களுக்கு மனசாட்சி இல்லையா? வாங்கற சம்பளத்துக்கு ஏமாற்றாம உழைக்கணும்ன்னு தெரியாதா? சிரிப்பும், வேடிக்கையும் இங்கே வச்சிக்கக் கூடாது!"

"பின்னே எங்கே வச்சிக்கட்டும்?" கௌதம் கேலியாய் கேட்க...

"என்னைக் கேட்டா?"

"சட்டம் போடறவத்தானே சொல்லணும்! சாயங்காலம் பார்க்குல, ஹோட்டல்லன்னு பேசவாவது அனுமதி உண்டா? இன்னைக்கு சாயங்காலம் கொஞ்சம் பர்மிஷன் வேணும்! மஞ்சு ஷாப்பிங் போகணும்ன்னு சொன்னாள்!"

"மாலையா? ஓ... நோ! நிறைய வேலையிருக்கு!"

"நீ என்ன ஆபீஸ் நடத்தறியா? இல்ல சர்வாதிகார ஆட்சி பண்றியா? சாதாரண பெண்ணா? இல்ல சர்வாதிகாரி ஹிட்லர், முசோலினியோட அடுத்த வாரிசா? ம்? நான் யாரை வேணாலும் காதலிப்பேன்! அதைக் கேட்க நீ யார்? மஞ்சுவோட அக்காவைக் கூட கல்யாணம் பண்ணிட்டு நிற்பேன்! யார் கண்டா!"

கௌதமின் வார்த்தை அவளுள் இடியாய் இறங்க... மிரட்சியுடன் பார்த்தாள்.

"நாளைக்கு ஒரு லிஸ்ட் தரேன்! உன் ஆபீஸ்ல, எஸ்டேட்ல, ரிசார்ட்ல, வீட்டுலன்னு வேலைப் பார்க்கிற லவ்வர்ஸோட லிஸ்ட்! என்னைக் கண்டிக்கறாப்போல அவங்களையும் கண்டிக்கணும்! புரியுதா ஜான்சி ராணி? உனக்குப் போய் சம்யுக்தான்னு அழகான பேர் வச்சி... பேருக்கே களங்கம் பண்ணிட்டார் அங்கிள்! ச்சே... நீ மனுசங்களே இல்லாத இடத்தில் இருக்க வேண்டியவள்!" அவள் முன்பு கத்திவிட்டு... கதவைத் திறந்து புயலாய் சென்றான். பின்...

சம்யுக்தாவினுள் ஒரு சலனத்தை ஏற்படுத்தி விட்ட மிதப்பில் அழகாய் புன்னகைத்துக் கொண்டான்.

'இந்த சலனம் அவனுக்கு சாதகமாய் அமையும்' என்ற நினைப்பில் மண் விழப்போவது தெரியாமல்.

## 16

மஞ்சுவின் அக்காள் ''எனக்கு திருமணம் சம்யுக்தா! மாப்பிள்ளைப் புதுச்சேரிதான்! உங்களுக்குக்கூடத் தெரியும்! இனி வேலைக்குப் போக வேண்டாம் என்று சொல்லி விட்டார்! நான் நாளை முதல் வேலைக்கு வர மாட்டேன்! வரேன்!'' என்று சொல்லி சென்றுவிட....

சம்யுக்தா கூண்டுக்குள் அலையும் புலியாய் காத்திருந் தாள். 'இரவு எட்டு மணிக்கு எதற்கு வரச் சொல்கிறான்! இப்போது தானே மதுவிற்கு பாடம் சொல்லிக் கொடுத்து விட்டு... திரும்பினேன்! அதற்குள் என்ன அவசரமாய் இருக்கும்' என்று பதறி ஓடிவர... தீ ஜ்வாலையாய் எரியும் கண்களுடன் காத்திருந்தாள்.

கௌதம் உள்ளே நுழைய... அவன் சட்டையை கொத்தாய் பிடித்துக் கொண்டாள்.

''என்கிட்ட உருகி உருகி காதல் வசனம் பேசிட்டு... மஞ்சுவோட சுத்தித் திரிந்து கூத்தடிச்சிட்டு... கடைசியில மஞ்சுவின் அக்காவோடு திருமணமா? நான் இதைவிட மாட்டேன்! என்ன நெஞ்சழுத்தம்? பொம்பளைங்க என்ன



கிள்ளுக்கீரையா? ஒவ்வொருத்தரா ஏமாத்திட்டு... கடைசியில ஒருத்தியை கட்டிடுவீங்களா? இங்கேயே இந்த குறைந்த நாளிலே இப்படின்னா... புதுச்சேரியில உங்ககிட்ட ஏமாந்த பொண்ணுங்களோட லிஸ்ட் நீளுமே! இதுக்கெல்லாம் பதில் சொல்லாமல் உங்களை கல்யாணம் பண்ணிக்க விடமாட்டேன்! நல்லவனா வேஷம் போட்டு நடிச்சீங்களா?'' பூகம்பமாய் தாக்கினாள்.

''விடு... விடுடி... சட்டையில இருந்து கையை எடுடி! சொல்லிட்டே இருக்கேன் கேட்காமல்...'' என்று அவன் கையை பிரித்துவிட முயற்சிக்க... அவள் வலுவாய் இழுக்க... இந்தப் போராட்டத்தில் ரெண்டு பட்டனே பிய்ந்து விட்டது சட்டையில்!

''ஏய் ராட்சசி... வெறிபிடிச்சவளே... உன்னால பட்டனே பிஞ்சி போயிடிச்சி! கல்யாணம் எனக்குன்னு யார் சொன்னா?'' அலட்சியமாய் கௌதம் கேட்க...

''பின்னே கட்டிக்கப்போற மாப்பிள்ளை புதுச்சேரின்னு மஞ்சுவோட அக்கா சொன்னாளே!''

''அங்கிளுக்கு ட்ரீட்மெண்ட் கொடுக்க அப்பப்போ இங்கே வந்துட்டுப் போறானே பிஸியோதெரபிஸ்ட், என் நண்பன்... அவனுக்கும், அவளுக்கும்தான் மேரேஜ்! விஷயம் போதுமா? இப்போதாவது சட்டையை விட றியா? இவ்வளவு ஆசையும், பாசமும், காதலையும் வச்சிட்டு நடிக்கறியேடி, பாவி!'' என்று கௌதம் ஆதங் கத்தோடு கேட்க...

''எனக்கு காதலா? என்ன உளர்றீங்க? மஞ்சு வாழ்க்கை பாழாகக் கூடாதுன்னுதான்!''

''ஆஹா... அவள் வாழ்க்கைப் பாழாகப் போனால்... அவள் இல்ல என் சட்டையைப் பிடிச்சி கேள்வி கேட்கணும்! நீ கேட்டா?''

"என்னுள் காதலெல்லாம் இல்லே!" மறுக்க...

"ஆனந்தோட உனக்கு நடந்த கல்யாணம்... இறைவன் தவறாப் போட்டுட்ட முடி! அதான் அவன் உன்னோடு வாழாமல் போயிட்டான். அதுவுமில்லாமல் காதலே இல்லாத கல்யாணம் நிலைச்சி நிற்கலே! என்னைப் பார்த்த பின்புதான் உனக்கும் காதல் உன்னுள் மலர்ந்தது."

"இல்லே... இல்லே!" கண்கள் தளும்பியது.

"நான் பார்க்காதப்ப காதலோடு கூடிய உன் பார்வை என்னைத் துளைக்கும்! எத்தனையோ முறை காதலோடு கூடிய உன் கள்ளப் பார்வை என் முதுகை துளைத்து... என்னுள் இறங்கி இருக்கு! என்னைத் தீண்டி சிலிர்க்க வைக்கும் தென்றலான... மயிலிறகு பார்வை எனக்கு பரிச்சயம் சம்யுக்தா! பொய் வேணாம்!"

"ஸ்டுப்பிட்...! ஸ்கௌண்ட்ரல்...!"

"நான் உன்னுள் ஆழமாய் விதைக்கப்பட்டு விட்டேன்! என் உயிர் நீ! என் உடல் நீ! எல்லாமும் நீயே! சர்வமும் சம்யுக்தா மயம்!"

"பூ... பூ..." திட்ட வார்த்தைக் கிடைக்காமல் தடுமாறினாள்.

"உன்னுள் காதலையும், காமத்தையும் மீட்டிய முதல் ஆள் நான்தான்!"

"என்டா கண்ட மேனிக்கு பேசறே? பொறுக்கி! எனக்கு உன் மேலான காதலெல்லாம் இல்லே! என்னுள் இருந்த மென்மையான உணர்வு, காமம் எல்லாமே எப்போதோ செத்துப் போச்சு!"

"உன்னுள் காமம் இல்லேன்னால் எப்படி நம்ப? இருபத்தாறு வயது இளங்குமரி! இப்படிப் பேசினால் நம்புவதற்கு... பழங்கால குடுமி வச்ச ஆசாமியில்லே நான்!"



"நிஜம்! நிஜமா கௌதம்! ப்ளீஸ்... என்னைப் புரிஞ்சிக்கங்களேன்!"

சுற்றும் முற்றும் பார்த்தான். அறையும் தாழ் போட்டு இருக்க... அவளருகே சென்றான்.

"என்ன? என்ன? கிட்டே வராதீங்க!" அவள் பின் வாங்க... அவன் முன்னேறினான். "சின்ன டெஸ்ட் செய்து பார்த்துடலாம்! என்னடா சம்யூ?" என்று கொஞ்ச...

"டேய் மடையா... கிட்டே வராதே! விளைவுகள் விபரீதமா இருக்கும்!" கையாட்டி மறுக்க...

"என்ன? என்ன செய்வடி? விட்டா ஓவராப் போறியே!" நெருங்கி வந்து... சட்டென்று இழுத்து இறுக்கி அணைக்க... அவள் அவனிடமிருந்து விலக போராட... அவன் சட்டென்று குனிந்து அவள் உச்சந்தலையில் முத்தமிட்டு... பின் கன்னம், நெற்றி, மூடிய இமை என முத்தமிட்டு முன்னேற... முதலில் திமிறியவள்... திணறியவள்... பின் தொய்ந்து, குழைந்து, குளிர்ந்து, உருகி... அவன் கைகளில் பூமாலையாய் துவண்டாள்.

அவன் அவள் இதழ் தேடி... இதழால் அணைத்து... துவைக்க... இதுவரை வைத்திருந்த பிடிவாதம், முரட்டுக் குணம், வீராப்பு அத்தனையும் விடுத்து... அவன் கொடுத்த முத்தத்திற்கு ஆசையாசையாய் சம்யுக்தாவும் திரும்ப முத்தமிட...

இந்த நிலை நீடிக்கவிடாமல்... கௌதம் சட்டென்று அவளை விலக்கி நிறுத்தி... ஆழமாய் அவளை ஊடுருவிப் பார்க்க... சம்யுக்தா மன்மதப் போதைக் கலைந்து...

தன் ஆற்றாமையை... அவமானத்தை நினைத்து அதிர்ந்து கத்தினாள்.

"பொறுக்கி, போக்கிரி!" அவன் நெஞ்சில் பலமாய் குத்தினாள். "சிவனேன்னு இருந்தவனை சீண்டி வேடிக்கைப் பார்க்கறீயா? ச்சே... உன் புத்தி கேவலம்! ஒரு பெண்ணை மயக்க சிரித்து, பேசி, கொஞ்சி, கெஞ்சி பார்த்தாய்! எதிலும் மசியாமல் போக... உன் ஆண்மையைக் காட்டி... என் பெண்மையை சீண்டிவிட்டு கேவலப்படுத்தறீயா?"

"ஏய் சம்யுக்தா... இங்கே பார்! உனக்கு என் மேல காதலும் இருக்கு! ஆசையும் இருக்கு! மூடி மூடி மறைச்சே தேபாடி உன் மனசை... உன் உடம்பைன்னு காட்டித்தான் இந்த அளவு இறங்கினேன்! இதுவரை உன் அனுமதியில்லாமல் உன் விரல் நகத்தைக்கூட தொட்டிருப்பனா?"

"பணக்காரி கிடைக்க... கொஞ்சம் நல்லவன் போல வேஷமும் போட்டாத்தான் உன் ஜம்பம் பலிக்கும்ன்னு நடிச்சே நீ" குற்றம் சாட்ட... கோபமானான்.

"ஏய் உன்னைப் பார்த்த நொடி நீ பணக்காரியா ஏழையா? மணமானவளா? மணமாகாதவளா? எதுவுமே தெரியாது! நீ கண்ணைத் திறந்து முழுங்கிடறாப்போல பார்த்தே பார் ஒரு பார்வை! அப்போ விழுந்துட்டேன் உன் கண்விழியில! என் மனசு இவ... இவதான் உன் ரோஜான்னு சொல்ல... எனக்கு உன் மேல் காதல் வந்துடுச்சி! அப்போ எனக்கு தெரியுமா பணக்காரின்னு?"

சம்யுக்தா மௌனமாய் நின்றாள்.

"உன் பணம் யாருக்குடி வேணும்? இந்த நிமிடம் எல்லாத்தையும் அநாதை ஆசிரமம் எதுக்காவது எழுதி



வச்சிட்டு... கட்டின துணியோட வாடி! உன்னை மனப்பூர்வமா மணந்து... உன்னை என் கண்ணுக்குள்ள வச்சிப் பார்த்துக்கிறேன்! ஏண்டி என்னை புரிந்து கொள்ளாமல் இம்சிக்கிறாய்! உன்னைத்தாண்டி நேசிக்கிறேன்! உன் பணத்தை இல்லடி! என் நெஞ்சக்குள் உன் மேலான காதல் பெருகி... பெருகி... என் நெஞ்சே வெடிக்கறாப்போல வேதனையா இருக்கு! ஏண்டி பிசாசே கொல்றே! என்னை இப்படி புரிந்து கொள்ளாமல் தண்டிக்கும் பாவி நீ ஒருத்திதாண்டி! என் மது, அங்கிள், ஆன்ட்டி... என எல்லோருமே என்னைப் புரிஞ்சிகிட்டாங்க! உனக்கு நடந்த அநியாயத்தையே நினைச்சி... என் காதலுக்கு நீ வைக்கணுமா? என் காதலுக்கு எதிரி... என் காதலியே! எங்கேப் போய் முட்டிட்டு சாவறதுன்னே தெரியலே!"

சம்யுக்தா மிரட்சியுடன் பார்த்தாள்.

"காதலிக்கற பெண்ணை சிறகு முறித்து... சின்னாபின்னமாகக் கூடாதுன்னு பார்க்கிறேன்! நான் நேசிக்கிற குழந்தையோட தாயுன்னும் பார்க்கிறேன்! நான் மட்டும் கருணையை அடகு வச்சுட்டு நிமிர்ந்தேன்னால் என் தாக்குதலுக்கு நீ தாங்க மாட்டேடி!"

பின் காதல் வழியச் சொன்னான்.

"உன்னைக் கண்டதே வரம்ன்னு நான் நினைச்சிட்டு இருக்கேன்! நீ எனக்கு வேணும்! என் காதலியா... என் மனைவியா! நீயும், மதுவும் இல்லாமல்... நிஜமா ஒரு நாள் நெஞ்சு வெடிச்சே செத்துடுவேன்!"

"காதலை மிரட்டி திணிக்கப் பார்க்கறீங்களா?"

"காதல் கெஞ்சிப் பெறுவதோ... கேட்டுப் பெறுவதோ... மிரட்டிப் பெறுவதோ அல்லன்னு தெரியா முட்-

டாவில்லே நான்! என் காதல் நிஜம்! என் காதல் நிஜமானால்... சக்தி வாய்ந்ததானால்... ஒரு நாள் கட்டாயமாய் நீ எனக்குக் கிடைப்பாய்! உனக்காக... காத்திருக்க தயார்டி! உன் மௌனம் கலைய... எத்தனை நாளானாலும் காத்திருக்க தயார்! எத்தனை மாதங்கள்... எத்தனை வருடங்கள்... எத்தனைக் காலங்கள்... எத்தனை யுகங்கள்! எத்தனை ஜென்மமானாலும் நான் காத்திருப்பேனடி, கண்ணம்மா! இந்த உடலை இன்னொருத்தி தொடாமல்... புனிதமா போற்றி... இந்த சம்யுக்தாவிற்காக காத்திருப்பேன்! இனியும் இங்கே வேலை செய்ய விருப்பமில்லே!"

கௌதம் சொல்ல உயிர் போனாற்போல... அவனைப் பார்த்தாள்.

"என்னைக் கண்டால் இந்த மடையன் எப்போ கட்டிக்குவானோ... எப்போ வெறியோட அணைச்சி முத்தமிட்டுடுவானோன்னு... என்னைப் பார்த்து ஒவ்வொரு நாளும் பயந்து சாவே! உனக்கு என் காதல் புரியும்போது... வரமாய் எனக்குக் கிடைப்பாய்! அதுவரை என் தேவதை வருவாள் என்று தவமிருப்பேன்! நான் வரேன்! புதுச்சேரிப் போறேன்!"

"உன்மேல் அளவு கடந்த காதல் கொண்ட பாவத்திற்காக எனக்கு பரிசாகவும்... உனக்கு தண்டனையாகவும்... உன் பட்டுக் கன்னத்தில் ஒரே ஒரு முத்தம் மட்டும்! ப்ளீஸ்..." எதிர்பாராத தருணம் இழுத்து அணைத்து முத்தமிட்டு விலகிச் சென்றான், கௌதம்.

பொத்தென்று படுக்கையில் விழுந்து... நெஞ்சே வெடித்து விடும் அளவு... மார்பில் அடித்துக் கொண்டு அழுதாள்.



# 17

கௌதம் கோபத்தோடு வண்டியை கிளப்பிக் கொண்டு... இரவென்றும் பாராமல் வேகமாய் சென்றான். கோபம், ஆத்திரம், ஏமாற்றம், சுய பச்சாதாபம் என்று கலவையாய் அவன் மனதிற்குள் கொதித்துக் கொண்டிருந்தது. சாலையில் வண்டியை வேகமாய் விட்டவன் ஒரு திருப்பத்தில்... நிதானித்து போகாமல்... எதிர்க்க வந்த லாரியையும் கவனியாமல்... நேரே கொண்டு போய் லாரியில் விட... அந்த லாரிக்காரன் விபத்தினைத் தடுக்க எவ்வளவு முயற்சித்தும்... விபத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

லாரியில் மோதி... தூக்கி எறியப்பட்டு... மண்டை உடைந்து... ரத்தம் ஆறாய் ஓடியது. மது கேட்டால் என்று ஆசையாசையாய் வாங்கிய வண்டி உருவில்லாமல் அப்பளமாய் நொறுங்கி விட்டது.

நகரின் மையப் பகுதியில் நடந்ததால் உடனடியாய் 'அன்பு மருத்துவமனை'யில் சேர்க்கப்பட்டான். ஏற்கனவே டாக்டர் அன்புவுக்கு கௌதம் அறிமுகமானவன் என்பதால்... உடனடியாய் அவசரப் பிரிவில் சேர்க்கப்பட்டான்.

சம்யுக்தாவிற்கு தகவல் போய்... சம்யுக்தா, நடராஜன், மலர்விழி மூவரும் அலறியடித்துக் கொண்டு வந்து சேர்ந்தனர்.

நிறைய ரத்தம் சேதமாகிவிட... அவன் ரத்த குரூப் அரிதானதாய் இருக்க... ரத்த வங்கியில் ஸ்டாக் இல்லை.

சம்யுக்தாவிற்கு அதே வகை ரத்தம்! நிறைய கொடுத்தாள்.

ஊட்டியில் கிடைக்காத மருந்து, மாத்திரைகளை சென்னை, பெங்களூர் போன்ற முக்கிய நகரங்களில் இருந்தும்... அரிதான, இங்கே கிடைக்காத மருந்துகளை அமெரிக்காவிலும், லண்டனிலும் இருக்கும் வர்த்தகஸ்தர்களுடன் தொடர்பு கொண்டு... விமானத்தின் மூலம் எடுத்து வரச் செய்து... உரிய நேரத்தில் மருந்து, மாத்திரைகளை தருவித்துக் கொடுத்தாள்.

பசி, தூக்கம், தாகம், அத்தனையும் மறந்து கண்ணாடி கதவுக்கு வெளியே தவமாய் தவமிருந்தாள், நின்ற காலிலேயே!

சம்யுக்தா ஊமையாய் அழுதாள். அவளால் தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்தாள்... தத்தளித்தாள்... தடுமாறினாள்.

'கௌதம்... ஏய் மடையா...! இவ்வளவு சித்ரவதையைக் கொடுத்து வதைக்கிறாயேடா! என்னை விட்டு பிரிந்து போவதில் அவ்வளவு விருப்பமா? என்னுள் காதலை ஏற்படுத்திவிட்டு... நீ மட்டும் எங்கே போகப் பார்க்கிறாய்? என் நேசிப்புக்கு உரிய முதல் ஆம்பளையும்... கடைசி ஆம்பளையும் நீதானடா!'

'என்னுள்ளத்தை வெளிப்படுத்த எனக்கு தயக்கம்! என் மனதை உன்னிடம் திறந்து காட்ட தைரியமும் இல்லையே!'

'என்னுயிரே... உன்னை நானே கொல்லப் பார்த்தேனே! டே பொறுக்கி... பிழைத்து எழுந்து வாடா! என்னிடம்



சிரிக்க சிரிக்கப் பேசவாயே... அவ்வாறு பேச வருவாயா, கண்ணா! தென்றலாய்... உன் பார்வையில் ஸ்பரிசிக்க வருவாயா?'

'உன்னை நானும் நேசித்தேன்டா, கண்ணா! என் நேசத்தையும், காதலையும் என்னுள்ளே குழி தோண்டி புதைத்து வாழ எவ்வளவு கஷ்டப்பட்டேன், தெரியுமா?'

'நீ அடுத்தவளிடம் சிரித்துப் பேசினால்... என்னுள் எரிமலையாய் கோபக் கங்குகள்! ஏன்...? எல்லாம் நான் உன்மேல் வைத்தக் காதலால்தான்! என்னுடையவனை எவளாவது களவாடி விடுவாளோ என்று நிறையவே பயந்தேன்!'

'அந்த ஆனந்த் என் வாழ்க்கையில் வருமுன்... நீ வந்திருக்கக்கூடாதா?'

'அந்த கயவன்... என் சிறகுகளை எல்லாம் வெட்டி... பறக்க முடியாமல் போட்ட பின்பு ஏன் வந்தாய்! நீ என் வாழ்க்கையில் முதல் முதலாய் வந்து இருந்தால்... எனக்கு இத்தனை துன்பமும், துயரமும், வேதனையும், வெறுப்பும் வந்திருக்காதே!'

'என் வாழ்க்கையும் பன்னீரோடையாய் மணத்து சலசலத்து ஓடியிருக்குமே!'

'எனக்காக பிறந்த நீ இத்தனை நாளாய் எங்கிருந்தாய்...?'

கண்களில் கண்ணீர் வெள்ளமாய் அலைப்புரண்டு ஓடியது.

இரண்டு நாட்கள்... டாக்டர்களின் கடும் உழைப்பாலும், சம்யுக்தாவின் கடும் தவத்தாலும் கௌதம் மெல்ல கண் விழித்தான்...

"அப்பா... கடவுளே! எங்களின் நீண்ட போராட்டத்திற்கு பலனாய் பிழைத்து விட்டார் சம்யுக்தா! இனி பயப்படத் தேவையில்லை!" என்று கூறி டாக்டர் வெளியேறினார்.

கண்ணைத் திறந்து நடராஜன், மலர்விழி, மது என ஒவ்வொருவராய் பார்த்தவன்... கடைசியாய் சம்யுக்தாவைக் கண்டதும்... கண்களை மூடிக்கொண்டான்.

சம்யுக்தா நொறுங்கி விட்டாள். முந்தானையை வாயில் பொத்தி சத்தம் வராமல் அழுதாள்.

'தங்களுடைய மகள் மனம் மாறி விட்டாள்' என்று ஒரு புறம் மகிழ்வைத் தந்தாலும்... மறுபுறம் கௌதமுக்காய் ரொம்பவே வருந்தி நொந்துப் போனார்கள்.

மதுவை தேற்ற ரொம்பவே சிரமப்பட்டனர்.

நான்கு நாட்கள் கழித்து மெல்ல எழுந்து அமர்ந்தான்.

அன்று கௌதமுக்கு பிறந்த நாள்!

மது நீட்டிய ரோஜாவை வாங்கிக் கொண்டவன்... சம்யுக்தா நீட்டிய பூங்கொத்தை நல்லப் பிள்ளையாய் வாங்கி... வேகமாய் ஆத்திரம் கொண்டு தூக்கி எறிய... அந்தப் பூக்கள் ஒவ்வொன்றாய் சிதறி சம்யுக்தாவைப் பார்த்து மெல்ல கண் சிமிட்டி நகைத்தது.

சம்யுக்தா கண்ணீரோடு மெல்ல அமர்ந்து ஒவ்வொன்றாய் பொறுக்கி எடுத்தாள்.

கொஞ்ச நேரத்தில் "பிறந்த நாள் வாழ்த்துக்கள் தம்பி!" என்று நடராஜன் வந்து நிற்க... பின்னாடி மலர்விழி வந்து நின்றாள்.

"நான் என் பிறந்த நாளை கொண்டாடறது இல்லே அங்கிள்! நான் பிறக்க... என் அம்மா இறந்து விட்டாள்!



நான் ஜனித்த நேரம்... என் அம்மாவின் மரண நேரம்! பிறப்பிலேயே என் தாயை முழுங்கியவன்! என் தாய்... என்னை அநாதையாய்... இப்புவியில் விட்டுச் சென்ற நாள்! அதை எப்படி கொண்டாடி மகிழ்வது, அங்கிள்? என் அம்மா மட்டும் இருந்திருந்தால்... ஐயோ அம்மா... அம்மா..." அருகிலிருந்த பர்ஸ் பிரித்து... அதிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து முத்தமிட்டு... குலுங்கிக் குலுங்கி அழுதான்.

"என் அம்மா லட்சுமி..." என்று கௌதம் விரிட...

நடராஜன், மலர்விழி, சம்யுக்தா மூவரும் அவன் அழுகைக் கண்டு துடித்து விட்டனர்.

கௌதம் கையிலிருந்த போட்டோவை வாங்கி பார்த்த மூவரும்... கண்கள் மலர... கண்களாலேயே ஏதோ பேசிக் கொண்டனர்.

சம்யு... சம்யூம்மா... என்று நொடிக்கு ஒரு தரம் கூப்பிட்டு... கொஞ்சிய... உயிர் உருக அழைத்த... பழைய கௌதம் அவன் இல்லை!

எந்த நேரமும் தீ சுவாலையாய்... எரியும் கண்களோடு முறைத்த... பழைய சம்யுக்தா அவளும் இல்லை!

இருவரும் மாறி விட்டனர்!

'அவள் புயலாய் இருந்து... இப்போது பூவாயும்...'

'அவன் தென்றலாய் இருந்து... இப்போது எரிமலையாயும்...'

இருவருமே புரியாத மௌனத்திலும்... கோபத்திலும் நாட்களைக் கழிக்க...

அவனுடைய ஒவ்வொரு சொற்களும்... பூகம்பமாய்... சுனாமியாய்... சூறாவளியாய் அசைத்துப் பார்த்தாலும்... சம்யுக்தா மென்மையான புன்னகையோடே... அகலுவாள்!

'அவனின் மாற்றம் அவனுக்கு ஆச்சரியம்!'

'அவனின் மாற்றம் அவளுக்கு அதிர்ச்சி!'

நடராஜன், மலர்விழி தாங்கு தாங்கென்று தாங்கினர். மலர்விழி ஒருபடி மேலேப் போய்... முழு நேரமும் அவனோடே ஆஸ்பத்திரியில் இருந்தாள்.

சம்யுக்தா காலையும், மாலையும் வந்து பார்ப்பாள்.

அன்று...

சம்யுக்தா சாத்துக்குடியை சாறு பிழிந்து... பாசமுடன் நீட்ட...

"எனக்கு இது வேணாம்! உன் கையால் ஒரு துளி விஷம் கொடு! எனக்கு இப்போ விஷம்தான் தேவை! அதுவும் உன் கையால் வாங்கிக் குடிச்சிட்டு நிம்மதியாய் போய் சேரனும்!"

சம்யுக்தா பரிதாபமாய்... மௌனமாய் அவனை நோக்க...

"என்னை கொன்னுடு! எதுக்கு என்னைக் காப்பாத்தினே? என்னை மீண்டும் அணுவணுவா உயிரோடு சாகடிக்கவா?

"என் உடம்புல... என் ரத்தத்தோட உன் ரத்தமும் கலந்து ஓடுத்தான்... நான் உயிரோடு இருக்கேனா? உன்னால் கிடைத்த இந்த உயிர் வேண்டாம்! எனக்கு உயிர் கொடுத்த நீயே... இந்த உயிரையும் எடுத்துடு! ராட்சசி... என் அப்படிப் பார்க்கிறே?" கௌதம் கத்த...

சம்யுக்தா உதடு பிரியாமல் சிரிக்க...

"எனக்குப் பிரமையா? இல்ல நிஜமா? சிரிச்சயா? என்னைப் பார்த்து சிரிச்சயா? என் கோலம்... என் புலம்பல்... எல்லாம் உனக்கு சிரிப்பா இருக்கா? எவ்வளவு



திட்டினாலும்... உனக்கு கோபமே வராதா? நிஜமாவே நீ பழைய சம்யுக்தாதானா? ஜான்சி ராணியா... என் கண் முன்னே வலம் வந்த சம்யுக்தாநீ இல்லேதானே! நீ அவளோட நகல் தானே? ம்?"

அவள் சிறு குழந்தைக்கு புகட்டுவது போல... கௌதமை மடியில் போட்டு... கட்டாயப்படுத்தி அந்த பழச்சாறை குடிக்க வைப்பாள்.

"என் மேல் உனக்கு எதுக்கு அவ்வளவு அக்கறை? கரிசனம்? நீ வேணாப் பாரு... அடுத்ததா நிஜமாவே ரயில் தண்டவாளத்துல தலையை வச்சிப் படுத்துக்குவேன்!"

அவள் எதுவுமே பேசாமல்... ஈரத் துண்டு கொண்டு வாயை துடைத்துவிட்டு... வீட்டுக்கு கிளம்பினால்...

"நீ போ... நான் சிஸ்டர் கொடுக்கற மருந்து, மாத்திரையை எல்லாம் குடிக்கவே மாட்டேன்!"

அவள் காத்திருந்து நர்ஸ் தரும் மருந்துகளை புகட்டி விட்டுச் சென்றாள்.

"என்னைப் பிடிக்காதவள்... எதுக்கு விழுந்து விழுந்து கவனிக்கனும்! பலி போடுவதற்கு முன்பு கசாப்புக்கடைக்காரன்... ஆட்டை கவனிக்கறாப்போல! என்னைப் பிடிக்கலே! காதலெல்லாம் உங்கமேல இல்லன்னு சொல்லி... மீண்டும் என்னை பலியிடவா? நாளையில் இருந்து நீ இங்கே வரக்கூடாது!" திடமாய் பேச...

மறுநாள் வேண்டுமென்றே சீக்கிரம் வந்தாள்.

"என் கோபத்தை சீண்டவே வரியா?" சீற...

அவள் கண்டு கொள்ளாமல் சட்டைப் பட்டனை கழற்ற...

"எதுக்குடி என் சட்டையைக் கழற்றறே? என் பொண்டாட்டியைத் தவிர... எவளுக்கும் என் உடம்பு காட்டமாட்டேன்! போ... போ!" அவன் திமிறத் திமிற சட்டையை கழற்றினாள்.

ஈரத்துண்டு கொண்டு உடம்பை துடைத்தாள்.

கௌதம் உடம்பு குணமாகி வீடு வந்தபோது அவனுக்கு ஆச்சரியம் காத்திருந்தது.

# 18

சம்யுக்தா வீட்டு பூஜையறையில் அவனுடைய அம்மாவின் படத்திற்கு பொட்டு வைத்து... புது ரோஜா மாலை சூடி வைக்கப்பட்டிருந்தது.

"என் அத்தை... என் அத்தை லட்சுமி தேவியின் பிள்ளைத்தான் நீங்க!" என்று சம்யுக்தா மணப் பெண் கோலத்தில் அவனருகில் வந்து சொல்ல... பின்னர் அவனுக்கு நடந்ததெல்லாம் கனவுபோல இருந்தது.

பட்டு வேட்டி, பட்டு சட்டை அணிவித்து... அவன் சம்யுக்தாவைக் கண்ட முருகன் கோவிலுக்கு அழைத்துச் சென்று... மணவறையில் அமர்த்தி... ஐயர் தாலி எடுத்துக் கொடுக்க... உச்ச கட்ட சந்தோஷத்தில் கண்கள் கலங்க... சம்யுக்தாவின் அழகான சங்கு கழுத்தில் தாலி கட்ட... சம்யுக்தாவின் பார்வை ரோஜாவாய் வருட... அப்படியே சிலிர்த்துப் போனான்.



முதலிரவு அறை!

இத்தனை எளிதாய் சம்யுக்தாவை மணப்போம் என்று கனவிலும் நினைக்கவில்லை கௌதம். நினைக்க நினைக்க ஆச்சரியமே மிகுந்தது.

தன் எதிரில் தாய் மாமன் மகளாய்... வீற்றிருந்த அவனுடைய அழகான சம்யுக்தாவையே வைத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் "என்ன?" என்று புருவம் தூக்கி... கண்களால் பேச... அந்த அழகில் சொக்கிப் போய்விட்டான், கௌதம்!

"சம்யூ... சம்யுக்தாம்மா... நிஜம்தானா? என் பொண்டாட்டி நீதானா? என்னால் நம்பவே முடியவில்லை, கண்ணம்மா! என்னையும், என் காதலையும் புரிந்து கொள்ளாமல் தவிக்க விட்டவள்... இப்படி மடியில் போட்டு மருந்து புகட்டுகிறாளேன்னு நிறைய நாள் ஆச்சரியப்பட்டு குழம்பிப் போனேன்! உன் மேல் இந்த அளவு ஆழமான காதலும், விருப்பமும், நேசமும் ஏற்பட... உன்கிட்ட என் அம்மாவின் ஜாடையும் இருந்தது தான்! தினமும் உன்னையும், என் அம்மாவைப் போட்டோவிலும் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்! உங்களின் உருவ ஒற்றுமை என் புத்தியில படலியே!"

"நீங்க சொல்லும் வரை... எங்கள் வீட்டு பூஜையறையில் ஒருபுறமாய் என் அத்தையின் படம் மாட்டியிருந்தோம்! என் அத்தை இறந்து விட்ட செய்தி உங்கள் மூலம் கேள்விப்பட்ட அன்று அப்பா அழுத அழுகை... கடவுளே உயிர் உள்ளவரை மறக்கவே மறக்காது! 'சம்யுக்தா... உன் அத்தைக்கு பூ வைத்து, பொட்டு வைத்து வணங்கவில்லையே! தோட்டமெல்லாம் மலராய் மலர்ந்திருக்க... அவள் இறந்தது தெரியாமல்... ஐயோ...!' என்று கத்திவிட்டார்." சம்யுக்தா கண்கள் கலங்க...

அறையினுள் நுழைந்திருந்தால்...
"உங்கள் பூஜை அறையினுள் நுழைந்திருந்தால்...
ப்போதோ நீ என் மடியில் கிடந்திருப்பாய் அல்லவா?"
என்று கௌதம் கூறி மந்தகாசமாய் சிரிக்க...

"என் விதியேன்னு... பாவம் அத்தைப் பையன்னு என்
கழுத்தை நீட்டியிருப்பேன்!" என்று சம்யுக்தா விறைப்
பாய் சொல்ல...

"ஏய்.. ஏய்... நிஜமாவா? அப்போ என் மேல் காத
லில்லையா?" என்று கேட்டு... முகம் சிறுத்த கௌதம்...
கோபத்தோடு வேறுபுறம் திரும்பிக் கொண்டான்.

"என் அத்தை பெத்த வீர சிங்கத்துக்கு கோபமா?
அடடா... கோபத்துல என் அத்தான் முகம் வெகு ஜோர்
தான்! இங்கே பாரடா செல்லம்!" முகம் பிடித்துத் திருப்
பினாள்.

"உங்களைப் பார்த்த நொடியே என்னுள்ளும் காதல்
விதைக்கப்பட்டு விட்டது! அன்று கோவிலில் பார்த்
துட்டு பிரியும்போது... இவரை மீண்டும் பார்ப்பேனோன்னு
மனசு அடிச்சிக்கிச்சி! கொஞ்ச நேரத்துல இண்டர்வியூக்கு
வர... என் இதயத்துக்குள் கோடி பட்டாம் பூச்சிகள் வண்
ணச் சிறகடித்து பறந்தது. நான் குடும்ப பூனையென்ப
தால்... இவரும் சிரிச்சி... சிரிச்சி கழுத்தை அறுத்திடு
வாரோன்னு பயந்து தான்... என்னை மறைச்சிட்டேன்!
உங்க மேல் கோபம் காட்ட... ரொம்பவே சிரமப்பட்டேன்!
ஒவ்வொரு நாளும் நீங்க என்னை வென்றுட்டே வர...
எனக்கு என் தோல்வி கண்டு பயம்!"

"ஆனந்த்கிட்ட சென்னையில "என் காதலிடா!"
என்று நெஞ்சை நிமிர்த்தி சொன்னப்போ... அப்படியே
இந்த அழகு முகத்தை ஏந்தி... தைரியமா சொன்ன வாயி



லேயே 'நச்'சின்னு முத்தமிடணும்ன்னு ஆசை வந்தது.
அந்த ஆசையை அடக்க ரொம்பவே சிரமப்பட்டேங்க!"

"அப்புறமா ஆக்ஸிடெண்ட்ன்னதும் துடிச்சிட்டேன்!
உயிர் போயிட்டாப்பலவும்... மூளையெல்லாம் சூன்ய
மாகவும் ஆயிடிச்சி! ஆனால் நீங்க என்னைப் புரிஞ்சிக்
கவேயில்லை!" கண்களில் வலியுடன் சொன்னாள்.

"ஸாரி... ஸாரிடாம்மா!"

"கல்யாணமாகாத பேச்சலரை வாழ்ந்து கெட்டவள்
மணந்து... உங்க வாழ்க்கையை கெடுப்பதான்னும்
என்னுள் அடிக்கடி யோசனை! அதுவும் உங்க காதலை
ஏற்க மறுத்த பலமான காரணம்! என் அத்தை மகன்னு
தெரிஞ்ச பின்னாடி... 'என் அத்தை... அப்பா செய்த
துரோகத்துக்கு... ஆனந்தை அனுப்பி பழி தீர்த்துக்கிட்ட
தாகவும்... எங்களின் கலக்கம்... வருத்தம் கண்டு... தன்
மகனை அனுப்பியதாகவும்... என் அத்தை மகனுக்கு
வாழ்வு கொடுக்க உரிமையும், கடமையும் இருக்குன்னு
இப்போ எந்த குற்ற குறுகுறுப்பும் இல்லே அத்தான்!"

'அத்தான்' என்ற சொல்லில் அகமகிழ்ந்து போனான்.

"நீ இப்படியெல்லாம் நினைக்க... நான் அநாதைன்னு
மறுக்கறீயோன்னு நினைச்சேன்! இல்லாதவன்னும்
பிடிக்கலையோன்னு என்னுள் ஒரே மருகல்!"

சம்யுக்தா அவனை ஆசையாசையாய் கட்டிக் கொண்டாள்.

"ஒரு கெட்டப் பழக்கமும் இல்லாத ஆண் நீங்க!
அதுவும் கம்பீரமும், அழகும் ஒருங்கே இணைந்தவர்!
உங்களை நீங்களே தாழ்த்திக்கலாமா?"

"என்னோட உட்கார்ந்தே சாப்பிடமாட்டாயே!"

"ஐய... எங்கே உங்களை காதலோட நோக்கிடுவ
னோன்னு பயந்துதான் ஓடினேன்! ஒளிஞ்சேன்!"

"என் மாமன் மகள்ன்னு தெரிஞ்சிருந்தால் உன்னிடம் கெஞ்சியே இருக்க மாட்டேன்! பிருத்திவிராஜன் மாதிரி இந்த கௌதம்... இந்த சம்யுக்தாவை தூக்கிட்டுப் போய் தாலி கட்டிட்டு இருப்பேன்!"

சம்யுக்தா அழகாய் கன்னத்தில் குழி விழ சிரிக்க...

"நீ விரும்பலையோன்னு நினைச்சி ரொம்பவே கலங்கி கஷ்டப்பட்டுட்டேன்டா! சம்யூ... சம்யூம்மா... நான் செத்திருந்தால்... உன் அளவுக்கு அதிகமான காதலை... தெரிஞ்சிக்காமலேயே போயிருப்பேனே!"

"கௌதம்..." என்று அலறியவள்... அந்தச் சொல்லைத் தாங்க முடியாமல்... கண்கள் கலங்கி... அழகாய் உதடு நடுக்க... உதடு பிதுக்கி... அழுதவள்... பூவிதழின் கோலத்தை ஏந்தி... ஆசையோடு தன் இதழ்களால் மூடினாள், அவனின் இதழ்களை!

சற்று நேரம் கழித்து...

"சம்யூ... சம்யுக்தாம்மா... இனி காலத்துக்கும் அழக் கூடாது கண்ணே! இந்த அழகான கண்களில் ஒரு நாளும் கண்ணீர் வரவேக் கூடாது, கண்ணம்மா!" அவள் கண்களில் முத்தமிட்டு... காற்றுக்குக்கூட வழியின்றி... கௌதம் சம்யுக்தாவை அணைத்துக் கொள்ள...

குளிர்ந்த தென்றலின் ஜில்லிப்பும்... பனிக்கால மலர்களின் வாசமும்... போட்டி போட்டுக் கொண்டு... ஜன்னல் வழியே உள்ளே புகுந்து... அவர்கள் மேனியில் கோலமிட... சம்யுக்தா நிம்மதியாய்... கௌதமின் நெஞ்சத்தில் சரணடைந்தாள்!

காதலை தன்னுள் போட்டு புதைக்கவோ... மறைக்கவோ முடியாது!